ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1–12
வேளி நாட்டிற்கு ,,	— ,,	4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

ஆசிரியர், ஈ. வெ. இராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஞாயிறு, பிரஜோத்பத்தி ஆனி மீ 21உ (5—7—1931) | மலர் 10

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

பாலர் பரிபாலனம்

ஆசிரியர்—வைத்திய பாஸ்கர

பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள்.

செடி, கொடி, மரம் முதலியவைகள் முளையிலிருந்து வளர்ந்து பயனடைவதற்கு வேண்டிய அனுகூலங்கள் இல்லாவிடத்து அவை செழித்து வளர்ந்து பயனடையாது பட்டழிந்து போவது போல, நடமாடும் மக்களும் முளையிலிருந்தே நல்ல முறையில் வளர்த்தாலன்றி நோயின்றி உடல் நலத்துடனும், பலத்துடனும் நீண்டகாள் உலகில் வாழ வியலாது. சுயராஜ்யம் பெற்று மற்றநாட்டு மக்களுடன் சமத்துவமாக வாழப் பெரிதும் விரும்பும் மக்கள், பாலருந்தும் பாலர் பருவத்திலேயே மக்களை நோயின்றி அயல் நாட்டாரைப்போல உடல் பலத்தோடு வளர்த்தற்குரியவகையைக் கற்கவேண்டும். மற்ற நாட்டினற்கும் நமக்குமுள்ள உடல் பலத்தையும் மனோபலத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கின் இவை விளங்காமற்போகா. இதற்குக்காரணம் நாம் வாழும் நிலத்தியல்பும் வறுமையுமெனச்சிலர் கூறினும் அது முற்றிலும் பொருந்தாது. இதற்கு அறியாமையே முக்கியகாரணமாகும். ஆதலால் மக்களைப் பெற்று வளர்க்கும் ஒவ்வொருதாய்மாருக்கும், பிள்ளைப்பேறு பார்க்கும் மருத்துவச்சிகளுக்கும், ஆஸ்பத்திரி நர்சுகளுக்கும், வைத்திய மாணவர்கட்கும், பொதுவாக ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் இப்பாலர் பரிபாலனம் இன்றியமையாத அரிய நூலாகும். படிக்கும்போது மட்டும் சிறிது மகிழ்ச்சியைத்தந்து வேறுபயன் ஒன்றுமில்லாத பல நாவல்கள், வேடிக்கைக் கதைகளைப் போன்றதல்ல, மனிதப்பிறவியில் அடையவேண்டிய இன்பங்களுக்கெல்லாம் அடிப்படையானது இப்பாலர் பரிபாலனம்.

விலை ரூ. 1—0—0. தபால் சார்ஜ் வேறு.

கேட்லாக்கும் சுகவழியும், இனம்.

தந்திவிலாசம் "மருத்துவன்" சென்னை.
டெலிபோன் நெ. 2584.

தமிழ் வைத்திய சாலை,
221. தங்கசாலை வீதி, சென்னை.

வேளிவந்து விட்டது! வாங்கத்தவராதீர்கள்!!

மூந்துங்கள்!!!

நாளது ஆகஸ்டுமீ த்திற்குள் நடக்கும் பொது எலெக்ஷனுக்கு முன் வாங்குங்கள்!

புதிய பஞ்சாயத்துகளுக்கும், தாலூகா போர்டுகளுக்கும், டிஸ்டிரிக்ட்டு போர்டுகளுக்கும், இவைகளின் மெம்பர்களுக்கும், ஆங்கிலமறியாத பொது ஜனங்களுக்கும் வெகு முக்கியமான

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம்ஹ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

மிகவும் துல்லியமானதும் எளிதில் புரியும் படியான அழகிய தமிழில்

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L., (வக்கீல், அகில இந்தியா லா ஜர்னல் பத்திராசிரியர் திருவல்லிக்கேணி) அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சொற்ப காப்பிகளே எம்மிடம் உள்ளன.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—6—0

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

நிமிஷக்கணக்கில் தணமடைவதைவிட்டு ஏன் கவலைப்படுகிறாய்?

சுவாச காச நிவாரணி.

அனேகர்களான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சேதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கஷ்டசுவாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல் வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்தூரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக் கூடியதின் 1க்கு 1-4-0. தபால் கூலி அணா. 4.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,

அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S. I.

சோல் ஏஜண்டுகள்:—

தாதா & Co., 52 நைனியப்ப நாயகன் தெரு மதராஸ்.

K. S. மேதர & Co., 234, சைனுபஜார் ரோட் மதராஸ்.

வெள்ளச்சாமி, No. 300, சிராங்கூன் ரோட், சிங்கப்பூர்

சுத்தகதர்! உயர்ந்தகதர்!!

நேர்த்தியான கதர்!!!

அகில இந்திய (கதர்) காங்கிரஸ் சங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது. எங்களிடம் கதர் சம்மந்தப்பட்ட எல்லா ரகங்களும் இருக்கின்றன. வெளிநாட்டு ஆர்டர்கள்கிரயம் முழுமையும் அனுப்பினால் கவனிக்கப்படும்.

நா. மு. & ஈ. ரூ. வே. & Co.,

கதர் ஸ்டோர்,

சென்னிமலை ரோடு (S. I. Ry.)

குணமில்லாவிடில் பணம்

வாப்பீஸ் செய்யப்படும்

சித்தரசம்

சகல வியாதிகளுக்கும் உள்ளுக்கும், வெளியிலும் உபயோகிக்க நிமிஷகணக்கில்குணமாகும்

புட்டி 1-க்கு ரூ. 1—0—0

சி. பி. சாமி, சித்தமருந்து

செய்சாலை பழநி S. I.

அரசாங்க இஞ்சினீயர்களில் 14 பேர்களாலும், மற்ற பிறபலர்களாலும் மதிக்கப்பெற்ற

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்".

50 படங்களுடன் 200 பக்கங்களடங்கிய புஸ்தகம் விலை ரூ. 2. தபால் செலவு வேறு. வெளிநாட்டு ஆர்டர்களுக்கு முன்பணம் அனுப்ப வேண்டும். ஏஜண்டுகள் தேவை.

மோட்டார் ஸ்கூல் 1916ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிசம் கற்றுக்கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸும், பாட்சாலை சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,

மைலாப்பூர், சென்னை.

அகத்தியர் ஆராய்ச்சி.

இதுசென்னை இராஜதானி கலாசாலை தமிழ் ஆசிரியரும் கலாவல்லவருமான பண்டிதர் உயர்திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்களால் அனேக நூல்களை ஆராய்ச்சி செய்து பல ஆதாரங்களைக்கொண்டு எழுதப்பட்டதாகும்.

விலை அணா 0—2—0 தான். வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

பகுத்தறிவு விடுதலை.

அல்லது ஜீவாத்மா இல்லை, என்னும், இப்புத்தகம் சிறந்த ஆராய்ச்சி நூலாகும். முன், பின், ஜென்மம், முடப்பழக்கவழக்கங்கள் முதலியன ஆராயப்பட்டிருக்கின்றன. சடங்குகள், அதன் சிலவு, கடவுள் ஆராதனை விக்ரக வணக்கம் முதலியன கண்டிக்கப்பட்டிருப்பதோடு பல ஆதாரங்களினாலும், மேற்கோள்களாலும் விளக்கப்பட்டிருக்கின்றது. சித்திரப்படங்களுடன் 100 பக்கங்கள் கொண்டது.

விலை அணா 6, 7 அணா ஸ்டாம்பு அனுப்புவோருக்கு அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புஸ்தகசாலை, ஈரோடு.

இனிது இனிது, இன்ஜெக்ஷனிலும் இனிது

R. K. பழனிஸ்வாமிகள்

இன்டியன் சக்தி முக்தி ஆயில்.

இவ்வற்புத சஞ்சீவினியை, எந்த ஜீவராசிகளுக்கேனும் உடல் வாதனையேற்பட்ட காலத்தில், டைரக்ஷனில் கூறியவண்ணம் மேல்பிரயோகமாக, சகல வியாதிகளுக்கும் உபயோகிக்க, உடனுக்குடனே நற்குணமளித்து, ஆபத்ரக்ஷனைப்போல் நன்கு குணப்படுத்துவதால் ஒவ்வொரு குடும்பத்தினிலும் பல ஆபீஸ், மில்கள், பற்பல இஞ்சின் சகலடிரைவர்களிடமும், மிஷின்கள் ஓட்டுமிடங்களிலும், நானுவித ஆயுதங்கள் புழங்கும் இடங்கு, பட்டரை, ஒர்க்ஷாப், முதலானவிடங்களிலும், பல மிருக ஜாதிகளிடம் பழகுபவர்களிடமும், காடுகரை, தோட்டம், மலை, மரம், மண், சுவலோக சுவரத்தினுதிவுபரசக்தனிகளில் தொழில் புரிபவர்கள் முதலான மகாஜனங்கள் ஒவ்வொருவர்களிடமும், முக்கியமாய் இத்தைலமிருக்குமாகுல், உலகத்தில் பம்பரம்போல் சுழன்றோடி ஓடிக்கொண்டிருக்கும் பற்பல அபாய விபத்துகளின் இம்சைகளினின்றும் பல அபமிர்த்துக்களினின்றும், சில கன்ம நோய்களினின்றும் விஷக்கடி, வெட்டுக்காயம், ரண வியாதிகளினின்றும் மீட்கப்படலாமென்பது மிகவும் உறுதி. இதின் முழு விபரங்களைப்பற்றிய நமது சேட்லாக் மூலமாய் சகல உண்மைகளும் அறியலாம். சேட்லாக் இலவம்.

1 அவுன்ஸ் சக்தி முக்தி ஆயில் விலை ரூ. 2—0—0

1/4 அவுன்ஸ் ... ... விலை ரூ. 0—8—0

கோ. கோவிந்தராஜுலு செட்டியார்,

மளிகை அண்டு ஷாப் வியாபாரம்,

(துறையூர்) முசிரி தாலூகா, திருச்சி ஜில்லா.

ஆதிதிராவிடர்களே உங்களுக்கு அதுதான் வழி.

(கைவல்யம்)

ஏபெரியவனே! நீயோதீரன்!!

எல்லோருக்கும் பொதுவானவன். உன் பெயரோ தேவன். எல்லாரிடத்தும் மகத்தாயும், தக்காரிதமாகியும், நாயகமாயும் உள்ள அச்சத்திற்கு நீயே கர்த்தாவென்று எல்லா சமயங்களும் சொல்லுகின்றன. உனது இராஜ சிம்மாசனத்திற்கு வணக்கைபோக எங்களையும் அழைத்திரும். அதற்கு எங்களுடைய சோர்வும், அறியாமையும் பழியுற்று, அடிமைக்குணம் தண்டனைப்பட்டு பிரிந்து செல்லுக்களென்றும், தெய்வ வ்துதினையத் தடுக்கச் சுயமரியாதை இயக்கம் தோன்றினதல்லவென்பதை நீங்களும் அறிந்து கொள்ளவேண்டும்.

கை எப்போதும் உடம்பில் நோயுள்ள விடத்தைப்போய்த் தீண்டுவது போலவே நம்முடைய கருத்து முழுதும் நம்மையாளும் சேற்குதிசையாருடைய இராஜிய நெறியில் சென்று எங்களுடைய இஷ்டத்தைத் சத்தே கனித்து எனைளாட்சி நடக்கவிடவேண்டும். வேண்டினும், வேண்டாவிடினும் புறத்திலிருந்து விதிய மங்கள் எங்கள் தலைமேல் பொழியாதிருக்கவேண்டும். இராஜிய பாரம் முழுதும் எங்களுக்குச் சுமையாகாத படி சக்கரங்கள் போட்ட இயந்திரமாக்கி நீங்கள் தள்ளினதை நிருத்தி நாங்கள் தள்ள இடம் கொடுக்கவேண்டும். பொறுப்பில்லாத அன்னியரின் ஆட்சியிலிருந்து விடுதலை பெறவேண்டுமென்ற தபிப்பிராயம் எல்லாதிசைகளிலும் எழுந்தது போலவே நம்மிடமும் எழுந்தது. காலசக்தியின் தூண்டுதலால் அந்த அபிப்பிராயத்தில் நம்முடைய தேசவாக்கையும் சேர்த்துக் கொண்டார்கள். அப்படிச் சேர்த்துக் கொண்டவாக்கின் விஷயங்களை நிர்ணயிப்பதிலுள்ள பாதகியங்களை நிச்சயிக்கப் போகிறார்கள். அதில் உங்களுடைய பாத்தியங்களும் தீர்மானமாகவேண்டுமென்பது உங்களுக்குத் தெரியும்.

ஒரு பக்கம் இராஜாங்கத்தாரை நோக்கி "எங்களுக்கு சாம்ராஜிய சபைகளில் ஸ்தானம் வேண்டும், பூரண சுயராஜியப்பாத்தியதையும் எங்களுடையதேயாகுட" என்றுசொல்லுகிறார்கள். மறுபக்கம் ஜாதி யாசாரங்களிலும், சமய வழக்கங்களிலும் உள்ள அநீதி, அறியாமை முதலியவைகள் முன் போட்டவர்கள் போட்ட கோட்டைக் கடக்கக்கூடாதென்றும் சொல்லுகிறார்கள். ஐரோப்பாவில் முன் ஒரு காலத்தில் எல்லா விவகாரங்களிலும் பாதிரிகளுடைய அதிகாரம் மூர்த்தன்யமாக நடந்தது. எங்கும் வீசி இருந்தப்பாதிரி வகையை ஒழித்தபிறகுதான் ஐரோப்பிய ஜனங்கள் சுயராஜியப்பாதையிலேயே கால் வைக்க இடமுண்டாயிற்று என்கிற உலக சரித்திரத்தைப் படித்து பரீட்சை தேறி பட்டம் பெற்ற படிப்பாளி என்கிற பெயரோடுகூடின படித்தவன்கூட அந்தப் படிப்பை மறந்து சுயராஜியப் பாதை எல்லா நாட்டிலும் செப்பனிட்ட பிரத்தியட்சப் பிரமாண ஆதாரங்களையும்விட்டு, நடக்கொரு தனிக்கட வுளும் தனிவழியுமிருப்பதாக நினைத்துக் கொள்ளுவதாலும் நமது நாட்டுக்கு வரும் சுயராஜியப் படிப்பை ஏற்றுக்கொள்ளத் தகுந்த வாகனம் நிச்சயமில்லை என்பவர்களோ கோபிப்பதில் பலனென்ன? அறிவு மனிதனுக்கெல்லாம் பொதுவென்பதை உலகமுழுதும் ஒப்புக்கொள்ளுகிறது. நமது மகாணத்தில் மாதிரம் அப்படியல்ல அங்கீகாரம் பெதவில்லை என்பது ஒன்றே நமது தல்லமையை விளக்கப்போதுமானதாகும்.

தேசபக்தியாகிய விளக்கு எரியத் தொடங்கிய காலத்திலிருந்து நம் நாட்டில் அதிக உத்தம புருஷர்கள் ஜோதி பெற்றுத் திகழுமென்ற உயர்ந்த ஆசைகள் கொண்டிருந்தீர்கள். உங்களுடைய ஆண்மையை நசுக்கிப் பழிக்கிடமாக்கிய குரூரமான ஜாதி ஆசாரங்களினின்றும் பரம்பர தண்டனை விடுபட்டு முடிதூக்கித் தோள் கோர்த்து நிற்போம் என்றும் எதிர் பார்த்தீர்கள். ஆனால், இப்பொழுதோ சனாதன தரும சபையென்றும், வருணாச்சிரம மகாநாடென்றும், சித்தாந்த சபையென்றும் கூடிப்பழைய மாமூலென்ற செக்கைச் சுற்றுவதே தருமமென்று சொல்லுவதையும் கேட்கிறீர்கள். காங்கிரஸ் என்ற பெயர் உண்டாவதற்கு முன்பு நமது ஜாதிப் பாட்டு எத்தனை சோகமாக விருந்ததோ அந்தனை சோகமாகத்தான் இப்பொழுது சுயராஜியம் நெருங்கிவரும் சருணத்திலு மிருக்கின்றதென்பதையும் தெரிகிறீர்கள். இவைகளை யெல்லாம் தெரிந்த நீங்கள் உங்களைப்பற்றி நினைக்கவும் நீங்கள் மனிதர்களோடு மனிதர்களாக வாழவேண்டியும் என்ன செய்யலாம்? யாரைத்துணையாகக் கொள்ளலாம்? என்ன பலைகளே உங்களுக்குப் பெரிய ஆலோசனையாக விருக்கிறது.

எல்லோரும் காங்கிரஸில் சேர்ந்து விடுங்கள். நமது நாட்டை எல்லோருமாகக்கூடி நமதாக்கிக்கொண்டு சுயராஜியமடைந்த உடன் நமது விவகாரங்களை நாமே தீர்த்துக் கொள்ளுவோம் என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிறார்கள். அது கேட்பதற்கு வெகு அழகான பேச்சாகவே யிருக்கிறது. கல்வி மந்திரி யிலிருந்து பள்ளிக்கூடத்து உபாத்தியார் வரையிலும் தாலூகா போர்டு ஜில்லாபோர்டு அதன் பிரசிடண்டுகள், கிராமப்போலீஸ் அதன் அதிகாரிகள் சப்மாஜிஸ்திரேட்டுகள் டிவிஷன் ஆபீஸர்கள் இவர்களிடமெல்லாம் குரைக்கும் லக்கீல்கள் இவர்களெல்லாம் நமது நாட்டு மனிதர்கள்தானே. இவர்களிடம் தானே பொதுஜனங்களின் அதிகாரங்களெல்லாமிருக்கின்றன. அதில் கலகம் தர்க்கம் நடந்தால் அடக்குவதற்கு அதிகாரங்களும், அவர்களுமிருக்கிறார்கள். அவற்றை யெல்லாருக்கும் பொதுவாய் எழுதுவதில் கர்தாயநஷ்டமுண்டா? லக்காஷயர் மில்லுக்காரர்களைப்போல தர்க்கத்திற்கு ஒருசிலவர்களுண்டா? ஏற்றுமதி இறக்குமதி வரிகளில் ஏதேனும் ஏற்றக் குறைவேற்படுத்த வேண்டுமா? பஞ்சம் வந்து விடுமா? பொருளாதார நிலைமைக்குப்பாதகமுண்டா? தங்கம் வெள்ளி விலைதான் ஏறியோ இறங்கியோ விடுமா? ஒன்றுமே இல்லையே. ஒருஷ்டமுமில்லாத விஷயத்தில் சரியாக நடக்கப்பழகாத மனிதர்களை இதற்குப்பின்னும் சரியான மனிதனைப்போல் நடப்பார்களென்று நினைக்கத்தான் எப்படி முடியும்? முடியாது. இந்து சமூகம் இன்னொருவருடைய அநீகாரத்தின் கீழிருந்து பழகிவிட்டபடியால் அதிகாரத்திற்குப் பயப்படுவது போல நியாயத்திற்குப் பயப்படுவதில்லை.

இந்து சமூகங்களின் உயர்ந்தஜாதிகள் தெய்வநம்பிக்கை யுள்ளவர்களென்பார்கள். தெய்வ நம்பிக்கை துளர்களிடமிருக்காது. ஒழுக்கத்தையே விசேடமென்பார்கள். அவர்களிடம்ஒருபக்தி இருக்காது. சாஸ்திரவிதிப்பிரகாரம் நடக்காதவன் நரகத்திற்குப்போவான் என்பார்கள். ஒருவராவது சாஸ்திர விதியை நினைக்கவே மாட்டார்கள். அடியார்களின் அன்பு மொழியை அறியாதவன் எழேழுதலைமுறைக் கழுதையாகப்பிறந்து பன்றியாய் அலைந்து நாயாய் ஜனிப்பான் என்பார்கள். அடியார் அன்புமொழியை ஆலோசித்தவர்களே இல்லை. இவை களுக்கு ஒன்திரண்டு திருஷ்டாந்தங்களைச் சொல்லுகிறேன்.

பிரம்மஸ்ரீ சங்கராச்சாரிக்குத தீண்டாமையிலுள்ள அஞ்ஞானம் தீரும் விருந்தால் காசி விஸ்வநாதர் பறையன்வேஷமெடுத்துவந்து தீட்டுஎன்பது இல்லையென்று சொல்லி தீண்டாமையின் அஞ்ஞானத்தைத் தீர்த்தார். அதனால் தெளிவடைந்த சங்கராச்சாரி தீட்டில்லை என்றும் எவன் பரிசுத்தமுடையவனோ அவனே எனது குருநாதனென்றும் ஐந்து பாடல்கள் பாடினார் என்பது சங்கர் சரித்திரம் படித்தவர்களுக்கெல்லாம் தெரியும். இந்து தெய்வத்தில் பெரியதெய்வம் காசிவிஸ்வநாதர். குருவில் பெரியவர் சங்கராச்சாரி. தெய்வவாக்கில் நம்பிக்கையும் குருவார்த்தையில் விசுவாசமும் உடைய உயர்ந்த ஜாதி இந்துக்கள் இருந்திருந்தால் தீண்டாமையிருப்பதற்கு நியாய முண்டா? தெய்வத்தில் பெரிய தெய்வத்தின் உபதேசத்தையும் குருவில் லோககுருவின் வாக்கையும் நம்பாதவர்களும் ஆஸ்திகர்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கும் நமது நாட்டில் நியாயத்தை எதிர்பார்க்க எப்படி முடியும்?

இந்து சமய சித்தாந்தப்பகுதிகளில் வைணவ சமயம் தீண்டாமை விஷயத்தில் ஒருபடி முன்னேறிச்சென்றது. அதன் குருவான பிரம்மஸ்ரீ ராமானுஜாச்சாரியார் சாதாரண ஆதரணையிலிருந்து பரமபதம் வரையிலும் எல்லாருக்கும் பாத்தியதை ஒன்றே என்று சொன்னதை யெல்லா வைணவர்களுமறிவார்கள். வைணவர்கள் குருபரம்பரையை விசேடபக்தியாகக்கொண்டவர்கள். அப்படியிருந்தும் குருவார்த்தையை அலட்சியம் செய்து தீண்டாமையை விஷேடமாகப் பாராட்டுகிறார்கள். உட்காருகையிலும், எழுந்து நடக்கையிலும், "ராமானுஜா! ராமானுஜா!!" என்று சொல்லுகிறார்களேயல்லாமல் ராமானுஜத்தின் வாக்கை நினைக்கவில்லை, உபதேசத்தைப்பரிபாவிக்கவில்லை. இவர்களை குரு துரோகிகளென்றுசொன்னவர்களைக்கோபித்துத்தங்களைப் பாகவதாள் என்று நினைத்துக் கொண்டேயிருப்பார்கள். குருவார்த்தையை அலட்சியம் பண்ணின பாவிகளாயிருப்பதை ஆலோசித்துப்பார்க்கமாட்டார்கள். வைணவர்களெல்லாம் இராமரைத் தெய்வமாகக்கொண்டாடி இராமாயணத்தைப் பெரிய இதிகாசமாகக்கொண்டாடுகிறார்கள். இராமரோ குகனென்னும் காட்டுவேடனையொடக்காரனைச் சகோதரனைச் சேர்த்துக் கொண்டு அவனுக்கொடுக்கப்பட்ட விருந்தை யுண்டார். குரங்கையும் ராக்ஷதனையும் சகோதரனுக்கிக்கொண்டார். அவர்களிடம் தீட்டைக்காணவில்லை. தன் சிம்மாசனத்தில் அவர்களுக்கு மிடமளித்தார்.

சிவபெருமானும் பார்வதியும் பள்ளன் பள்ளச்சியாக வந்து அவர்கள் கூட்டத்திலேயே இருந்து தீண்டாமையில்லை என்று காட்டினார் என்பதைச் சைவர்கள் படித்தேயிருக்கிறார்கள். என்ன படித்திருந்தாலும் மாமூலின் இருப்புப் பிடியிலிருந்து விலகி பிறர் உத்தரவிற்குக்காத்திருப்பதாகிய ஊரின் ஒழுக்கத்தைவிட முடியவில்லை. தெய்வவாக்கும் குரு உபதேசமும் இல்லாத நாடு க்ஷேமமடையாது என்று சொல்லுகிறவர்கள் இனியாவது இதைக் கவனித்துப்பார்க்கட்டும். தெய்வ வாக்கையும் குரு உபதேசத்தையும் அலட்சியப்படுத்துகிறவன் ஒருக்காலமும் ஆஸ்திகனாகமாட்டான். அவனுடைய பெருமைக்கும் காலக்ஷேபத்திற்கும் அவன் கடிக்கும் ஆசாரங்களும் வார்த்தைகளும் ஆஸ்திகமாகாது. தெய்வ

[தொடர்ச்சி 22ம் பக்கம் பார்க்க]

பட்டீஸ்வரத்தில் சீர்திருத்தத் திருமணம்.

கும்பகோணம் சுயமரியாதைச் சங்கத்தாரின் சார்பாக 1931-வது ஜூன்-மீ 25-ந்தேதி காலை 9 மணிக்கு உயர்திரு. ஈ. வெ. இராமசாமியாரும், கோஷ்டியும் கும்பகோணத்திலிருந்து பட்டீஸ்வரத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டார்கள். பட்டீஸ்வரம் கிராமத்தை யடைந்ததும், பல பிரமுகர்களால் மேளவாத்தியங்களுடன் எதிர்கொள்ளப்பட்டு மாலைகள் சூட்டி, மணப்பந்தலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். மணப்பந்தலில் ஏராளமான மக்கள்—ஆண்களும், பெண்களுமாகக்—கூடியிருந்தனர். திருவாளர்கள். கே. வி. அழகர்சாமி, சாக்கோட்டை வீரப்பன், பி. ராமகாதன், மாரிமுத்து, கே. கணபதி, எஸ். கோபாலகிருஷ்ணன், எஸ். ராமசாமி, வேணு, வி. தியாகராஜன், ப. முத்துக்கிருஷ்ணன், கும்பகோணம் ஆர். சி. வெங்கட்டராமன், கெ. எஸ். சுப்ரமணியன்; ஏ. குப்புசாமி, எஸ். எம். எஸ். மாரிமுத்து, எல். எம். கருப்பண்ணசாமி, ப. சின்னத்தம்பி, எஸ். செருவலிங்கம், மூர்த்தஜா, லக்ஷ்மணன் கணபதி, பி. முருகையன், நடராஜன், ஆ. முருகேசன், சு. வீரப்பன், மருதமுத்து. எஸ். ஆர். சங்கரன், எஸ். வி. வீரய்யன், கே. நடேசன், சுப்ரமண்யராவ், இரங்கசாமிராவ், எஸ். மருதமுத்து, ஆர். காசி, ராமலிங்கம், வரதன், பஞ்சாமி, வி. அண்ணாமலை, எஸ். எஸ். கோவிந்தசாமி, முத்துசாமி, நீலமேகம், சுப்பராயன், கே. கணபதி, எஸ். கோவிந்தசாமி, கெ. ஜி. வெங்கடாசலம், ரா. சுப்ரமண்யன், எஸ். ரஹிமான். பாஷாஜான், வெளக்குடி எஸ். கே. அழகர்தபாண்டியன், கோட்டூர் தோட்டம் கே. ஜி. வைத்தியலிங்கம், கே. முத்துசாமி பி. ஏ., கயத்தூர் ச. கு. உத்திரபதி, சாமிநாதன், தொம்பூர் சங்கரன் ஆகியவர்களும், இன்னும் பல பிரமுகர்களும் திருமணத்திற்கு விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

திருமண வைபவத்திற்கு உயர்திரு. ஆர். சி. வெங்கட்டராமன் அவர்களை தலைமை வகிக்கும்படி திரு. கே. எஸ். சுப்ரமணியம் அவர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டு, திரு. மாரிமுத்து அவர்களால் ஆமோதிக்கப்பட்டதும், தலைவரவர்கள் பெரியகாரகோஷத்தினிடையே எழுந்திருந்து, சீர்திருத்தத் திருமணத்தின் அவசியத்தைப் பற்றிக்கூறி, திரு. ஈ. வெ. இராமசாமியைத் திருமணத்தை நடத்தி வைக்கும்படியாகக் கேட்டுக் கொண்டார்.

ஈ. வெ. இராமசாமி.

திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் பெரிய காரகோஷத்தினிடையே எழுந்திருந்து விவாகங்களின் தத்துவத்தை யெடுத்தரைத்து, சீர்திருத்த மென்பது அரசியல் வியாபாரம், அறிவு, கைத்தொழிலாகிய எல்லாத் துறைகளிலும் மிக அவசியமென்பதை வற்புறுத்தி, அநேக பிரமுகர்கள் ஒன்று சேர்ந்து இந்த விவாகத்தை முதன் முதலாக இக்கிராமத்தில் நடாத்தத் துணிந்தது மிகவும் பாராட்டத்தக்கதென உரைத்து, பெண்கள் அடிமைகளல்லவென்பதை விளக்கி, மணமகன் திரு. துரைசாமியை உறுதி மொழிகூறும்படி செய்து மணமகள் திருமதி. காந்திமதி அம்மாளும் அவ்வாறே உறுதி மொழி கூறியபின், தம்பதிகளால் மாலைகள் மாற்றிக் கொள்ளப்பட்டது.

பிறகு திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் பேசியதின் சாராம்சமாவது:—

சகோதரிகளே! சகோதரர்களே!! இன்று நீங்கள் சுயமரியாதைத் திருமணம் எப்படி நடத்தப்பட்டதென்பதைப் பார்த்தீர்கள். இம்மாதிரியான விவாகங்கள்தான் முழு சுயமரியாதைத் திருமணங்களென்று கூறிவிடமுடியாது. பெண்களுக்குப் போதிய அறிவில்லாதிருப்பதனாலும், அவர்களுக்குச் சுதந்திரமளிக்கப்படாதிருப்பதனாலுமே முழு சுயமரியாதை முறையில் திருமணம் என்பது நடைபெற முடியவில்லை. எப்பொழுது மணமகனும் மணமகளுக்குக்குழந்தில் தாலிகட்டப்பட்டதோ அது அடிமைத் தனத்தைத்தான் குறிப்பிடுகின்றது. நியாயமாகவே மணமகன் தாலிகட்டிக் கொள்ளத் தனது கழுத்தை அளித்தே யிருக்கக் கூடாது. மணமகளுக்குத் தாலி கட்டிதலால், மணமகனுக்கும் மணமகளால் தாலிகட்டப்படவேண்டும். புரோகிதமில்லாவிட்டாலும், புகைச்சலில்லாவிட்டாலும்கூட, இந்த விவாகத்தில் "புரோகிதச்" செலவு குறைக்கப்பட்டிருப்பதாக நான் கருதுவதற்கில்லை.

சகோதரர்களே! நாம் பொதுவாக விவாகத்தைக்கூடக் கடவுளின் தலையிலேயே சுமத்தி விடுகின்றோம். "என்ன செய்வது! விவாகம் திடீரென கூடிவிட்டது! அந்நேரம் (தாலிகழுத்துக்கு ஏறும் நேரம்) வந்துவிட்டால் யார்தான் என்னசெய்ய முடியும்?" மென்பதாக உரைக்கின்றோமேயல்லாது, விவாகத்தின் உண்மைத்தத்துவத்தை அறிந்து நமது நாட்டில் விவாகங்கள் நடைபெறுவதாகப் புலப்படவில்லை. இருவருடைய சம்மதமுமின்றியே, அவர்களுடைய வயதையும் கவனியாமலும்கூட, "நாங்கள் செய்து வைக்கின்றோம். உனக்கென்ன கவலை வந்தது?" என்றுசொல்லியேதான் அநேகவிவாகங்கள் நமது நாட்டிலின்றும் நடைபெறுகின்றன. நாம் ஒரு விவாகம் செய்வதென்றால் தம்பதிகளின் அபிப்பிராயத்தையும், வயதையும், யோக்கியதையும், கவனியாமலே, புரோகிதர்களிடம் 4-அணா கொடுத்து, இருவருக்கும் பொருத்தம் சரியாயிருக்கின்றதாவென்றுதான் கேட்டுத் தெரிந்துகொள்ளுகின்றோம். அவன் பணத்தை வாங்கிக்கொண்டு இருவருக்கும் பொருத்தமிருப்பதாகக் கூறிவிட்டால் உடனே விவாகமும் நடந்துவிடுகின்றது. நமது நாட்டிலுள்ள மூடப்பழக்க வழக்கங்களும், நிர்பந்தங்களும், சந்தேகங்களுமே இதற்குக்காரணமாகும். மேல்நாடுகளில் தம்பதிகளிருவரும் ஒருவரை யொருவர் நன்றாய் அறிந்து, பழகிக் கொண்டு, இவர்களுக்குள்ளாக நிச்சயம் செய்துகொண்ட பிறகுதான், அவர்களுடைய பெற்றோர்களுக்குத் தெரியவரும். அவர்களுக்கு ஒருவித சடங்குகளுமில்லை. சர்ச்சுக்குப் போய் சாக்ஷிகளின் முன்னிலையில். ஒருவரையொருவர் விவாகம் செய்துகொள்ள சம்மதிப்பதாக ஏகத்துரைத்து கையெழுத்து செய்துவிடுகின்றார்கள். அவ்வளவேதான். இப்பொழுதுகூட நம்மை ஆண்டுகொண்டிருக்கும் நமது அரசரின் விவாகமும் அவ்விதமே தான் நடந்தது.

இல்லாமானவர்களில் கூட, மாப்பிள்ளைப் பெண்ணைப்பார்க்காவிட்டாலும்கூட, ஒருவித சடங்குமில்லாமல் தங்களுடைய பத்துக்களின் முன்னிலையில், முல்லாக்களை வைத்துக்கொண்டு, தங்களுடைய விவாக ஒப்பந்தத்தை நிறைவேற்றிக்கொள்ளுவார்கள். உலகத்தில் 100க்கு 90 விவாகங்கள் இம்மாதிரியேதான் நடைபெறுகின்றன. நமக்குப்போதிய அறிவில்லாததால், அனேக கஷ்டங்களுக்காளாகி, பலவித சடங்குகளை வைத்துக்கொண்டு, கெருப்பையும், அம்மியையும், குழவியையும் சுட்டிபார்களையும் சாக்ஷிபாக வைத்துக்கொண்டு, உலகவாழ்க்கையை நடத்த ஆரம்பிக்கின்றோம். நாம் பெண்களை அடிமைகள்போல நடத்துகின்றோமேயன்றி, அவர்களை சமமாகவும், கூட்டாளிகளாகவும் பாவித்து நடத்துவதில்லை. அப்படிக்கொடுமைப்படுத்தப்பட்டாலும், விவாகத்தை ரத்து செய்துகொண்டு, விலகிக்கொள்ள இருவருக்கும் உரிமையில்லை. சிறிது காட்களுக்கு முன்னதாகதான், பரோடா அரசாங்கம் "கல்யாணமான புருஷன் பெண்ஜாதி இருவருக்கும் தங்களில் யாருக்கு பிரியமில்லாவிட்டாலும், தங்களுடைய விவாக ஒப்பந்தத்தை ரத்துசெய்து, விலகிக்கொள்ளலா"மென்பதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றது.

நமது நாட்டில், அடுத்தவீட்டுப் பெண்களும், பெற்றோரும் மணமகளுக்கு "மாமி வீட்டில் நீ நல்ல அடிமையாய் இரு. அடித்தாலும், உதைத்தாலும் வருத்தப்படாதே, புருஷன் மனம் கோணமல் நட" என்று உபதேசம் செய்து, மணமகன் வீட்டுக்கு அனுப்புவதும் வழக்கமாயிருக்கின்றது. இதனுடைய கருத்து அவர்களை ஆடவர்களுக்கு எப்பொழுதும் அடிமைகளாகவும், ஒருவித சுதந்திரமாவது அல்லது உரிமையாவதில்லாதிருக்கும்படி செய்வதற்கே யாகும். அவர்களுடைய உபதேசங்களைக் கேட்டு, மணமகன் வீட்டுக்குச் செல்லும் அந்தப்பெண்ணும் தன்னை ஓர் அடிமையென்றே கருதி, புருஷன், மாமனார், மாமி, நாத்தி இன்னுமிருக்கக் கூடிய பந்துக்களுக்கும் பயந்து, அவர்களுடைய பிரியத்தை சம்பாதிப்பதிலேயே தன்னுடைய வாழ்க்கையை நடாத்தி உயிருள்ள பிணமாக வாழ்கிறார்கள். அவர்கள் எவ்வளவுதான் உபத்திரவங்கள் அளித்தபோதிலும் அவைகளைப் பொருமையுடன் சகித்துக்கொள்ள வேண்டியவளாகிறாள்.

மேலும், நாம் கடன் வாங்கி, கலியாணங்கள் ஆடம்பரமாக செய்வதினால் அவர்களுடைய தலையின்மீது அக்கடனையும் சுமத்தி விடுகின்றோம். கடனை வைப்பதுமல்லாமல், அவர்களைத்தனி வாழ்க்கை நடத்தும்படியாக வேறுகவும் வைத்து விடுகின்றோம். நம் பக்கத்து வீட்டுக்காரர்களுக்குப் பயந்து கொண்டு, அதிக செலவு செய்வதினாலும், சடங்குகள் பல செய்வதினாலும் கடன் ஏற்பட்டுவிடுகின்றது. இந்தயெண்ணம் மக்களைவிட்டு நீங்க வேண்டும். அதிலும் பெண்களைவிட்டுத்தான் நீங்க வேண்டும். அப்படிநீங்குவதாகயிருந்தால் பெண்களின் அறிவு விருத்தியாக வேண்டும். உலகப்போக்கையனுசரித்து நடக்கும்படி அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டும்.

சிலவிடங்களில் சுயமரியாதைக் கலியாணத்திற்கு ஆண்கள் மட்டும் ஏராளமாய் வந்திருப்பார்கள். பெண்களோவெனில் 5 அல்லது 10 பெயர்கள்தான் வருவார்கள். பெண்கள்வந்தால் கெட்டுப்போவார்களாம்! இதற்குக்காரணம், நாம் அவர்களுக்கு உலகஞானத்தையூட்டி, அறிவுபுகட்டாதிருப்பதைத் தவிர்த்துவேறில்லை. ஆணுக்கும், பெண்ணுக்கும், வித்தியாசமில்லையெனவும், பெண்கள் அடிமைகள் அல்லவென்றும் அவர்கள் கருதுவார்களானால், அப்பொழுது நகைகளும், ஆடைகளும், வேண்டுமென்றும் போராடுவதை அறவே விட்டுவிடுவார்கள். அவர்கள் தங்களைத் தாழ்ந்தவர்களெனக்கருதிக் கொண்டிருப்பதால்தான் தங்களை அழகுபடுத்திக்கொண்டு, ஆடவர்களை மயக்கவேண்டியவசியம் நேரிடுகின்றது. நமது பெண்களுக்கு, மேலும், குழந்தைகளை வளர்க்கும் முறைகளும் தெரியாது. குழந்தைகளுக்கு அறிவு, யூகம், சுதந்திர உணர்ச்சி ஆகியவைகளை ஊட்டி வளர்க்கவேண்டும். குழந்தைகளுக்கு எதானிலும் வியாதியை

(தொடர்ச்சி 21ம் பக்கம் பார்க்க)

கர்ப்பத்தடை.

இந்திரிய நிக்கிரகம் சாத்தியமானதா? அல்லது விரும்பக்கூடியதா?

(T. D. கோபால்)

(மூன் தொடர்ச்சி)

ஸ்திரீ, புருஷ பேதங்களைக் குறித்து மிழிவுகளையும், வாசகங்களையும் பெண்களுக்குப் போதிப்பதே மாவுமென நமது மதங்கள் பல்லாயிரவருஷங்களாகப்போதித்துக்கொண்டு வருவதேயில் ஆடவர்களின் மனதில் இதுதையெ எண்ணங்கள் உண்டாவதற்குக் காரணமா யிருக்கின்றது. மேலும் தங்களுடைய காதல்வழித்திகளின் சுதந்திரங்களிலும், சுயேச்சைகளிலும் ஆடவர்கள் பிரவேசித்து அவர்களை அடக்கி ஆள விரும்பியதுங்கூட இதற்குக் காரணமென உரைப்பது மிகையாகாது.

பெண்களுக்கு சம்போகத்தில் விருப்பமில்லாத சமயத்திலுங்கூட, ஆடவர்கள் அதை மேலிடுதலால் சம்போகிக்க வேண்டுமென நினைத்து அவர்களை அணுகினால் பெண்கள் தடை சொல்லாமலும், தடுக்காமலும் ஆடவர்களின் இச்சையைப் பூர்த்திசெய்தே தீரவேண்டுமெனக் கூறப்படுவதாலுங்கூட மேற்கூறிய எண்ணங்கள் ஆடவர்களிடம் தங்கு தடையின்றி வளருவதற்குச் சாதனமாயிருக்கின்றது. மேலும் நமது தேச சட்டங்களும் இவ்விஷயத்தில் ஆடவர்களையே ஆதரிக்கின்றன. தன்னுடைய காம இச்சையைத் திருப்தி செய்ய விருப்பமில்லாத மனைவியை ஒருவன் காப்பாற்றவேண்டிய அவசியமுமில்லை.

ஆடவர்களின் சம்போகத்தில் சில பெண்கள் அருவருப்படைத்து பிரியமில்லாமலும், சில பெண்கள் சம்போகத்தில் உற்சாகமின்றியுமிருக்கின்றார்கள். ஆனால் அவ்வாறு சம்போகத்தில் அருவருப்படைந்து பிரியமில்லாதிருப்பவர்களின் மெண்ணிக்கையானது சிறியதாகக் காணப்பட்டபோதிலும்கூட, ஆயிரக்கணக்கான பெண்மணிகள் அவ்வாறிருப்பதாகக் காணப்படுகிறார்கள். அவர்கள் அவ்வாறிருப்பதற்குக் காரணம், உலகப் பொதுவிதியான காதலின் அன்பையும், ஆதரவையும், அழகையும் அவர்கள் தங்களுடைய அறியாமையின் பயனாய் அறிந்துகொள்ளாததே யாகும். மேலும், இத்தகைய கூட்டுறவால்-சம்பந்தத்தால் ஆண்களும், பெண்களும் தங்களுடைய வாழ்க்கையானது எவ்வாறு உயர்த்தப்பட்டு, கேன்மை யடைகின்றதென்பதையு மறிந்துகொள்ளாதவர்களாகவு மிருக்கின்றார்கள். பெண்கள் அறியாமையின் அவதாரங்களாயிருப்பதும், குழந்தைகளை உற்பத்தி செய்வதற்காக மட்டுமே தான் அவர்கள் ஆடவர்களின் வாழ்க்கைத்துணைவர்களாக படைக்கப்பட்டிருக்கின்றார்கள் எனக் கருதப்படுவதும், அவர்களைத் தப்பான முறைகளில் பயிற்றுவிப்பதுமே இத்தகையப் பரிதாபகரமான நிலைமைக்குக்காரணங்களாயிருக்கின்றன. இவ்வறியாமையில் ஆடவர்கள் மூழ்கியிருப்பார்களேயானால், அவர்கள் மேன்மேலும் பெண்களை அடிமைகளாகப் பாவித்து, அவர்களுக்கு ஒருவித உரிமையும் வழங்காமல் மிருகங்களைப்போல் அவர்களை உழைக்கும்படி செய்து, ஸ்திரீ புருஷ பேத வித்தியாப்பியாசத்திற்குறிய எவ்வித வர்த்தமானங்களையும் அவர்களுக்குப் போதிக்காமலும், அவர்களே கற்றுக்கொள்ளவும் வசதியு மளிக்காமலிருப்பதனால்தான் அவர்களுடைய நிலைமை இன்னும் பரிதாபகரமானதாகவும், மோசமானதாகவுமேற்படுகின்றது.

ஸ்திரீ புருஷ பேதத்திற்குறிய வித்தியாப்பியாசங்களொன்றும் ஸ்திரீகளுக்குக் கூடவே கூடாதெனவும், அவர்கள் அதை அறிந்து கொள்ளாமல் அறியாமையிலேயே உழன்று கொண்டிருக்கவேண்டுமெனவும் உரைத்துக்கொண்டும், நிர்பந்தித்துக் கொண்டுவரும் நமது மதங்களும், மத குருக்களும், மதபோதகர்களும், மடாதிபதிகளும், இன்னும் மக்கள் உய்யும் பொருட்டு அவர்களுக்கு சன்மார்க்கத்தையே பிரசாரம் செய்துகொண்டு வருவதாக கூறிக்கொள்ளுபவர்களும், மறைமுகமாக மக்களுக்குப் புரிந்துகொண்டிவரும் நீதிகளுக்கு என்ன சமாதானம் உரைக்கப் போகின்றார்களோ தெரியவில்லை. பெண்கள் இவ்விதக் கேவல நிலைமையை யடைவதற்கும் இந்நிலைமையிலிருந்து அவர்கள் இன்னும் மீட்கப்படாமலிருப்பதற்கும் இவர்களேதான் முக்கியக்காரணஸ்தர்களாவார்கள். இத்தகைய மக்களின் அறிவுவளர்ச்சிக்கேற்ற புஸ்தகங்களை அவர்களுக்குக்கொடுத்துதவுவதுமன்றி, அவர்கள் அறிவு முன்னேற்றத்திற்கான முறைகளைப்பிரசங்கங்களின் மூலியமாய் அவர்களுக்குப் போதித்துக்கொண்டும் வருவோமேயானால், சம்போகத்தில் வெறுப்படைந்திருக்கும் ஆண்களும், பெண்களும் தங்களுடைய மனதை மாற்றிக்கொள்ள ஏதுவாயிருக்கும். அவர்களுடைய மனதில் இம்மாற்றம் உண்டாகுமேயானால், அப்பொழுது பெண்களுக்கும், ஆண்களுக்கும் அவரவர்களின் பிறப்புரிமையாயிருக்கும் வாழ்க்கையானது மிக்கப்பிரகாசம் பொருந்தியதாயிருக்கும்.

பெண்கள் ஆடவர்களின் கட்டுறவிலும், சம்போகத்திலும் வெறுப்படைவதற்கு, புருஷர்களேதான் காரணஸ்தர்கள். ஏனெனில், பெண்களுக்கு உண்ண உணவும், உடுக்க ஆடையும், வசிக்க ஒரு வாசஸ்தலத்தையுமாடவர்களளித்தால், அதற்குப் பதில் பெண்கள் ஆடவர்களுக்கு அடிமைபோல் பல தொழில்களையும் செய்து, ஆடவர்களின் மனது கோணமல் நடந்துகொள்ள வேண்டுமென்பதுடன், ஆடவர்களின் காம இச்சையையும் பூர்த்தி செய்வதற்காகத்தான் பெண்கள் தோன்றியிருக்கின்றார்களென ஆடவர்களால் பொதுவாகவேக்கருதப்பட்டு வருகின்றது. இத்தகைய ஆடவர்கள், ஸ்திரீகளுக்குக்காம இச்சை உண்டாகும் பொழுதெல்லாம் பொதுவாகவே அவ்விச்சையைத் திருப்தி செய்யாமல் அவர்களைத் தள்ளிவிடுகின்றார்கள். மேலும், அவர்களுடைய தேகாரோக்கியத்திலும் கவலையற்றவர்களாகவேயிருக்கின்றார்கள்.

இம்மாதிரியிருக்கக்கூடிய புருஷர்கள், பெண்களுக்கும் தங்களைப்போல் தானே இச்சையிருக்குமென்பதை அறிந்து கொள்ளாமலும், அவர்கள் காமத்தால் தூண்டப்பட்டபொழுது அவர்களுடைய இச்சையைத்தீர்க்கக் கூடாதவர்களாகவு மிருக்கின்றார்கள். ஆனால் அவர்களாகக்காமத்தால் தூண்டப்பட்டபொழுது மாத்திரம் பெண்களை பலவந்தம் செய்தாவது தங்களுடைய காரியத்தைச் சாதித்து இச்சையைத்திருப்தி செய்து கொள்ளுகின்றார்கள். பெண்கள் தங்களுடைய இச்சையைத்தங்கள் கணவரிடத்திலும்கூட வெளிப்படுத்தக்கூடாதெனவும் அவ்வாறு ஒரு பெண் சிறிதும் வெட்கமின்றி தனது இச்சையைத் தன்னுடைய கணவனிடத்திலேனும் அறிவிப்பாளேயானால் அவள் அப்பொழுது பதிவிரதா தர்மத்தினின்றும் தவறியவளாகின்றாள் எனவேதான் பெண்களுக்கு நமது மதம் போதிக்கின்றது. ஆகையால் பெண்கள் சம்போகத்தில் நாட்டமில்லாதவர்களைப் போலவும் விருப்பமில்லாதவர்களைப்போலவும் சில சமயங்களில் பெருமையாகவே வார்த்தையாடுகிறார்கள். தங்களுடைய கணவர்களின்மீது ஏட்டமுள்ளவர்களாயும் ஆசையுள்ளவர்களாயு மிருப்பவர்களைவிட தாங்களே பதிவிரதைகளென்னவும் கருதிக் கொள்ளுகிறார்கள். ஆடவர்கள் தங்களுடைய இச்சையை ஒளியாமல் மனைவிமார்களிடம் தெரிவிப்பதால் பெண்கள் புருடர்களைவிட உயர்ந்தவர்களெனவும் சில சமயங்களில் இரகசியமாகவே தங்களுக்குள் நினைத்து மகிழ்ச்சியு மடைகிறார்கள். எப்படியிருந்தபோதிலும் ஆடவர்கள் தங்களுடைய இச்சையை வெளிப்படையாக அறிவித்துவிடுவதால் பெண்களும் அவர்களுடைய ஆசைக்கு இணங்கி ஒத்துக் கொண்டதுபோல

தொடர்ச்சி 20ம் பக்கம் பார்க்க

சம்போகத்தை அறவே நீக்குவதுதான் கர்ப்பத்தடைக்கேற்ற சிறந்த முறையென பிரசாரம் செய்பவர்களில் சிலர்கூட அம்முறையை உண்மையாக அனுஷ்டிப்பதே கிடையாது. சம்போகத்தை அறவே நீக்கி, இந்திரிய நிக்கிரகம் செய்யவேண்டுமென பிரசாரங்கள் செய்கின்றவர்களாவரும் ஸ்திரீகளிடத்திலும், ஸ்திரீகளின் விஷயங்களிலும் அருவருப்பு வெறுப்பு, அசஹ்யம், அலட்சியம், உபேக்ஷை, உதாசினம், உற்சாகமின்மை ஆகிய காரணங்களால் தூண்டப்பட்டவர்களாகவே யிருக்கின்றார்களேயல்லாது, உண்மையாகவே பிரஜா உற்பத்தியை மட்டுபடுத்த வேண்டுமென்கிற எண்ணத்துடன் பிரசாரம் புரிகின்றவர்களாகவேக் காணப்படவில்லை. இன்னும் சிறிது விஸ்தாரமாக உரைக்க வேண்டுமானால், பத்தாயிர மனிதர்களில் ஒரேயொருவர் மட்டுந்தான் தம்முடைய முழு சக்தியையும் அல்லது வல்லமையையும் ஸ்திரீகளிடத்திலும், ஸ்திரீகளின் விஷயத்திலும் செலுத்தாமல் தம்முடைய இச்சையை அடக்கி, ஆண்டு இதர காரியங்களில் அதாவது பிரஜா உற்பத்தியை மட்டுபடுத்துவதற்கான முறைகளில் ஈடுபட்டு, தவகளுடைய வாழ்நாட்களைக்கழிக்கின்றார்கள். ஆனால், இன்னும் சிலர், சம்போகத்தை வேண்டுமென்றே தவிர்த்துக்கொண்டு வருகின்றார்கள். இவ்விருவரும், இவர்களுடைய இத்தகையசெய்கைகளால். இரண்டுவித நிலைமையை உற்பத்தி செய்கின்றார்கள். மனிதவர்க்கங்கள் முன்னேற்றமடைவதற்காகவும், இன்பத்தையும், சுகத்தையும் மக்கள் தங்களுடைய வாழ்நாட்களில் அனுபவிப்பதற்காகவும் ஒருவர் கஷ்டப்படுகின்றார். சிலர் மட்டுந்தான் இக்கைங்கரியத்தைப் புரிவதற்கு சாமர்த்திய சாலிகளாயிருக்கின்றார்கள்.

மற்றவரோ, வேண்டுமென்றே சம்போகத்தை நீக்கி, இந்திரிய நிக்கிரகம் செய்வதால் அதிருப்தியையும், அசௌக்கியத்தையும், சந்தர்ப்பத்திற்குச் சரியாகயில்லாததையும், துக்கத்தையும், தரவஸ்தையையும், துன்பத்தையும், விபசனத்தையும், கஷ்டத்தையும், பீடையையும், உண்டாக்கி, மனிதவர்க்கத்தை அதனுடைய மூலஸ்தானத்திலேயே விஷத்தை வைத்து, கொலை செய்கிறார்.

இத்தகைய மானிடர்களால் ஆண், பெண் சேர்க்கையானது அருவருப்பானதென்றும், அசிங்கியமானதென்றும், வெறுப்பானதென்றும், வெறுக்கத்தக்கதென்றும், வெறுப்பை யுண்டாக்கக்கூடியதென்றும், இழிவானதென்றும், ஈனமானதென்றும், கீழானதென்றும் கூறப்பட்டு வரப்படுகின்றது. அவர்கள் யாவரும் தெரிந்தோ அல்லது தெரியாமலோ "கடவுளின் உருவத்தைப்போலும், சாயலைப்போலும்" உள்ள ஒன்றை, உலகில உற்பத்தி செய்வதற்கான ஓர் விதப் பிரயாசையெனவுமே அச்சேர்க்கையை அவர்கள் உரைக்கின்றார்கள்.

முத்தையா
க அறக்கட்டளை

28—6—31 காலை 8 மணிக்கு சென்னிமலை நகர் போர்டு ஸ்கூலிலிருந்து தலைவர்களின் ஊர்வலம் புறப்பட்டு, நகர்வலம் வந்தது. 9 மணிக்கு போர்டு ஸ்கூலில் ஆண்டு விழாவிற் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. விஜயம் செய்தவர்களில் முக்கியஸ்தர்கள்.

வா.சொ.மு. முருகேச முதலியார், குருமூர்த்தி செட்டியார், கே. கிருஷ்ண முதலியார், ஈ. டி. பாலகிருஷ்ண முதலியார், பெருந்துறை சேதுப்ப முதலியார், நாராயணசாமி பிள்ளை, அச்சுதமேனன், ஜி. ராஜமன்னர், எஸ். வி. மாரியப்பன், சி. வி. பழனியப்பன், எம். எஸ். கணபதி, பி. எ. ஹிரணியன், முத்துசாமி ஐயர், நாச்சிமுத்து, கனகசபாபதி, மாயவரம் எஸ். வி. லிங்கம் மற்றும் உள்ளூரிலிருந்தும் வெளியூரிலிருந்தும்யேராளமான கனவான்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

திரு. ஜெ. எஸ். கண்ணப்பர் அவர்கள் வராததால், திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் வை. விழாவிற்குத் தலைமை வகிக்கும்படியாய்க் கேட்டுக் கொள்ளப்பட்டார். புகர் சங்கத்தின் சார்பாகத் தலைவருக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டபிற்பு, சங்கத்தின் வருடாந்திர அறிக்கையும், ஆண்டு விழா வரவேற்புப் பத்திரமும் வாசிக்கப்பட்டன. பின்பு திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் முகவுரையாகச் சொற்பொழிவாற்றியதின் சாராம்சமாவது:—

சகோதரர்களே! உங்கள் சங்க வருஷக்கொண்டாட்டத்தை முன்னிட்டு எனக்கு ஆடம்பரமான வரவேற்பளித்ததற்கும், என்னைத் தலைமை வகிக்கச் சொன்னதற்கும், எனக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்ததற்கும் நான் பெரிதும் கன்றி பாராட்டக் கடமைப் பட்டவனாவேன். எனது கொள்கைகளுக்கு ஆதரவு காட்டும் முகமாயில் அப்பத்திரமிருப்பதுபற்றியும், அக்கொள்கையிலுள்ளதற்குள்ள பற்றுதல் காரணமாய் எனக்குப் புகழ்ச்சி மொழிகள் கூறுகிறீர்களென்று நான் கருதுவது பற்றியும் அப்பத்திரத்தை நான் பெற்றுக் கொள்ளுகிறேன். விழாவின் வரவேற்புக் கமிட்டித் தலைவர் கன்பர் பழனியப்பன் வாசித்த வரவேற்புப் பத்திரத்திலும், பின்பு சங்க அறிக்கைப் பத்திரம் வாசித்துக் கொடுத்த கன்பர் எஸ். வி. பழனியப்பன் உரையிலும் நமது கொள்கை மிகவும் மலிந்து கிடக்கின்றது. நமதியக்கத்தை நீக்கள் எவ்வளவு தூரம் நல்குணர்ந்து அதைச் செயலிலும் செய்து வருகிறீர்களென்பதற் கவைகளே தக்க சாட்சிகளாயிருக்கின்றது. வரவேற்புத் தலைவர் உபன்யாசத்திலுள்ள பெரும் பகுதி விஷயங்கள் யாவும் எனது இக்கையக கொள்கைகளின் தத்துவங்களேயாகும். அதைவிட நான் ஒன்றும் புதிதாகச் சொல்லக்கூடியதுமில்லை நீக்களெதிர் பார்க்கவும் முடியாது எனினும் அக்கிராசனர் என்கின்ற முறையில் வாலிபர்களுக்குச் சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன்.

நாட்டில் எத்தச் சீர்திருத்தம் கண்டு பெற வேண்டுமானாலும், அவை வாலிபர்களாலேயேதான் முடியுமென்று யாரும் சொல்லுவது வழக்கம். இம் முடிவை இன்று உலகில் சகலருமே பிப்பிராய பேதமின்றி ஒப்புக்கொண்டு முடிவுமாகும். இது வெரும் வார்த்தைகளல்ல. இதில் உண்மை யில்லாமலுமில்லை.

ஏனெனில், வாலிபர்களிடமுள்ளம் களங்கமற்றது. உலகப்பற்று, சயநலம், பேராசை, மனோராஜ்யமாகிய கனிம்பும், தருப்பும் பிடியாமல் முளையுடன் சுத்தமாயிருப்பதாகும். "இளங்கன்று பயமறியா" தென்ற பழமொழிக்கொப்ப அவர்களுக்கெந்தக் காரியத்திலும் பயமென்கிற தடையானது கிடையாது. அன்றியும் வாலிபர்களிடம் உள்ளமானது பக்கத்தில் தோன்றுவதை பயமின்றி சகஜமாயில் பற்றுவதாகும். பற்றிவிட்டாலோ தன் குறிக்கோளினின்றி படரக்கூடிய வேகமுடையதாகும். இத்தக் காரணங்களால் வாலிபர்களே புதிய புதிய காரியங்களால் பயனேற்பட உதவக்கூடியவர்களென்று சொல்லப்பட்டு வருகின்றது.

எந்தக் காரியத்தைச் சாதிக்க வேண்டுமானாலும், சுயநலமற்ற தன்மையும், பயமற்ற தன்மையும், எதையும் தியாகம் செய்யும் உள்ளமும் வேண்டியதவசியமாகும். இத்தக் குணங்கள் வாலிபர்களிடமேதான் பெரிதும் காணமுடியுமேயொழிய உலகவாழ்க்கையிலீடுபட்ட பெரியவர்களென்பவர்களிடத்தில் காணமுடியாது.

ஏனெனில், பெரியவர்களென்பவர்களுக்குப் பல தடைகளுண்டு. அவரவர்கள் மனம் பழக்கமான வாழ்க்கையிலீடுபட்டு, பணந்தேடவும், பெண்களைக் காப்பாற்றவும், மேலும் மேலுமுபதவும் ஆசைவந்து படர்ந்து, தியாக எண்ணமே தோன்றுவதற்கில்லாமல் செய்து, சகலத் துறைகளிலும் பயத்தை புண்டாக்கி யிருப்பதாலவர்கள் பிறிதும் பிபாதகலத்திற்கும், புதிய காரியங்களைச் சாதிப்பதற்கு முதலாமல் போய்விடுகின்றார்கள். நமது மக்களுக்கு அதாவது பெரியவர்கள், மனிதர்களானவர்களென்பவர்களுக்கு முதலாவது கெட்டகுணம், பயம், இரண்டாவது சுயநலமதிகமேற்படுகின்றது. எப்படியெனில், "நான் செத்துப் போனலென் பெண்டு, பிள்ளைகளின் கதி என்னவாவது?" "எனது பொருள் தொழில் என்னவாவது"? "என்பெண்டாட்டி, பிள்ளை சொத்து முதலியவைகளைக் காப்பது யார்?" யென்பவைகளாகிய யெண்ணங்களே மனிதனை உலகத்தில் எப்படியாவது வாழ்ந்துகொண்டு வெகு நாட்களுக் கிருக்கவேண்டுமென்ற கருதுவதற்காதாரமாயிருந்து வருகின்றது.

"நான் செத்தால் என் பெண்டு, பிள்ளைகளென்னவாவது?" என்கிற யெண்ணமாகிய ஒரு பெரும் விஷமே நமது மக்களின் பொதுநல உணர்ச்சியைச் சொல்லிக்கொண்டு வருகின்றது. பொதுநல எண்ணம் எற்படாமல் செய்து வருகின்றது. நமது பெண்களும், அவர்களது ஆடவர்களும் எவ்விதப் பொதுநல வேலைக்கும் வாயக்கில்லாமல் செய்து விடுகின்றார்கள். எப்படியென்றால் "ஐயோ! என்கணவ!! என்செய்வேன்!!! நீ செத்துப்போனால் நான் எப்படிப் பிழைப்பேன்? இந்தப் பிள்ளை, குட்டிகளை எப்படிக் காப்பாற்றுவேன்?" என்று சதா ஜபித்துவரும் மந்திரமே, ஆண் சமூகத்தைக் கோழைகளாக்கி, சுயநலப் பித்தர்களாக்கி, கூனையும், யோக்கியப் பொறுப்பற்றதன்மையை யுடையவர்களாக ஆக்கியிருக்கின்றது.

நமது பெண்களுக்குச்சுதந்திரமோ, அறிவோ மற்றவர்களுதவியின்றி தானே வாழக்கூடிய சக்தியோ மற்றும் ஏன்? "இந்தப் பெண்ஜாதி போனால், வேறு ஒருத்தியைக்கொண்டு வாழ்க்கையை கடாத்தலாம். இதற்காக அழவேண்டுமா?" என்று யெண்ணுகின்ற யெண்ணம்போல் "இந்தப் புருஷன்போனால், வேறொரு புருஷனைக் கொண்டு வாழ்க்கை கடத்தலாம்" என்கின்ற தன் நம்பிக்கை யிருந்தால், கண்டிப்பாக இன்று நமது நாட்டிலுள்ள ஆண் மக்களெல்லாம் உண்மையான ஆண் மகனையிருக்கமுடியும். சுதந்திர புருஷனை, மானமுள்ளவனாக இருக்க முடியும். ஆகவே இத்தப்படி யில்லாமல் போனதற்குக் காரணம், ஆண்மக்கள் தங்களுக்கு ஏற்படித்திக்கொண்ட வாழ்க்கைத் துணையானது பயந்காளியாகவும், மூடத்தனம் பொருந்தியதாகவும், தன் நம்பிக்கை யற்றதாகவுமிருக்கும் படியான நிலையில் உள்ள பெண்களை வாழ்க்கைத்துணையாகக் கொண்ட தால்தானே தவிர, வேறில்லை.

ஆகவே, தனக்காக என்று கஷ்டப்படுவதுடன், தனக்காகவே தனது சாவுக்குப் பயப்படுவதோடு, தனது பெண்ஜாதிக்கும், பிள்ளைக்குமாகவும் சாவுக்கும், தீய சக்திற்கும் பயப்பட வேண்டியவனாயிருப்பதால் அவன் பயனற்றவனாகவும், சுயநலமும், பேராசையும், பயந்காளித்தனமுமே உருவமாகத் தோன்றியவனாகவுமாகி விடுகின்றான். ஆதலால் தான் மனிதன் பொதுநலத்திற்கருகையற்றவனென்று சொல்லப்படுவதுடன் மேல் கண்ட இந்த குணங்களற்ற வாலிபர்களே பொதுநலத்திற்கருகாகளென்றும் சொல்லப்பட்டு வருகின்றது.

ஆனால், வாலிபர்களெப்படிப்பொதுநலத்திற் கேற்றவர்களென்கிற மகிழ்ச்சியும், பெருமையும் மக்கள் அடைவதற்கு லாயக்குடையவர்களாயிருக்கின்றார்களோ, அதுபோலவே அதற்கு நேர்மாறாக அவர்கள் விஷயத்தில் நாம் பயப்படும்படி, அவர்கள் —அத்தவாலிபருவ பயனை முன் பின் யோசியாமலெதிலும் செலுத்தி பொதுநலத்திற்குக் கெடுதியை விளைவித்துவிடக்கூடிய அபாயகரமானவஸ்துவாக ஆகிவிடுவார்களென்றும் சில சமயங்களில் கருதவேண்டிய தாகவும் இருக்கிறதென்றது.

ஏனெனில், அவர்களது பரிசுத்தமான உள்ளம் எதில் பற்றுகொண்டாலும் துணிந்து, நன்மை-தீமை யின்னதென்றுகூட யோசியாமல் திடீரென்று பிரவேசித்து விடக்கூடிய சுபாவமுடையதாகி விடுகின்றது.

எதுபோல வென்றால் நமது சிறு பிள்ளைகள் தங்கள் விளையாட்டுக்காக, எப்படி அவ்வப்போது காணப்படும் காரியங்களை யாதாரமாய்கொண்டு விளையாடுகின்றார்களோ, அதாவது ஒரு ஊரில் அல்லாசமிப்பண்டிகை வந்தால் அந்தப்பண்டிகைத் தீர்ந்து பதினைந்து நாட்கள் அல்லது ஒரு மாதம்வரையிலும் எல்லாப்பையன்களும் புலிவேஷம் போல் சதா ஆடிக் கொண்டிருப்பதும், மாரியம்மன் பண்டிகை வந்தால், மாரியாய்ப்பண்டிகை தீர்ந்த ஒருமாதம் வரையிலும் ஆண்டியைப்போல் செருப்பு ஓடு எடுத்து ஆடுவதுபோல் ஆடுவதும், புரட்டாசி மாதம், மார்கழி மாதம் பஜனைகாலம் வந்தால் அம்மாதங்கள் தீர்ந்து ஒரு மாதம் வரையிலும் பஜனைப்பாடுவது மாகிய காரியங்களையே தங்கள் விளையாடல்களாகக் கருதுகின்றார்களோ அதுபோலவும். நாடகக்காரன் வந்து ஒன்று, இரண்டு மாதங்கள் நாடக மாடிவிட்டு போனால், நாம்டிகர்கள்

தொடர்ச்சி 18-ம் பக்கம் பாருங்க

பகுத்தறிவு
(அல்லது) கத்தோலிக்க குருவின்
மரணஶாசனம்.

(மொழிபெயர்ப்பாளர் S. குருசாமி B. A.)

காப்பிரைட்.

முன் தொடர்ச்சி.

14. மதமும் காட்டு மிராண்டித்தனமும்.

பொதுவாக மதங்களெல்லாம் உலகத்தில் காட்டுமிராண்டிகள் வசித்துக்கொண்டிருந்த காலத்தில் தான் ஆரம்பித்தன. அந்தப்பண்டைய காலம் முதல் மதஸ்தாபகர்கள் என்பவர்களெல்லாம் மிகவும் அநாகரீகமான மூட ஜனங்களுக்கே தங்கள் போதனைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். ஏனெனில் அவர்கள் தான் கடவுள்கள் என்பதிலும், சடங்குகள் என்பதிலும் கற்பனைத்தெய்வங்கள் மீதிலும், அற்புதமும் பயங்கரமுமான கட்டுக்கதைகளிலும் சிக்கிரம் நம்பக் கூடியவர்கள். இவ்விதக்கற்பனைகளெல்லாம் முன்னோர்களால் கண்மூடித்தனமாய் நம்பி ஏற்றுக்கொள்ளப்பட்டு, பிறகு கூட்டியும் குறைத்தும் சொல்லப்பட்டு பிறகு சற்று அறிவு வந்த அவர்களுடைய சந்ததியார்களும்கூட தங்கள் முன்னோர்களைப் போலவே அவைகளை கண்மூடித்தனமாய் நம்பிக்கொண்டே வந்தார்கள்.

15.—ஆதிக்கஞ்செலுத்தவே மதங்களுண்டாயின.

எந்த தேசத்திலும் முதன் முதல் சட்டம செய்தவர்களெல்லாம் பிறர் மேல் ஆதிக்கம் செலுத்துவதையே தங்கள் நோக்கமாகக் கொண்டிருந்தார்கள். இந்த நோக்கத்தில் சுலபமாய் வெற்றி பெற வேண்டுமானால் ஜனங்களைப் பயமுறுத்தி அவர்கள் எதையும் ஆலோசனை செய்யாமல் பண்ண வேண்டியதே சிறந்த முறையென்பதையும் உணர்ந்தார்கள். ஆகவே தங்களுடைய துர் எண்ணங்களை ஜனங்கள் அறிய முடியாதபடி பயங்கரமான பாதைகளில் அவர்களுடைய புத்தியைச் செலுத்திஞர்கள். ஜனங்கள் எங்கே தங்களுடைய பாதங்களை (இவ்வுலகத்தைப்) பார்த்து விடுவார்களோ வென்று பயந்து ஆகாயத்தை (மேல் உலகம்) பார்க்கும்படி கட்டாயப்படுத்தினர்கள். ஆனால் நேரில் சந்தித்தபோது மாத்திரம் கதைகளைச் சொல்லி திருப்திப்படுத்தினர்கள். சுருக்கமாய்ச் சொல்லவேண்டுமானால் ஆயாள் (நர்ஸ்) எப்படி குழந்தைகளைத் தூங்க வைப்பதற்குப் பாட்டுகளை உபயோகப் படுத்தியும், விஷமம் செய்யாமல் இருப்பதற்குப் பயமுறுத்தவும் செய்கிறார்களோ அதைப்போலவேதான் இம்மதஸ்தாபகர்களும் செய்தார்கள்.

16. மதத்தின் அஸ்திவாரமே ஆடுகிறது.

கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதே எல்லா மதங்களுக்கும் அஸ்திவாரமாகும். இதைப்பற்றி பெரும்பாலோர் சந்தேகப்படுவதே கிடையாது. ஆனால் இந்த முக்கியமான விஷயத்தான் ஒவ்வொரு மனிதனையும் யோசித்துப்பார்ப்பதினின்றும் தடைசெய்கிறது. வீண் விடைகளாகவுள்ள எந்த விஷயத்திலும், முதல் கேள்விக்குத்தான் பதில் சொல்லுவது கஷ்டம்.

17 & 18. கடவுள் இருப்பதை ருசுப்படுத்த முடியுமா?

விபரம் அறிய முடியாத ஒன்று, பஞ்சேந்திரியங்களாலும் உணர முடியாத ஒன்று, ஆனால் அதனுடைய குணங்களை மாத்திரம் நமமால் சொல்ல முடியாது என்று வர்ணிக்கப்படும்—ஒரு ஜீவன் இருப்பதாக நீ ருசுவுடன் ஒப்புக்கொள்ளுகிறாய் என்பதை யோக்கியமாய் உன்னால் சொல்ல முடியுமா? யோசித்துச்சொல்லு. இத்தகைய ஒரு ஜீவன் இருக்கிறது என்றே, அல்லது இருக்கக் கூடும் என்றே நான் நம்பவேண்டுமென்றால் இந்த ஜீவன் என்ன என்பதை முதலில் நான் அறிந்து கொள்ளவேண்டாமா? அப்பேர்ப்பட்ட ஒரு ஜீவன் இருக்கின்றதென்றே, இருக்கலாமென்றே நான் நம்ப வேண்டுமானால், அந்த ஜீவனைப்பற்றி மூன்னுக்குப்பின் முறணில்லாத விஷயங்களாக எனக்குச் சொல்லவேண்டாமா? கடைசியாக, இந்த ஜீவனைப்பற்றி நான் பரிபூரணமாய் நம்பவேண்டுமென்றால், அதைப்பற்றி சொல்லும் விஷயங்கள் எனக்குப் புரியக்கூடியதாகஇருக்கவேண்டாமா? இத்தகைய குணங்களையுடைய ஒரு ஜீவன் அவசியம் இருந்தே தீரவேண்டும் என்பதை நான் நம்பும்படி ருசுப்படுத்த வேண்டாமா?

நாம் ஒரே சமயத்தில் நினைக்க முடியாதபடி அவ்வளவு முறண்பாடுடையதான இரண்டு கருத்துக்களைக்கொண்ட ஒரு விஷயம் நிச்சயமாயிருக்கவே முடியாது. நம்முடைய பஞ்சேந்திரியங்களிலிருந்துதான் எல்லா எண்ணங்களும் உண்டாகின்றன; ஆகவே இப்பஞ்சேந்திரியங்களால் உணரமுடியாத எதுவும் உண்மையென்று ருசுப்படுத்த இயலாது. ஒன்றுக்கொன்று பொருத்தம் இருக்கிறதா இல்லையா வென்ற விஷயத்தையும் இப்பஞ்சேந்திரியங்கள் ஒன்றால் தான் அறியமுடியும் எது ஒன்று கட்டாயம் இருக்கிறது என்று ருசுப்படுத்தப்படுகிறதோ, அதையே 'இல்லை' யென்றும் ருசுப்படுத்துவதென்பது பெரும் அபத்தமாகவே முடியும். உலகமே ஒப்புக்கொள்ளுகின்ற மேற்கண்ட உண்மைத்தத்துவங்கள் கடவுள் விஷயத்தில மாத்திரம் பொய்யாக முடிகின்றன. ஏனெனில் கடவுளைப்பற்றிச் சொல்லப்படும் சகல விஷயங்களும் ஒன்று, விளங்காததாகவோ அல்லதுமுற்றிலும் மூறண் பட்டதாகவோ தானிருக்கின்றன. ஆகவே இந்தக்காரணத்தால் கடவுள் என்ற ஒன்று இருக்கவே முடியாது என்பது பகுத்தறிவுடைய எவனுக்கும் கட்டாயம் தோன்றியே தீரும்.

19. கடவுள் நிருபிக்கப்பட வேயில்லை.

பொதுவாக எல்லா மக்களுக்கும் பகுத்தறிவு ஏறக்குறைய சமமாகவேயிருக்கிறது. ஆனால் இந்தக்கடவுளைப்பற்றிய சாஸ்திரம் மாத்திரம் ஜனங்களுக்கு நன்கு விளக்கப்படாமலிருப்பதற்கு என்ன காரணமோ? அதிக நாகரீகமடைந்த தேசங்களும், மிகுந்த யோசனை சக்தியுள்ளவர்களும் கூட இவ்விஷயத்தில் மிகக்காட்டு மிராண்டிகள், தற்குறிகள், அறிவீனர்கள் முதலியவர்களைப் போலவேதானிருக்கிறார்கள். இந்த விஷயத்தை நாம் நெருங்கிப் பார்க்கப் பார்க்க, கடவுள் சாஸ்திரமானது வெறும்கற்பனைகளாலும் மனோராஜ்யத்தாலுமே கட்டப்பட்டிருக்கிறதென்பது புலப்படும். ஆகவே மதங்கள் என்பவைகள் எல்லாம் தர்க்க சாஸ்திரத்தில், "கேள்வியைக் கெஞ்சுவது" என்னும் முறையிலா தர்க்கத்தையே அஸ்திவாரமாகக்கொண்டிருக்கிறது. அதாவது இல்லாத ஒரு விஷயத்தைக் கற்பித்துக்கொண்டு அதிலிருந்து தர்க்கம் செய்து முடிவு செய்வதென்பதே மதங்களின் வேலையாகும்.

20. கடவுள் என்பது ஆத்மாவா?

மனோதத்துவ சாஸ்திரப்படி கடவுள் என்பது ஒரு ஆத்மா என்று சொல்லப்படுகிறது. ஆனால், தற்காலத்து மத சாஸ்திரமானது பண்டைய காலத்துக் காட்டுமிராண்டிகளின் மத சாஸ்திரத்தைவிட ஒரு படியாவது மேலேறியிருக்கிறதா? என்பதே கேள்வி. காட்டு மிராண்டிகள் இவ்வுலகத்திற்கே யஜமானனான ஒரு ஆத்மா இருக்கிறதென்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். இப்போதிருக்கும் அறிவீனர்களைப்போலவே, காட்டுமிராண்டிகளும் தங்களுடைய அனுபவக்குறைவினால் உண்மையை அறியமுடியாத விஷயங்களையெல்லாம் 'ஆவி' அல்லது 'ஆத்மா' விற்கே காரணமாக்கினர்கள். இதற்கு உதாரணம் வேண்டுமானால், இப்போதுகூட ஒரு காட்டுமிராண்டியினிடத்தில் ஒரு கெடியாரத்தைக்காட்டி, அதற்குள் சத்தம் போடுகிறது என்னவென்று கேட்டுப்பாருங்கள். உடனே 'ஆவி' என்றேபதில் சொல்வான். இதேமாதிரி நமது தத்துவ சாஸ்திரிகளைக்கூப்பிட்டு, இந்த உலகம் ஏன் அசைகிறதென்று கேளுங்கள். "ஆவி" யென்றே பதில் சொல்லுவார்கள்.

21. ஆத்மா என்பது ஒரு மனோராஜ்யம்.

காட்டு மிராண்டி சொல்லும் 'ஆவி' யென்பதிலாவது சிறிது அர்த்தமிருக்கிறது. ஏனெனில் அவன் 'ஆவி' யென்று சொல்லும் போது ஏதோ காற்றைப்போல ஒரு வஸ்து என்றே அல்லது மூச்சு விடுவதைப்போன்றதென்றே நினைத்துக்கொண்டாவது இருக்கிறான். ஆனால் நமது தற்கால தத்துவ ஞானிகளோ, தாங்கள் சொல்லும் 'ஆவி' க்குத்தங்களுக்கும் விளங்காமல் பிறருக்கும் விளங்காமலிருக்கும் படியான அர்த்தத்தையே சொல்வார்கள். அவர்களைக்கூப்பிட்டு "ஆத்மா" என்றால் என்ன என்று கேட்டுப்பாருங்கள். அது அறியமுடியாத ஒரு வஸ்து வென்றும்,

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.

மகாத்மா காந்தியடிகளுக்கு

ஓர் பகிரங்கக்கடிதம்.

மகாத்மாஜீ அவர்களே!

தமிழ்நாட்டில் காங்கிரஸ் வேலை சரிவர நடக்காமலும் சென்ற சத்யாக்கிரகப் போராட்டத்தில் தமிழ்நாடு மற்ற மாகாணங்களைப் போல், தேசத்தொண்டில் ஈடுபடாததற்குக் காரணம் என்ன என்பதை, நான் தங்களுக்கு தெரியப்படுத்துவது எனது கடமை என நினைக்கிறேன்.

காங்கிரசில் உள்ள பிராமணர்கள் செய்யும் சூழ்ச்சியே இந்நிலைக்குக் காரணம். சத்யாக்கிரகப் போராட்டகாலத்திலும், கற்சமயமும் தமிழ்நாட்டுத் தலைவர்களாயிருந்து காங்கிரஸ் பிரசாரம் செய்பவர்கள், பிராமணர்களே. சென்னையில் நடந்த சனாதனதர்மிகள் மகாநாட்டில் சாரதா சட்டத்தைக் கண்டித்தும், ருதுவானபின் விவாகம் செய்து ஸகத்துக்குப்போவதைக் காட்டிலும், பால்யவிவாகம் செய்து சாரதாசட்டத்தை மீறி நிறை செல்ல வேண்டுமென்று சொன்ன, திரு. சத்தியமூர்த்தி ஐயரும் திருப்பூரில் நடந்த தமிழ்மாகாண மகாநாட்டில், இந்துமதத்திலுள்ள சகல வகுப்பினருக்கும் ஆலயப்பிரவேசம் கொடுக்க வேண்டுமென்றும், சாஸ்திரத்தில் அநுமதிக்கவில்லையானாலும், அதைத்திருத்திக்கொள்ளவேண்டுமென்ற தீர்மானத்தை, ஈரோடு திரு. ஈ. வெ. இராமசாமி அவர்களால் கொண்டுவரப்பட்டு திரு. வி. கல்யாண சுந்தர முதலியார் வர்களால் ஆமோதிக்கப்பட்ட சமயம், பிராமணத்தலைவர்களெல்லாம் எதிர்த்ததும், சாஸ்திரத்தை நிறுத்துவதற்கு காங்கிரசுக்கு அதிகாரமில்லை என்றும், சாஸ்திரத்தை நிறுத்துவதற்கு பிராமணப் பண்டிதர்களுக்குத்தான் அதிகாரம் உண்டு என்றும் விவாதித்த, மதுரை வ. வைத்தியநாத ஐயருந்தான் தற்போழுது தமிழ் நாட்டில் காங்கிரஸ் தலைவர்களாயிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டு காங்கிரஸ் கமிட்டி தலைவராக இருப்பவர் திரு. ராஜகோபாலாச்சாரியார். காங்கிரஸ் தலைவர்களாக இருந்துகொண்டு, தங்கள் ஜாதியின் ஆதிக்கத்திற்கு எவ்வித கேடும் வராதபடி காத்துக்கொள்வதே இவர்களின் முக்கிய நோக்கம். தங்கள் ஜாதியின் நன்மைக்கு ஏதாவது ஆபத்து வருவதாயிருந்தால், அவர்கள் சிறிதும் கவலைப்படாமல் காங்கிரசைவிட்டு விலகிவிடுவார்கள். உதாரணமாக, சேர்மாதேவி குருகுலத்தில் பிராமணப் பிள்ளைகளுக்கு தனிமையாகவும் மற்ற பிள்ளைகளுக்கு தனிமையாகவும் சாப்பாடு போட்டுவரும் பொழுது, அந்த சமயத்தில் காங்கிரசில் தீவிரமாய் வேலைசெய்து, தமிழ்நாட்டில் காங்கிரஸ் இயக்கத்துக்கே பத்துபேர் ஊழியத்தை, ஈரோடு ஈ. வெ. இராமசாமி, சேலம் டாக்டர், பி. வரதராஜலு நாயுடு, எஸ். ராமநாதன், முதலான வர்கள், மேலே கண்ட அக்கிரமத்தை நீக்கி, எல்லாப் பிள்ளைகளுக்கும் சமத்துவமான போஜனம் செய்விக்க வேண்டுமென்று, பிராமணத் தலைவர்களிடம் எவ்வளவோ சொல்லியும் கேளாமல், தமிழ் நாட்டில் பல இடங்களில் மேல்சொன்ன கொடுமையைப் பற்றி பிரசாரம் செய்தும் பயன்படாமல் திருச்சியில் நடந்த தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியில் குருகுலத்தில் நடக்கும் கொடுமையைக் கண்டித்து எல்லாப் பிள்ளைகளுக்கும் சமத்துவமான சாப்பாடு போடவேண்டுமென்று தீர்மானம் கொண்டுவந்து நிறை வேற்ற அதன் காரணமாக அவ்விடத்திலேயே திருவாளர்கள். ராஜகோபாலாச்சாரியார், டாக்டர் ராஜன், எம். கே. ஆச்சாரியார் முதலான பிராமணத் தலைவர்கள் காங்கிரஸ் கமிட்டியில் ராஜினாமா கொடுத்து விட்டுப் போய்விட்டார்கள்.

கற்சமயம் குருகுலமும்போய் அதன் சொந்தக்காரரே. மகாதேவ அய்யர் என்னும் பிராமணர், தன் சொந்த உபயோகமாக எடுத்துக்கொண்டார். தீண்டாமை ஒழிந்ததாகப் பாவனை காட்டுவரும், கற்சமயம் காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருப்பவரான திரு. ராஜகோபாலாச்சாரியாரே சமத்துவம் கொடுப்பதற்கு சம்மதியாமலிருந்தாரென்றும், மற்ற பிராமணர்களைப் பற்றச் சொல்லவும் வேண்டுமா? இன்னும் பிராமணத் தலைவர்கள் செய்யும் சூழ்ச்சியும் சுயநலத்தையும் பற்றி பல உதாரணங்கள் நான் சொல்லுவதற்குத் தயாராயிருக்கிறேன். விஷயம் நீடுமென்பதால் இரண்டு விஷயத்தை மாத்திரம் தெரியப்படுத்துகிறேன். இவ்வருஷம் நடைபெற வேண்டியிருக்கிற காங்கிரஸ் வேலைத் திட்டத்தில் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் 18—5—31ல் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அவ்வறிக்கையில் ஒவ்வொரு ஜில்லாவும் காங்கிரசுக்காக 5000 ரூபாய் கொடுக்கவேண்டுமென்றும், இவ்வருஷம் தமிழ்நாட்டில் செய்யவேண்டிய வேலைகள் என்பதாக 8 திட்டங்கள் வெளியிட்டிருக்கிறார். 8 திட்டங்களில் தீண்டாமையைப் பற்றி ஒரு வார்த்தைகூட எழுதவில்லை. தீண்டாமைப் பேச்சையே அடியோடு விலக்கிவிட்டார். இந்த அக்கிரமத்திற்குத் தாங்கள் என்னபதில் சொல்லுகிறீர்கள்?

தமிழ் நாட்டிலுள்ள ண்டாமைக் கொடுமையும், ஆதிதிராவிடர்கள் நாய், பன்றி, மூதலிய மிருகங்களிலும் கேவலமாய் நடத்தப் படுவதையும், மேல் ஜாதி இந்துக்களால் அவர்கள் படும் கஷ்டத்தையும் தாங்கள் நன்றாய்த்தெரிந்திருப்பீர்கள். எங்கள் ஜில்லாவாகிய இராமநாதபுரத்தில் ஆதிதிராவிடப் பெண்கள் சேலையை இடுப்புக்குமேல் போடக் கூடாதென்றும், மார்பை மறைக்கக்கூடாதென்றும், பெண்களோ, ஆண்களோ பூ வைக்கக் கூடாதென்றும், ஆண் பிள்ளைகள் மேலே வேஷ்டி போடாமலும், முழங்காலுக்குக்கீழ் வேஷ்டி கட்டாமல் இருக்கவேண்டுமென்றும் இந்துக்களால் அவர்களுக்கு இடப்பட்டிருக்கும் கட்டளைகளை அடிப்பதுபோல் அடித்துத் துன்புறுத்துவதும், அவர்கள் குடிசைகளில் தீ வைப்பதும் இன்னும் சொல்ல முடியாத கஷ்டங்களையும் மேல் ஜாதி இந்துக்கள் செய்துவருகிறார்கள். இவ்விதக் கொடுமைகளைப்பற்றி, தமிழ்நாட்டிலுள்ள காங்கிரஸ் தலைவர்கள் ஒருவார்த்தையாவது பேசுவதுகிடையாது. தாங்கள் சென்னைட்டுக்கு விஜயம் செய்தால் சேரில் தங்களுக்கு இதை சுட்டுமைகளைக்காட்டத் தயாராகயிருக்கிறேன்.

இன்னும் திரு. ராஜகோபாலாச்சாரியாரும், மற்ற பிராமணத் தலைவர்களும், பிரசாரம் செய்யச் செல்லுமிடங்களிலெல்லாம், தீண்டாமையைப்பற்றிஒரு வார்த்தை கூட பேசுவது கிடையாது. அதற்குப்பதிலாக தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்தக்கூடிய, புராணப்பிரசங்கங்களை, இடையிடையே புகுத்துகிறார்கள். இன்னும் விளக்கமாக திரு. ராஜகோபாலாச்சாரியாரைப்பற்றி, தங்களுக்கு தெரியப்படுத்துவது என்னவென்றால், 16-5-31ல் நடந்த சேலம் ஆதிதிராவிடர் மகாநாட்டில் தீண்டாமை ஒழிந்தால் தான் சுயராஜியம் கிடைக்குமென மகாத்மா காந்தி ஒருயிடத்திலும் கூறவில்லை என்றும், சுயராஜிபம் கிடைத்தபின் தீண்டாமை ஒழிந்துபோமென்றும் பேசியிருக்கிறார்கள்.

தீண்டாதாருக்காக பலவழிகளிலும் முயற்சி செய்யும், மகாத்மாஜீ அவர்களே!

தாங்கள் தீண்டாமை ஒழிந்தால்தான் சுயராஜியம் கிடைக்குமெனவும், நம்மவரில் சிலருக்கு சமத்துவம் கொடுக்க மறுக்கும் நாம், அன்னியரிடம் சமத்துவத்திற்காக எவ்விதம் போராடுவது என்றும், தாங்கள் பலதடவைகளில் சொல்லவில்லையா? தாங்கள் தென்னாட்டு விஜயத்தின் போது, சென்னையிலும் பிறஇடங்களிலும், தீண்டாமை ஒழித்தலைப்பற்றி எவ்வளவு வற்புறுத்திப் பேசியிருக்கிறீர்கள். அவ்விதமிருக்க, எவ்வளவு தைரியமாக, திரு. ராஜகோபாலாச்சாரியார் ஆதிதிராவிடர் மகாநாட்டில் மறைத்துப்பேசுகிறார் என்பதைத் தாங்களேதெரிந்து கொள்ளுங்கள். தங்களுக்கு முன்னிலையில் தீண்டாமை ஒழிந்ததாக பாவனைகாட்டுவதும், இவ்விடம் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்த காங்கிரசை உபயோகப்படுத்துவதுமாகுல், இவர்களை நம்பி, ஆதிதிராவிடர்களும், பிராமணரல்லாதாரும், எவ்விதம் காங்கிரசில் சேருவது? பிராமணர்களின் வஞ்சகச்செயலை முன்னிட்டே தமிழ் நாட்டு காங்கிரஸ் வேலையில தீவிரமாய் ஈடுபட்டு, சிறைசென்றுகஷ்டப்பட்டவர்களான, திருவாளர்கள் ஈ வெ. சாமசாமி, டாக்டர் வரதராஜலு நாயுடு, மாஜி அகில பாரதசர்க்கார் சங்கத்காரியதரிசி, எஸ். ராமநாதன், என். சண்டபாணி, வி. ஓ. சிதம்பரம்பிள்ளை சுரேந்திரநாத் ஆரியா, ஜார்ஜ் ஜோசப், முதலானவர்களும் ஸ்ரீ. கே. ஷண்முகம், திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் போன்றவர்களும், காங்கிரசில் சேராமல் ஒதுங்கியிருக்கிறார்கள். ஆகையால் தாங்கள் திரு ராஜகோபாலாச்சாரியாரின் வேலைத்திட்டத்தில், தீண்டாமையைப்பற்றி விட்டிருக்கும் விஷயத்தை கண்டித்து பத்திரிகை மூலமாய் பதில் எழுதுவீர்களென நம்புகிறேன்.

தங்கள் கீழ்படிதலுள்ள

ஞா. பி. ஞானதேசிகம்.

பொருளாதாரம்.

சென்னிமலையில் இராமசாமி சொற்பொழிவு.

சகோதரர்களே!

பொருளாதார மென்னும் விஷயத்தைப்பற்றி என்னை பேசும்படி கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். பணம் சம்பாதிப்பதிலும், வருமானம் அடைவதிலும் நம்நாட்டு மக்கள் எத்தகில்லைமையிலிருக்கிறார்கள்? அவர்களுக்கு அத்தகைய பொருளாதார மென்ன பலனளிக்கின்றது? அவர்களுக்கதில் வருவாய் கிட்டவும் அது தக்கபயனளிக்கவும் வழியென்ன? என்பனைகள் போன்றதான் பொருளாதார மென்பதை பற்றி நான் பேசப்போகும் விஷயத்தில் முக்கிய கவனிப்பாகும். ஆகவே இவ்விஷயங்களில் நமது நாட்டிற்கும் உலகிலுள்ள மற்ற நாடுகளுக்கு முள்ள வித்தியாசத்தைக் முதலில் கவனிக்கப்பட வேண்டும். பொருளாதாரத்தில் மேல் நாட்டார் சராசரியாக ஒவ்வொரு நபரும் தினம் 2 ரூபாய் வீதம் சம்பாதிக்கிறார்கள். நாட்டார்களோ சராசரியாக ஒவ்வொருவரும் தினம் 2 அணை வீதமே சம்பாதிக்கின்றார்களென்பதை யாவரும் அறிந்த விஷயம். அன்றியும் இதுவே நம் நாட்டுப்பொருளாதாரப் பிரச்சினைக்கு முக்கிய பலவீனமாகும். இது உங்களுக்கே விருத்தமாகவே விருக்கலாம். ஏனெனில் மேல் நாட்டில் பல லக்ஷரூபாய் சம்பாதிப்பவனிலிருந்து தினம் கால் அணை சம்பாதிப்பவன் வரையில் சகலரையும் ஒட்டு மொத்தம் கணக்கு சேர்த்துப்பிரித்து வருகிறதுப்பார்த்தால் ஆளொன்றுக்கு வருமானம் ரூ 2-0-0 ஆகும். அதைப் போலவே இந்திய நாட்டின் பெரிய ஜமீன் தாரனிலிருந்து மகாராஜாக்கள் வரையிலிருந்து மாதாதிபதி வரையிலிருந்து தினம் ஒரு கசு பிரசை எடுப்பதன் வரையில் ஒட்டு மொத்தம் கணக்குப் பார்த்து ஆள் ஒன்றுக்கு வருமான மென்ன வாகுமென்று பிரித்து காவு பார்த்தால் ஆள் ஒன்றுக்கு 2 அணை வீதமே வரும்

இவ்விதம் மேல்நாட்டில் வருமான மந்திக மாவதற்கும் அதாவது சராசரி ரூ 2-0-0 வருமானமாவதற்கும், நமது நாட்டில் வரும் வரும்படி குறைவதற்கும், அது ஆள் ஒன்றுக்கு சராசரி 0-2-0 அணையே கிடைப்பதற்கும் காரணமென்ன வென்பதைக்கண்டு பிடிப்பதுதான் பொருளாதாரம் பிரச்சினையில் முக்கிய மானதாயிருக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். மேல் நாட்டான் பணம் சம்பாதிக்க வென்று உழைக்கிறான். நாமும் அது போலவே தானுழைக்கிறோம். ஆனால் தினம் 0-2-0 அணை சம்பாதிப்பதற்கு நமது மக்கள் படுகின்ற கஷ்டத்தினளவு மேல் நாட்டில் தினம் ரூ 2-0-0 சம்பாதிக்கின்ற ஆட்கள் கஷ்டப்படுவதில்லை. சம்பாதனை விஷயத்தில் நமது கஷ்டமும் சரீரப்பிரயாசையும் சிறிதும் குறைந்த பாடில்லை. ஆனால் நாட்டு வளப்பத்தில் நம் நாட்டை விட மேல் நாடு சிறந்ததென்று யாரும் திட்டமாய் சொல்லுவார்களென்று தெரியவில்லை. அப்படியிருக்க அதாவது வளமுள்ள நாட்டிலிருப்பவன் தினம் இரண்டணை யும் வளமில்லா தேசத்திலிருப்பவன் தினம் ஐந்து ரூபாயும் சம்பாதிக்கக் காரண மென்ன என்பதில் தான் பொருளாதாரப் பிரச்சினையின் சாவி இருக்கின்றது. வளவளம், நீர்வளம், நிலவளம், செழிப்பு வாய்ந்த மூலப் பொருள்கள் பல தானியங்கள் விளைவுக்கு வேண்டிய சௌகரியங்கள் யாவை மற்ற நாடுகளைவிட நமது நாட்டிலதிக முண்டல்லவ? இதை வசய வனம் கொழுத்த மேது நாட்டில், செல்வத்திற்கோ வொன்று ஒரு தனி கடவுளையும் ஏற்படுத்திக்கொண்டு, அதற்காக பூஜை கைங்கரியம் உத்சவம் பிரார்த்தனை முதலியவைகளும் செய்து வரும் நமது நாட்டில் "தரித்திரம் தலைவிரித்தாட" க்காரணமென்ன? மக்கள் சுயமாயிருக்க வேலையில்லாமல் கட்டத்தணியில்லாமல் உண்ணஉணவில்லாமல் வருந்துகிறார்கள் வதற்குகிறார்களென்று சொல்லப் படக்காரணமென்ன? வென்பதைக்கண்டு பிடிக்க வேண்டும். இதற்காரணத்தினுடையைவைக்கண்டு பிடித்து விட்டால் பொருளாதார பிரச்சினை ஒரு சுலபமாகத்தீர்ந்து விடும்

பொருளாதார சீர்திருத்த சிபுணர்களுக்கு இந்த விடத்தில் தான் நிஜமே லே யிருக்கிறது. இதைக்கண்டுபிடித்து சேர்த்து செய்யாமல் 'நமது செல்வம் கொள்ளை போகின்றது! செல்வம் போகின்றது!!' வென்ன பேசுவதால் — தலையிலும், வாயிலும், வயிற்றிலுமடித்துக் கொள்வதாலெருயனுமே தண்டா காதென்பது எனது அபிப்பிராயம்.

உண் மையைப் பேசத்துணிந்தோமாயினால் 1. இந்நாட்டில் தொருளாதாரக்கஷ்டமிருக்கின்றதா? 2. நிருக்காயாருக்கிருக்கின்றது? 3 அது எனிருக்கின்றது? 4 யாரால்விருக்கின்றது? என்பனைகளாகிய விஷயங்களில் சுவனம் செலுத்திப்பார்த்து ஒரு முடிவுக்கு வந்தோமானால் அந்த முடிவின் அபிப்பிராயங்கள் இந்நாட்டுப் பெரியோர்கள் தலைவர்கள் என்பவர்களது அபிப்பிராயங்களுக்கு விரோதமாகவே இருக்கும். இருந்தாலும் இவ்விஷயங்களில் எனக்குத்தோன்றிய உண்மையை உங்கள் முன் பேசவிரும்புகிறேன்.

சகோதரர்களே! இன்று பொருளாதாரக் கஷ்டமென எங்காவது உண்மையிலிருக்கின்றதா? விலைபங்கள் நடைபெறுகின்றன. தெழில்கள் நடைபெறுகின்றன. சில இலட்சம் பிறவிப்பிச்சைக்காரர்கள் தவிர, சில கோடி பிறவிச்சோம்பேறிகள் தவிர மற்ற மக்களெல்லோரும் வேலை செய்கின்றார்கள். 1 000, 10,000, 1,00,000, 10,00,000, 100 00 000, 1,00 000 000 ரூபாய்களென்பதான சொத்துக்கள் கொண்ட செல்வவான்கள் நமது நாட்டிலில்லையா? 100 1 000, 10 000 1 00 000, 10.00 000 பல 10 00,000 ரூபாய்களென்பதான வருஷ வருமபடியைக் கொண்டவரும்படிக்காரர்கள் நமது நாட்டிலில்லையா? மாதம் ஒன்றுக்கு 10, 100, 1,000 10 000 ரூபாய்கள் வீதம் சம்பளமும், சம்பாதனையுமானவரும் படியுள்ள உத்தியோகஸ்தர்கள் வக்கீல்கள், வைத்தியர்கள் முதலிய மக்கள் நமது நாட்டிலில்லையா? ஒவ்வொரு வீடுகளில் 1 000, 10 000, 1 00 000 ரூபாய் பெறுமதியான நகைகளும், 1 000 10,000 1,00 000, 2 00,000 பெறுமான கட்டடங்களும் கோட்டை கொத்தளம் பேன்ற வீடுடையவர்களும் நமது நாட்டிலில்லையா? வென்று யோசித்துப்பாருங்க . பூமி விவசாயநிலம் ஒன்றுக்கு 5, 10, 100 1 000, 10 000 20 000, 50 000 வீதம் விலைகொண்ட பூமியையும் வயல்களையும், தோட்டங்களையும், மேல்களையும், சோலைகளையும், அவற்றின் அழகிய வீடோட்டங்களையும் கொண்ட மக்கள் நமது நாட்டிலில்லையா? பெரிய பெரிய நகைகள், வாய்ச்சல்கள், ஓடைகள், எரிகள் நமது நாட்டிலில்லையா? என்று யோசனை செய்து பாருங்கள். ஆகவே இந்த நாட்டில் செல்வமில்லை என்று எப்படி, எந்த ஆதாரத்தைக்கொண்டு சொல்லக்கூடும்? என்பதை சற்றாவது நிலைமையிலிருந்து சிந்தித்துப் பாருங்கள். எனவே, சகோதரர்களே! இவ்வளவு செல்வமிருக்கும்போது இந்த நாட்டைப் பொருளாதாரக் கஷ்டமிருக்கின்ற தாக எப்படி சொல்ல முடியும்? அப்படித்தானெனக்காயதிருப்பதாக சொல்லுவதானால், யாருக்குப் பொருளாதாரக்கஷ்டமிருக்கின்றது? பாடுபடுகின்றவர்களாய், பாமர மக்களாயிருக்கின்ற—சாது ஜனங்களாக இருக்கின்றவர்களுக்கும், எந்தக் காலத்திலும் எந்த விதத்திலும் பொருளாதாரமுள்ளவர்களாகவே இருந்து தீரவேண்டுமென்று நிர்பந்தப்படுத்தப்பட்டிருக்கின்றவர்களுக்குமேயல்லாது, மற்றபடி யாருக்குப் பொருளாதார கஷ்டமிருக்கின்றது? என்று உங்களை நான் கேட்கின்றேன்.

தகுதியுள்ள ஜாதியரென்றும், மேன்மையுணர்ச்சியென்றும், பாடுபடுவதற்கு உரிமையில்லாதவர்களென்று மேற்பாடு செய்துகொண்டதான தீண்டாதார்க்கஷ்டமிருக்கின்றது? என்று பார்த்தீர்களானால் இத்தகுட்டத்தாருக்கு எக்காலத்தும் சிறிதாவது பொருளாதாரக்கஷ்டமிருப்பதாகவோ, ஜீவனத்திற்குக்கஷ்டப்படவேண்டியிருப்பதாகவோ, அதனால் பசியுடன் வாடிக்கொண்டோ, கல்விகற்க மார்க்கமில்லாமலோ இருப்பதாக நீங்கள் சொல்ல முடியுமா? என்பது உங்களுக்கு விளங்கும்.

ஆகவே, இந்தக் கூட்டத்தவர்களல்ல மற்றவர்களுக்குப் பொருளாதாரக் கஷ்டமென்பதிங்காட்டிலே னிருக்கின்றது? யாராலிருக்கின்றது? என்பதை இப்போது யோசித்துப்பாருங்கள். அப்போதுதான் நாட்டிலுள்ள செல்வங்களோ சகல மக்களும் சரியாய் அனுபவிக்கமுடியாமலிருக்கும் படிக்குச், பாடுபடுகின்றவன் பட்டினியாகவும், சோம்பேறியாயிருப்பவன் கண்ணுக்குத் தாராளமாய் சாதாரண அளவுக்கதிகமோ மடங்குமாயலுப விருத்தியாகிக்கொண்டு வாழும்படியாகவுமிருப்பதும் அதற்கு ஆதாரமாக நமது சமூகவாழ்க்கைக்கோ மதிலுகளுக்கோ ஏற்படுத்திவைத்திருக்கும் சூக்ஷியும், பித்தலாட்டமும், ஏமாற்றமும் உங்களுக்கு விளங்குவதோடு இதைத்தவிர மற்றபடி வேறொன்றும் 'பொருளாதாரக்கஷ்டத்திற்கு' காரணமில்லை யென்பதை உணருவீர்கள்.

சகோதரர்களே! இப்படியாய்த்திட்டம் செய்வதற்கு மூலகாரணஸ்தானமாயிருப்பவர்கள் மேல்ஜாதியார். மேல்சுருணத்தாரென்கின்ற சூக்ஷிக்கார சோம்பேறி வாழ்க்கைக் கூட்டத்தார்களா? இல்லையா? வென்று யோசித்துப் பாருங்கள். ஆகவே, இப்படிப்பட்ட நிலைமையில், இந்நாட்டிலிருப்பதாய் சொல்லப்படும் பொருளாதாரக்கஷ்டத்தை எப்படி யொழிப்பதென்பதுதான் இனி முக்கியப்பிரச்சினையாக யோசிக்கப்படவேண்டும்.

சகோதரர்களே! இந்த இடத்திலுங்களது நியாயமான புத்தியையும், நடு நிலைமையான மனத்தையும் செலுத்திப் பாருங்கள். பொருளாதாரக் கஷ்டத்தின் தத்துவங்கள் சுலபமாக உங்களுக்கு விளங்குவதற்கு ஒரு சிறு உதாரணம் சொல்லுகின்றேன், இன்றைபத்தினம் ரூ. 1-க்கு பட்டணம் படியிலால் 6 படி தரிசி விற்கும்படியான நிலைமை நம் நாட்டில் இருக்கும் (அதாவது ஒரு தம்படிக்கு ஒரு பெரிய இட்டலி விற்கக்கூடிய அளவு மலிவாக இருக்கிறது) இன்று ஒரு மனிதன் ஒரு இட்டலி 6 தம்படி கொடுத்து வாங்குவதும் அதே இட்டலியை வேறு ஒருவன் ஒரு தம்படிக்கோ அல்லது இரண்டு தம்படிக்கோ விற்றால்கூட அவனிடம் வாங்காமலசகியிலை கொடுத்து வாங்கி, கஷ்டமடைந்து வரும்ரா இட்டலி வாங்கி சாப்பி கூடச் சௌகரியமில்லாமல் கஷ்டப்படுவதும், அதில் விலக்கு விற்பவன் பண்டு பின்னாகள் கொம்பு, வைரக்கம்மல், தட்டிகையும்,

[தொடர்ச்சி 15-ம பகுதியை பாருங்கள்]

சேலத்தில் சுயமரியாதைச்சங்க கட்டிடத் திறப்புவிழா.

5000 பேர்கள் கொண்ட பெரிய கூட்டம்

தலைவர் திவான் பகதூர்
S. எல்லப்பசெட்டியார்.

கட்டிடத்தை திறந்தவர்,
மந்திரி கனம் P. T. ராஜன்.

R. K. ஷண்முகம் சொற்பொழிவு

29—6—31 தேதி திங்கட் கிழமை காலையில் திருவாளர்கள் சென்னை அரசாங்க மந்திரி கனம் பி.டி.இராஜன், அவர்தர்காரியதரிசி தாஜ்மூன் பகதூர், ஈ.வெ. இராமசாமி, கைவல்ய சாமியார், சௌ. முருகப்பா, மரகதவல்லி அம்மையார், எ. ஆர். சிவானந்தம் முதலியவர்கள் சேலம் ஜங்ஷன் ஸ்டேஷனில் இறங்கினார்கள்.

திருவாளர்கள் சேர்மென் சடகோப முதலியார், ஜில்லா போர்டு தலைவர் திவான்பகதூர் எல்லப்ப செட்டியார், தாலூகா போர்டு தலைவர் ராஜமாணிக்கபண்டாரம், சேலம் சுயமரியாதைச்சங்கத் தலைவர் அர்த்தனரி செட்டியார், காரியதரிசி சந்தியப்ப செட்டியார், வக்கீல் ஐயாசாமி, சிவபெருமாள் பிள்ளை, வக்கீல் பாலசாமி முதலிய அநேக கனவான்கள் மேடையிலிருந்து மந்திரியையும் மற்ற கனவான்களையும் மாலை சூட்டி வரவேற்று மோட்டாரில் அழைத்துச் சென்றார்கள். வழியில் பலர் மாலையிட்டார்கள். மந்திரியவர்கள் திரு. ராஜமாணிக்க பண்டாரம் அவர்கள் பங்களாவிலும் மற்றவர்கள் மாஜி சேர்மென் தம்மண்ண செட்டியாரவர்கள் பங்களாவிலும் ஜாகை அளிக்கப்பட்டார்கள்.

காலை சிற்றுண்டி முடிந்தவுடன் உள்ளூர் பிரமுகர்கள் அனேகர்களும் ஆதிதிராவிடர் சமூகத் தலைவர்களும் திரு. தம்மண்ணசெட்டியார் அவர்கள் பங்களாவிற்கு வந்து பல விஷயங்களைப்பற்றி பேசிக்கொண்டிருந்து விட்டுபோனார்கள்.

காலை சிற்றுண்டியும் பகல் விருந்தும் நடந்த பிறகு பிற்பகல் 3 மணிக்கு மந்திரி கனம் இராஜன், கோவை திரு. ஆர். கே. ஷண்முகம் முதலியவர்களும் மற்றும் திருவாளர்கள் ஈ. வெ. இராமசாமி, முருகப்பா, கைவல்யசாமியார், மரகதவல்லியம்மையார், எ. ஆர். சிவானந்தம்முதலியவர்களும் மாலைகள் சூட்டப்பட்டு சங்கக் கட்டடத்திற்கு அழைத்துச்சென்றார்கள்.

மழை பெய்து கொண்டிருந்தும் சங்கக்கட்டடத்திலும் விழாவில் கொண்டாடப்போடப்பட்ட பெரிய பந்தலிலும் ஏராளமான பெண்களும் ஆண்களுமாக சுமார் 5000 பேர்கள் கூடிவிட்டார்கள். இதுவே முதல் கட்டடத்திறப்பு விழா ஆனதால் விழாவிற்கு என்று ஆத்தூர், எத்தாப்பூர், ஓமலூர், ஜலகண்டாபுரம், நாமக்கல், இராசிபுரம, திருச்சங்கோடு, தாரமபுரி, வேலூர், ஜோலார் பேட்டை, வாணியம்பாடி, கோயமுத்தூர், ஈரோடு, முசிரி முதலிய வெளியிடங்களிலிருந்து அநேகம் பெயர்கள் வந்திருந்தார்கள். பந்தலில் இடமில்லாமல் ரோட்டுகளில் ஜனங்கள் நடக்க சௌகரியமில்லாமல் கூட்டம் கூடிவிட்டது திறப்பு விழா துவக்கம் செய்ததும் மழை சற்று வலுத்துவிட்டதால் ஜனங்கள் கலைய வேண்டியதாயிற்று என்றாலும் மறுபடியும் மழை சற்று நின்றவுடன் விழா துவக்கப்பட்டது.

விழாவிற்கு ஜனங்கள் நின்று கொண்டும் சேற்றிலுட்கார்ந்து கொண்டிருக்கவேண்டியதாயிருந்தாலும் கூட்டம் சிறிதும் கலையவில்லை.

விழாவிற்கு திவான்பகதூர் எஸ். எல்லப்ப செட்டியாரவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டு அக்கிராசனத்தமர்ந்ததும் முகவுரையாக சுயமரியாதை இயக்கத்தின் அவசியத்தையும் பெருமையையும் எடுத்து மிக அழகாகவும் தெளிவாகவும் பேசினார்.

பிறகு மந்திரிக்கும் அக்கிராசனருக்கும் உபசாரப்பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டன.

மந்திரி கனம் பி. டி. இராஜன் அவர்கள் சொற்பொழிவு.

கனம் இராஜன் அவர்கள் கட்டடத்தைத் திறப்பதற்கு முன் பேசியதாவது:—

தலைவரவர்களே!

சகோதரர்களே!!

சுயமரியாதைச் சங்கமென்பது தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தைச்சேர்ந்ததேயாகும் தென்னிந்திய சீர்திருத்தச்சங்கம் செய்ய வேண்டிய சமூக சீர்திருத்த வேலைகளையே சுயமரியாதைச் சங்கம் ஏற்றுக்கொண்டு வேலைசெய்து வருகின்றது.

சுயமரியாதைச் சங்கம் அவசியமே தான்.

சுயமரியாதைச்சங்கம் செய்யும் சீர்திருத்த வேலையைப்பற்றியும் அதன் கொள்கைகளைப்பற்றியும் குற்றம் சொல்லுகின்றவர்கள் அச்சங்கம் பாருடைய குற்றங்களிலிருந்து சமாளிக்க வேண்டுமென்று கருதி அக்குற்றங்களை சீர்திருத்தப் பாடுபடுகின்றார்களோ அந்தக் குற்றவாளிகளேயாவார்கள். குற்றவாளிகளின் குற்றத்தை எடுத்துச் சொல்லி திருத்தப்பாடு செய்யப்பாடுபடுபவர்கள் குற்றவாளிகளால் குற்றம் சொல்லப்படுவது இயற்கையேயாகும். நம்முடைய சுயமரியாதைச்சங்கம் ஏற்படக்காரணமாயிருந்தவர்கள் இன்று நம்மைக் குற்றம் சொல்லும் குற்றவாளிகளேயாவார்கள். அவர்கள் திருந்திக்கொண்டால் நமக்கு சுயமரியாதைச் சங்கம் வேண்டியதில்லை. இந்த இயக்கம் வெகு நன்றாய் மிகுந்த புத்திசாலித்தனத்துடன் ஆரம்பிக்கப்பட்டு மிக ஒழுங்காயும் பயனுள்ளதாயும் நடைபெற்று வருகின்றது. இன்னும் இது வெகு தூரம் பாவி அநேக பயனுள்ள வேலையை செய்யப்போகின்றது. சுயமரியாதை இயக்கம் நாஸ்திக இயக்கமல்ல.

சிலர் இதை தப்பர்த்தம்செய்கின்றார்கள் என்பது எனக்குத்தெரியும். இது நாஸ்திக இயக்கமாட! கண்டிப்பாய் அப்படியல்ல. சமூகத்துறையில் வெகுகாலமாயிருந்துவரும் குறைபாடுகளையொழிக்க முனைந்து வேலை செய்யும் போது குறைபாடுகளில் ஈடுபட்டவர்களுக்கு இவ்விதம் தோன்றுகின்றது.

மதங்கள் அழிபடவேண்டும்:

மதத்தையும் சமூகத்துறையையும் ஒன்றுபடுத்திக்கொண்ட மக்கள் சமூகத்துறை சீர்திருத்தம் ஏற்படும் காலங்களில் இந்தப்படிதான் சொல்லப்படுவது சகஜமேயாகும். மனித முன்னேற்றத்திற்கு இடையூறான எல்லா மதங்களும் எல்லா சாஸ்திரங்களும் கொளுத்தப்படவேண்டியதுதான். ஆனால் கடவுள் இருக்கவேண்டும். ஏனெனில் மனித சமூக முன்னேற்றத்திற்கு எந்தக்கடவுளும் தடையாயிருக்கமாட்டாது. கடவுளுக்குத் தரகர் முறையும் ஒழிக்கப்படவேண்டியதுதான். ஆதலால் நமது முயற்சிகள் நாஸ்திகமானதென்று யாரும் பயப்படவேண்டியதில்லை.

தீண்டாமையும், சுயமரியாதை இயக்கமும்:

இன்று இந்தநாட்டில் மனிதனுக்கு பிறப்புரிமைகூட இல்லையென்றால் யார் பொறுத்துக்கொண்டிருப்பார்கள்? கஷ்டப்படுகின்றவர்கள் காப்பாற்றப்பட்டாகவேண்டுமென்பது எப்படி நாஸ்திகமாகும்? அந்த வேலையைச் செய்யவேதான் நமது சுயமரியாதை இயக்கம் இருக்கின்றது. இதை இனியாரும் மறைத்துவிடமுடியாது. நான் இரண்டு வருஷத்திற்கு முன் இங்கு வந்து இதேகட்டிட

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க

திருச்சியில் ஆதிதிராவிட மகாநாடு.

"இஸ்லாம் மதத்தைத்தழுவவேண்டியதே தீண்டாமை ஒழியும் மார்க்கம்"

"மூஸ்லீம்களும் கிறிஸ்தவர்களும் ஆதிதிராவிடர் களும் ஒன்று கூடவேண்டும்."

திருச்சி ஜில்லா தேவவேந்திரகுல வேளாளர் மகாநாடு என்னும் பெயரால், திருச்சி ஜில்லா ஆதிதிராவிடர்கள் மகாநாடானது 28-உ சனிஜ ஜஸ்டிஸ் பத்திரிகை ஆசிரியர் திரு. டி. எ. வி. நாதன் அவர்கள் தலைமையில் கூடிற்று. திரு ஏ. வையாபுரி அவர்கள் வரவேற்புத் தலைவராயிருந்தார். நிறைவேறிய தீர்மானங்களின் சுருக்கம்.

கூத்தப்பார் கிராமத்தில் இந்து மதத்தைச் சேர்ந்த கள்ளர் என்பவர்கள் செய்த கொடுமையால் அடிபட்டு, காயப்பட்டு ஆஸ்பத்திரியில இருப்பவர்களிடம் அனுதாபமகாட்டுகின்றதுடன், சர்க்காரைத் தக்கநடவடிக்கைஎடுத்து நியாயம் செலுத்தக்கோருகின்றது.

காங்கிரஸ் சார்பாய் இந்து மூஸ்லீம் பிரச்சினை தீராமல்மகாத்மா லண்டனுக்குப்போவதில்லை என்று சொன்னதைடபோல் தீண்டாதார் விஷயத்திலும் கவனித்துக் கொளள வேண்டுமென்று தீண்டாதார் கேட்டுக்கொண்டதை சிறிதும் கவனியாமல் மகாத்மாவை லண்டன் போக சொன்ன காரியக்கமிட்டி தீர்மானத்திற்கு வருந்துகின்றது.

புதிய அரசியலில் இந்துக்கள் ஆதிக்கத்தில் இருந்து தப்புவதற்கு கிறிஸ்துவர்கள், முஸ்லீம்கள், ஆதிதிராவிடர்கள் ஆகிய சிறுபான்மையோர் ஒன்று சோந்துகொள்ள வேண்டும். இந்த மூன்று கூட்டத்தாருக்குமாக ஒரு மகாநாடு சீக்கிரத்தில் கூட்டவேண்டும்.

காங்கிரசு தீண்டாமையை ஒழிக்க, செய்கையில் ஒன்றும் செய்யாததால் விசனிப்பதுடன் சீக்கிரம் தீண்டாமை ஒழிக்கப்படாவிட்டால், தாழ்த்தப்பட்டவர்கள் அனைவரும் இஸ்லாம் மதத்தைத்தழுவ வேண்டும்.

தங்கள் சமூகத்தை இனி தேவேந்திரகுல வேளாளர் என அரசாங்க ரிகார்டுகளில் பதிய வேண்டும்.

லேபர் டிபார்ட்டுமெண்ட் தங்கள் விஷயத்தில் சரியானபடி நடந்த கொள்வதில்லை.

லேபர் கமிஷனரிடம் நம்பிக்கையில்லை.

திருச்சி ஜில்லாவில் போதனமுறையில் லோயர் கிரேடை எடுக்கக்கூடாது.

பெரம்பலூரில் குடிக்க தண்ணீர் எடுக்க முடியாமல் இந்துக்கள் தடுப்பதை கண்டிக்கின்றது. சர்க்காரர் இதைசீக்கிரம் சரிபண்ணிவிட்டால் சுயமரியாதைக் காரருடன் கலந்து சத்தியாக்கிரகம் செய்ய வேண்டும்.

தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித்தொகுதி வேண்டும்.

தாழ்த்தப்பட்ட கிறிஸ்துவர்களுக்கும் தனித்தொகுதி வேண்டும்.

கோபிசெட்டி பாளையம் கூகலூர் சுப்பணக்கவுண்டரைப்பாராட்டுகின்றது.

வட்டமேஜை மகாநாட்டுக்கு தேவேந்திர குல வேளாள பிரதிநிதி அனுப்பப்பட வேண்டும்.

இனியலூர், முள்ளிகரும்பூர், தச்சவாடி, என்ற கிராமங்களில் இந்துக்கள் குடிக்கத் தண்ணீர் எடுக்க இடம் கொடாமல் செய்யும் கொடுமையைக் கண்டிக்கின்றது.

மோட்டார் பஸ்களில் ஆதிதிராவிடர்களை ஏற்ற மறுப்பதை கண்டிக்கின்றதுடன் அரசாங்கத்தார் உத்திரவுபோடவேணுமாயும் கேட்டுக்கொள்கின்றது.

இன்னும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. பிறகு மகாநாடு இனிது முடிந்தது.

ஆதிதிராவிடர் கஷ்டங்கள்.

திருச்சி ஜில்லா கூத்தப்பார் கிராமத்தில் உள்ள இந்துசமூகக் கள்ளர் ஜனங்கள் ஒன்றுகூடி ஆதிதிராவிடர்களைப்பற்றி அடியிற்கண்டபடி தீர்மானித்தார்கள். அதாவது:—

1. ஆதிதிராவிடர்கள் முழங்காலுக்குக்கீழ் வேஷ்டி கட்டக் கூடாது.
2. தங்கநகை போடக் கூடாது.
3. மண்குடத்தில் தண்ணீர் கொள்ள வேண்டும்.
4. அவர்கள் குழந்தைகள் படிக்கக்கூடாது.
5. மாடுகள் தான் மேய்க்க வேண்டும்.
6. அடிமையாக இருக்க வேண்டும்.
7. பூமி குத்தகைக்குவாங்கி சாகுபடி செய்யக் கூடாது.
8. சொந்த நிலம் வைத்து இருக்கக்கூடாது.
9. கூலிவேலையில் ஆண்களுக்கு 4 அணாவும், பெண்களுக்கு 2 அணாவும், தினம் கொடுக்கப்படும்
10. கல்யாண முதலிய காலங்களில் மேளம் வாசிக்கக்கூடாது.
11. குதிரைமீது ஊர்வலம் செல்லக்கூடாது.
12. வண்டி ஏறக்கூடாது,

என்பவைகளான நிபந்தனை கண்ட ஒரு பத்திரத்தைத்தயார் செய்து அதில் ஆதிதிராவிடர்களை கையெழுத்துப் போடும்படி கட்டாயப்படுத்தியதில் பலர் போடமறுத்ததால் அவர்களை சமூக பஹிஷ்காரம் செய்து அடிதத்து தொந்திரவு செய்து துன்பப்படுத்தி இருக்கின்றார்கள் என்பதாக 40 கையெழுத்துக்கொண்ட மகஜர் சர்க்காராருக்கும்ஜில்லா அதிகாரிக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றது.

இந்தாரில் சுயமரியாதை.

அலுவசிய செலவுகளிலிருந்து ஏழை மக்களைக்காக்க முயற்சி.

இந்தூர் சமஸ்தானத்தில் ஏற்படுத்தப்பட்ட புதிய சட்டமாகிய இந்தூர்நத்தா சட்டத்திற்கு ஹோல்கார் மகாராஜா அவர்கள் அச்சட்டத்தைதன குடிகளினிடையே பிரயோகிக்கும்படி அனுமதியளித்திருக்கிறார். இந்தியாவிலுள்ள ஏழைமக்கள் மூடவழக்கத்திற்கு அடிமைப்பட்டு அதைவிட்டு விடுதலை பெற முடியாத அலுவசியமான செலவுகளைச்செய்து வறுமை மேலிட்டுத் தத்தளித்து வருவதினிலறும் அவர்களைக்காப்பாற்றும்பொருட்டே இச்சட்டம் ஏற்படுத்தப் பட்டது. இச்சட்டம் ஏற்படுத்துவதற்குக் காரணத்தை சட்டத்தின் ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மத சம்பந்தமில்லாத மூட வழக்கத்தை முன்னிட்டு அலுவசியமாக இழவுசடங்குகளுக்கு செய்யும் செலவுகளைத் தடைசெய்யும்பொருட்டு அச்சட்டம் விதிக்கப் பட்டுள்ளது. அச்சட்டப்படி வருஷாந்திரத்திதியைத்தவிர மற்றபடி இழவு சம்பந்தமான சடங்குகளில் அலுவசியமான செலவுகள் செய்படலாகாது. அச்சட்டம் 5-உது பிரிவின்படி நுக்தாவில் அதாவது இழவு சம்பந்தமான விருந்தில் 101 பேர்களுக்கு மேல் போஜனமளிக்கலாகாது. அவசியமான சந்தர்ப்பங்களில் 400 விருந்தாளிகள் வரை உணவருந்தலாம். அத்தொகைக்கு மேற்பட்டவர்களுக்கு போஜன மளிக்கக்கூடாது. அப்படி 101 பேர்களுக்கு அதிக மானவர்கள் சாப்பிட வேணுமெனில் ஜில்லா ஜட்ஜின் அனுமதி பெறவேண்டும். மனுதாரியை ஜட்ஜ் விசாரித்து மனுதாரி 101 பேருக்கு மேல் போஜன மளிக்கக்கூடிய செல்வந்தராக இருக்கிறாரா என்பதை அறிந்த பின்னர் அனுமதியளிப்பார். இச்சட்ட விதிகளை மறுக்கிறவர்களுக்கு தண்டனைவிதிக்கவும் சட்டத்தில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இச்சட்டத்தைப் பிரயோகித்து அதனால் ஜனங்களுக்குப்பயனை ஏற்படுத்த அதிகாரிகள் நிச்சயித்திருக்கின்றனர். ஆதலால் இச்சட்ட விதியை மீறுகிறவர்களுக்கு 500 ரூபாய்வரை அபராதமும் அல்லது ஒரு வருஷத்துக்கு மேற்படாத சிறைவாச தண்டனையும், அல்லது அபராதமும் தண்டனையும் விதித்திருக்கின்றனர். ஜில்லாமாஜிஸ்திரேட் இச்சட்டத்தை மீறலாகாதென்று நோட்டீஸ் கொடுத்த பின்னர் சட்டத்தை மீறினால் 1000 ரூபாய் வரை அபதாரமும் ஒரு மாதத்திற்குட்பட்ட சிறை தண்டனையும் விதித்திருக்கின்றனர்.

இச்சட்டத்தை மீறுகிறவர்களைப்பற்றி தகவல் கொடுக்கிறவர்களுக்குக் குற்றவாளிகளின் அபராதப்பணத்தில் பாதி கொடுக்கப்படுமென்றும் தெரிவித்திருக்கின்றனர். ஆனால் தகவல் பொய்யாக இருந்தால் அப்பொய்த் தகவல் கொடுக்கிறவர்களுக்கு 100 ரூபாய்வரை அபராதம் விதிக்கப்படும்.

மற்ற சமூக சீர்திருத்தச் சட்டங்களைப்போல இந்த சட்டத்தை போளவில் சட்டமாக்கி வைத்துக் கொள்ளாது தீவிரமாகப் பிரயோகம் செய்ய சமஸ்தான அதிகாரிகள் நிச்சயித்திருக்கின்றனர்.

'டைம்ஸ் ஆப் இந்தியா'

குடி அரசு

சனி 31ஆம் ஜூன் மீ 28உ

காந்தியின் விளக்கம்.

பெருமான் மறுபெத்தப் பெருமானார்.

உயர்திரு. காந்தியவர்கள் சென்றமாதம் 12-ந்தேதி பரோடா சமஸ்தானம் மரோலி என்ற கிராமத்தில் மதுபானத்தைப் பற்றிப் பேசிய விபரங்களைப் பற்றிச் சென்ற வாரத்திற்கு முந்திய 'குடி அரசு' பத்திரிகையில் "காந்தியின் உண்மைத் தோற்றம்" என்னும் தலைப்பில் திரு. காந்தி சொன்ன வார்த்தைகளை அப்படியே எடுத்து எழுதி அதின்மீது நமது அபிப்பிராயத்தையும் எழுதியிருந்தோம்.

இதைப் பார்த்த சில பார்ப்பனர்கள் அதாவது தமிழ் நாட்டு காங்கிரஸ் தலைவர்கள் உடனே திரு. காந்திக்குத் தந்தி கொடுத்தார்கள்.

எப்படி என்றால், 'தாங்கள்மது பானத்தைப் பற்றிஇம்மாதம் 12ந் தேதி மரோலியில் பேசிய பேச்சானது இங்கு சிலருக்கு பலவித அருத்தம் கொள்ளுவதற்கு இடமளிப்பதாய் இருப்பதால் அதை சரியானபடி விளக்க வேண்டும்' என்பதாகக் கேட்டார்களாம்.

மற்றும் பலர் திரு. காந்தியைப்பாராட்டி அதாவது இப்போதாவது மதுபானத்தின் தத்துவத்தை அறிந்து அது விஷயமான கொள்கையை மாற்றிக்கொண்டதற்காக அவரைப் பாராட்டியும் எழுதினார்களாம்.

ஆகவே இவற்றிற்கெல்லாம் பதில் சொல்லும் முறையில் திரு. காந்தியவர்கள் இம்மாதம் 25ந் தேதியில் பம்பாயில் இருந்து எழுதுவதாக சுதேசமித்திரன் 26ந்தேதி பத்திரிகை 4வது பக்கம் 6வது காலத்தில் காணப்படுவதாவது,

"இந்தியா முழுமைக்கும் ஒருமணி நேரத்திற்கு என்னை சர்வாதிகாரியாய் நியமித்தால் முதல் முதலில் நான் சாராயக் கடைகளை எல்லாம் மூடிவிடுவேன். கள்ளு கொடுக்கும் மரங்களை யெல்லாம் வெட்டிவிடுவேன். தொழிற்சாலைவைத்து நடத்துபவர்களை தொழிலாளர்களை இரக்கத்துடன் நடத்தும்படி வற்புறுத்துவேன்.

தொழிலாளர்களுக்குச் சிற்றுண்டி சாலைகளையும், பொழுதுபோக்கு சங்கங்களையும் ஏற்படுத்தச் சொல்லுவேன்.

குற்றமில்லாத பானங்களும் பொழுதுபோக்குக்கு ஆக்ஷேபகரமில்லாத சில வஸ்துகளும் அளிக்கும்படி செய்வேன்.

தொழிற்சாலை வைத்திருப்போர் இதற்குப் பணமில்லையென்று சொன்னால் அந்தத் தொழிற் சாலைகளை மூடிவிடும்படி சொல்லுவேன்.

தொழிற் சாலையை மூடிவிடுவதால் வேலை இல்லாமல் கஷ்டப்படும் ஆட்களை உடனே மாதிரிப் பண்ணைகளுக்கு (விவசாயத்துக்கு) அனுப்பிவிடுவேன்.

ஐரோப்பிய நண்பர்களும், காயலாக்காரரும் வைத்தியர் யோசனைப்படி சாராயம் சாப்பிடவேண்டி இருந்தால் அவர்களுக்கு அனுமதிச் சீட்டு கொடுத்து குறிப்பிட்ட அளவு கவர்ன்மெண்ட் செலவில் வாங்கிக் கொள்ள அனுமதியளிப்பேன்.

இதனால் கவர்ன்மெண்டுக்கு வரும்படி குறைந்து விட்டால் நான் உடனே இராணுவச்செலவைக் குறைத்து விடுவேன்.

சேனாதிபதியானவர் தனது சாமர்த்தியத்தால் புதிய நிலைமைக்கு ஏற்றவாறு சமாளிக்க வேண்டியதுதான்.

தொழிற் சாலைக்காரர்கள்நான்சொன்னநிபந்தனைகளின்படி லாபகரமாகவே தொழிற் சாலைகளை நடத்தலாம் என்று சொன்னால், பழையபடி தொழிற்சாலைகளை நடத்த அனுமதியளிப்பேன்."

என்று எழுதி இருக்கின்றார்.

இதுதான் நாம் "காந்தியின் உண்மைத் தோற்றம்" என்று எழுதியதற்கு விளக்கமாகும்.

இதனாலேயே இவ்வியாசத்திற்குக் "காந்தியின் விளக்கம்" என்று பெயர் கொடுத்தோம்.

இந்த விளக்க சமாதானத்தை நன்றாய் ஊன்றிப்படித்துப் பார்த்தால் திரு. காந்தியவர்கள் முன் சொன்ன அபிப்பிராயங்களை இந்த விளக்க சமாதானத்தால் பலப்படுத்துகின்றாரே யொழிய சிறிதும் அதற்கு மாறுபடும்படியான அபிப்பிராயம் கொண்டிருப்பதாகக் கொஞ்சமும் விளங்கவில்லை. அதாவது,

"எனக்கு ஒரு மணி நேரம் சர்வாதிகாரம் கொடுத்தால் கள்ளு சாராயக் கடைகளை மூடிவிட்டு, கள்ளு மரங்களையும் வெட்டிவிடுவேன்" என்பதாகச் சொல்லிவிட்டு உடனே "தொழிலாளிகளுக்கு கள்ளு சாராயம் குடிக்க வேண்டிய அவசியம் ஏற்படாமல் இருக்கும்படி வேறு பல காரியங்கள் செய்வேன்" என்பதாக சொல்லி இருப்பதைக் கூர்ந்து கவனித்தால் விளங்காமல் போகாது. அதாவது "தொழிலாளிகளுக்கு தொழிற் சாலைகளில் வேலைகளை குறைப்பேன்" "அவர்களை இரக்கத்துடன் நடத்தும்படி செய்வேன்" "சிற்றுண்டி சாலை வைக்கும்படி செய்வேன்" "பொழுது போக்குச்சங்கம் வைக்கச் செய்வேன்" "குற்றமில்லாத பானங்களை கொடுக்கச் செய்வேன்" "இந்தப்படி செய்ய முடியாத தொழிற்சாலைகளை மூடிவிடும்படி சொல்வேன்" என்று சொல்வதிலிருந்து இன்றைய நிலைமையில் தொழிலாளிகளுக்கு மதுபானம் அவசியமென்பதையும் மதுபானத்தை நிறுத்துவதானால் அதற்குத்தகுந்த பல நிபந்தனைகள் நிறைவேற்றவேண்டுமென்பதையும் அவர் நன்றாய் வலியுருத்தி இருக்கிறார் என்பதை பகுத்தறிவும் நாணயமும் உள்ள யாவரும் மறுக்கமுடியாது. அதோடுகூட 'ஐரோப்பிய நண்பர்கள் குடிபபதற்கு அனுமதிச்சீட்டு கொடுத்து (சுயராஜ்ய) கவர்ன்மெண்ட் செலவில் சீமைச்சாராயம் வாங்கிக்கொள்ள ஏற்பாடு செய்வேன்" என்றும் சொல்லி இருக்கிறார்.

ஆகவே, திரு. காந்தியின் மதுவிலக்குப் பிரசாரத்தில் உள்ள முக்கியம் ஐரோப்பியர்கள் (சுயராஜ்ய) சர்க்கார் செலவில் வேண்டிய அளவு சீமைச்சாராயம் குடிக்க வேண்டியதும் நமது தொழிலாளிகள் தங்கள் சொந்தச்செலவில உள்நாட்டு கள்ளு, சாராயம் குடிக்கவேண்டியதும் என்பதாகத்தான் புலப்படுகின்றதே தவிர இன்றைய நிலையில் நமது தொழிலாளிகள் கள், சாராயம் குடிக்கக்கூடாது என்றோ, குடிக்காமல் இருக்க முடியும் என்றோ, ஒரு இடத்திலும் அவர் கருதுவதாக நமக்குத் தெரியவே இல்லை. தொழிலாளர்களுடைய குடியை நிறுத்தவேண்டுமானால் அதற்கு பல பரிகாரம் செய்யவேண்டும் என்பதை ஒப்புக்கொண்ட திரு காந்தி அந்தப்பரிகாரம் செய்யப்படுமுன் எதற்காக கள்ளுக்கடை மறியல் செய்யச் செய்து கலவரம் உண்டாக்கி வீண் விளம்பரம் செய்யச்செய்கின்றார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. திரு காந்தி அவர்கள் இன்றையதினம் இந்திய மில்வைத்து நடத்தும் முதலாளிகளிடம் எல்லாம் ஒப்பந்தம்பேசி இருக்கிறார். அவரது பிரதிநிதிகள் மில் முதலாளிகளிடம் சில நிபந்தனைகள் கண்டு கையெழுத்தும் வாங்கி இருக்கிறார்கள். அந்நிபந்தனைகளில் மில்லின் "நிர்வாகஸ்தர்கள் பெரும்பாலும் இந்தியர்களாய் இருக்க வேண்டும். பங்குக்காரர்கள் பெரும் பகுதி இந்தியர்களாய் இருக்க வேண்டும். கதர் வியாபாரிகளுக்குக் கஷ்டம் உண்டாக்கும்படியான 18நெம்பருக்குகீழ்ப்பட்ட நெம்பர் நூல் நூற்கக்கூடாது" என்பதாக வெல்லாம் நிபந்தனைகளுக்கண்டுகையெழுத்துவாங்கி அந்தப்படி கையெழுத்திட்ட மில் நூல்களை மாத்திரம்வாங்கி நெய்ய வேண்டும் என்று உத்திரவு போட்டார்களே யொழிய தொழிலாளிகள் குடிக்காமல் இருப்பதற்கு திரு காந்தியவர்கள் சொல்லும் பந்தோபஸ்து செய்யும்படியான நிபந்தனைகளை அதில் போட்டார்களா என்று கேட்கின்றோம்.

இன்றையதினம் தமிழ்நாட்டில் குடி மறியலின் போரால் எவ்வளவு பேர்கள் அடிபடுகின்றார்கள்? எவ்வளவு கலவரங்கள் ஏற்படுகின்றன? இதனால் பொது ஜனங்களுக்கு எவ்வளவு தொல்லைகள் ஏற்படுகின்றன?

பைதியகாரர்களிடமும் பயங்காளிகளிடமும் சுயநலக்காரர்களிடமும் பணம் வசூலித்து வேலைத்திண்டாட்டம் உள்ள சிறுவர்களையும் பெற்றோர்களுக்குக்கீழ்படிய இஷ்டமில்லாத சிறுவர்களையும் பாடுபடக் கஷ்டப்படும் சிறுவர்களையும் வேடிக்கை விளையாட்டில் விளம்பரத்தில் பைத்தியமுள்ள சிறுவர்களையும் கூட்டி வைத்து சோறு போட்டு இந்தப்படி கலவரம் செய்வதில் லாபம் என்ன? என்றுதான் கேட்கின்றோம். ஒரு சமயம் இதனால் ஏதாவது ஒரு பயன்

உண்டு என்று திரு காந்தியார்கி லும் சொன்னாலும், ஏதோ ஒரு விதத்தில் சிலர் சமாதா னமாவது சொல்லப் புரப்பட லாம். "கள்ளுக்கடை மூடுவதால் குடி நிற்காது" என்றும் "குடி காரர்களை தடைப்படுத்தி குடிக் காமல் செய்வதால் குடி நிற் காது" என்றும், "குடிப்பவர்கள் எப்படியும் திருட்டுத்தனமாகவா வது குடித்துத்தான் தீருவார் கள்" என்றும், "கள்ளுசாராய வியாபாரிகள் திருட்டுத்தனமாக கள்ளு விற்றுதான் தீருவார்கள்" என்றும், "சரீரத்தால் பாடுபட்டு உழைப்பவர்களுக்கும் தொழிற் சாலைகளில் வேலை செய்கின்றவர் களுக்கும் அவர்களது களைப்பும், சலிப்பும் தீருவதற்கு கள் அவசி யமானது" என்றும், "நானே (திரு காந்தியே) அவர்களது களைப்பைப் பார்த்து மனமிறங்கி சாராயக்கடைக்குப்போய் சாரா யம் வாங்கி வந்து அன்பாய் கொ டுத்து இருக்கின்றேன்" என்றும் சொல்லி கள்ளின் அவசியததை யும், குடிக்கவேண்டியதையும் ஒப்புக்கொண்டு வெளிப்படுத்தி இருக்கும் போது மறுபடியும் ஆங்காங்கு கள்ளுமறியல் செய் வது என்றால் கள்ளு மறிபல் செ ய்யப்படுவது, அருத்தமற்ற தெ ன்றும், புரட்டு என்றும் என் சொல்லக்கூடாது? என்று கேட் கின்றோம்.

தவிர, தொழிற்சாலை மூதலா ளிகள், தொழிலாளிகள் கள்ளு குடிக்காமல் இருக்கத்தகுந்த மா திரியில் "அவர்களது வேலைகளை சுளுவாக்கி கள்ளுக்குபதில் வேறு கெடுதி இல்லாத பானங்களும், சௌகரியங்களும் செய்யாவிட் டால் தொழிற்சாலையை மூடிவிட உத்திரவு போடுவ" தாக திரு. கா ந்தி எழுதி இருக்கிறார். ஆனால் இந்தப்படி மூடிவிட்டபிறகு அந் தத்தொழிலாளிகளுக்கு வேலை வேண்டுமே என்றால் "அவர்களை எல்லாம் மாதிரிப்பண்ணை விவசா யத்துக்கு அனுப்பி விடுவேன்" என்று சொல்லுகின்றார்.

ஆகவே தொழிலாளிகளுக்கு சுயராஜ்ய அரசாங்கத்தில் ஏற் படும் நன்மைகள் எல்லாம் தொ ழிற்சாலையில் சிறிது சௌகரிய மும், அதுசெய்ய முதலாளி சம் மதிக்காவிட்டால் அந்தத்தொழி லாளிகளை விவசாயம் செய்ய ஏர் உழுகும்படியும், மண் வெ ட்டி எடுத்து மண் வெட்டும்படி யும் சொல்லுவதைத்தவிர வே று வேலை இல்லை என்பதை நன் றாய் விளக்கி இருக்கிறார்.

ஆகவே, சுயராஜ்யத்தில் தொ ழிலாளர்களுடைய நிலைமை இன் னதென்று விளங்கிவிட்டது. 'காந்தியின் உண்மைத்தோற்ற" மெனும் முந்திய வியாசத்தில் நாம் எழுதி இருந்த அபிப்பிராய த்தை மாற்றவேண்டும்என்கின்ற எண்ணத்தின்மீது நமது பார்ப்ப னர்களும், நமது காங்கிரஸ் பக்தர் களும் எடுத்துக்கொண்ட முயற் சியின் பயனாய் எடுத்துக்கொண் ட சிரமமானது "பெருமாள் என் கின்ற பெயரை மாற்றிக் கொள் ளும்படி கொடுத்த பணத்தின் பயனாய் பெத்த பெருமாள் என் கிற பெயரை வைத்துக் கொ ண்டான்" என்பதுபோல் திரு. காந்தியவர்கள் நன்றாய் அழுத் தந் திருத்தமாகக் கள்ளு சாரா யம் குடிக்க வேண்டிய அவசிய த்தையும், தொழிலாளிகளுடைய (சூத்திரர்களுடைய) நிலைமை யையும் பலப்படுத்திவிட்டார். இதைக்கண்ட தொழிலாளிக ளான (சூத்திர) காங்கிரஸ் பக்தர் கள் இனி என்ன சமாதானம் சொல்லுவார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. வயிற்றுப் பசி யின் கொடுமையினால் வேறுவழி யில் மனிதர்களாக வாழ முடியா ததின் நிலையினால் தங்களை ஆதரிப் பவர்களுக்கு நன்றி காட்டவே ண்டுமே என்கின்ற சொந்த அவ சியத்தினால் நம்மை வையலாம். "குடி அர" சை வையலாம். ஆனா ல்தாங்கள் செய்யும் இந்த மா தி ரியான யோக்கியப் பொறுப்பும் நாணயமுமற்ற காரியத்திற்கு அறிவாளிகளுக்கு என்ன பதில் சொல்லுவார்கள் என்று தான் கேட்கின்றோம்.

எவ்வளவு யோக்கியதை யற்ற வனுகவும், இழிவானவனுகவும் இருந்தாலும் அவனால் "நமக்கு ஒரு ஓட்டுக்காவது மார்க்கமு ண்டு" என்று ஒருவன் அறிந் தால் அவனைப் பிரமாதப்படுத்தி "இந்திரனே!சந்திரனே!!" என்று கூறி ஏமாற்றி கையில் ஏதோ கொடுத்து அனுப்புவது சிலரின் இயற்கையேயாகும். இதையே ஆதாரமாய்க் கொண்டு பிழைக்க வேண்டியதும் சிலரின் இயற் கையேயாகும். ஆனால் சுயநல மற்ற பொது மக்களும் கஷ்டப் படுகின்ற பாட்டாளிகளும் இந்த வியாபாரத்தில் ஏமாந்து போகா மல் ஜாக்கிரதையாக இருக்கவே ண்டும் என்பதற்கே இதை நாம் எழுதுகின்றோம்.

லார்ட் வில்லிங்டனின் எச்சரிக்கை.

லார்ட் வில்லிங்டன் பிரபு சென்ற மாதம் செம்ஸ்ஃ போர்ட் கிளப்பில் பேசியபோது இந்தியர்களுக்கு ஒரு எச்சரிக் கை செய்திருக்கிறார். அஃதென் னவென்றால்,

"நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு நான் இருக்கி றேனே யொழிய ராஜியைக்காப் பாற்ற நான் (இங்கு வர) இல்லை" என்று பேசி யிருக்கிறார். ஆக வே, சமாதானப்பங்கமேற்படும் என்று நான் அறிந்தேனே யா னால் ராஜியைப்பற்றி சிறிதும் கவலைப்படாமல் சமாதானத்திற் காக எந்த முறையையும் அனு சரிக்கவேண்டி வரும்" என்று சூசனை காட்டி இருக்கிறார். அதோடு ராஜி விஷயத்தைப்பற் றியும் பேசும்போது "காங்கிரசுக் காரர்கள் "ராஜியை ஒரு சமாதா ன அறிகுறி என்றுகருதாமல்அ டுத்த யுத்தத்திற்கு தயார் ஆவ தற்கு ஏற்படுத்திக்கொண்ட சௌகரியமே என்பதாக காந்தி-இர்வின் ஒப்பந்தத்திற்கு வியாக் கியானம் கூறுகின்றார்கள்" என் றும், "இரண்டு பெரிய மனிதர் கள் என்பவர்கள் செய்து கொ ண்ட ஒப்பந்தம், அதாவது காந் தியும்-இர்வினும் செய்துகொ ண்ட ராஜி என்பதற்கு இந்த மா திரி பொருள்கொள்வது சிறிதும் யோக்கியமான காரியமென்று நான் கருதவில்லை என் று தாராளமாய்ச் சொல்லுகிறேன்" என்றும் சொல்லி இருக்கிறார்.

இவ்வளவும் போறுமல் அவர் பேசியிருக்கும் மற்றொரு விஷ யம் என்னவென்றால் திரு காந்தி யவர்கள் தான் அரசாங்கத் தோடு ராஜி ஆவது என்னும் பே ரால் எந்த நிபந்தனைக் கேட்டு முடியாமல் போயிற்றே, அதா வதுஎந்தப்போலீஸ் காரர்களின் நடவடிக்கைகளை விசாரிக்க வே ண்டும் என்று கேட்டாரோ அந்தப் போலீசுகாரர்களையே லார்ட்வில்லிங்டன் நன்றாய்ப் பா ராட்டிப் பேசி இருப்பதுடன் அவர்கள் செய்த காரியங்கள் எல்லாம் மிகவும் சரியான காரிய மென்றும் சொல்லி அவர்களைப் போற்றிப் புகழ்ந்து இருக்கிறார். அதோடு, இராணுவசிப்பாய்களை யும் போற்றி இருக்கின்றார்.

இதன் கருத்து "மூன் எந்த ப்போலீசாரின் அடிக்குப் பயந்து ராஜி செய்து கொள்ள வேண்டி யதாயிற்றே, அந்தப் போலீசும் மேல் கொண்டு இராணுவமும் இ ன்னமும் இருக்கின்றது" என்ற சூசனை காட்டுவதேயாகும்.

இதன் யோக்கியதையும், உ ண்மையும் எப்படி இருந்த போ திலும் ராஜியின் நாணயமை எப்ப டி இருக்கின்றதென்பதையும் சர் க்காராரும் காங்கிரசும் ராஜியை க்காப்பாற்றுவதில் எவ்வளவு நா ணயமாய் நடந்து கொள்ளுகின் றார்கள் என்பதையும், இந்த ராஜி யின் பயனாய் இந்திய மக்களின் சுயமரியாதை எவ்வளவு என்ப தை உலக மக்கள் அறிய ஒரு சந்தர்ப்பமும் ஏற்பட்டு விட்டது என்பது புலனாகும்.

கள்ளுக் கடை மறியலின் தத் துவத்தையும் இதில் சேர்த்துக் கொண்டால் நாணயத்தின் யோ க்கியதை நன்றாய் விளங்கும்.

டாக்டர் தாரகநாதும் சுயமரியாதை இயக்கமும்.

டாக்டர் தாரகநாத் அவர்கள் "பிரபுத்தபாரதா" என்னும்பத்தி ரிகையில் சுயமரியாதை இயக்கத் தைப்பற்றி எழுதுவதாவது:-

"ஜாதி பேதத்தையும் மக்களின் மூடநம்பிக்கையையும் ஒழித்து மக்களுக்குப்பகுத்தறிவை ஊட்டு வதற்கு ஆக சுயமரியாதை இய க்கமானது இந்தியாவில் தாண்டவ மாடிக்கொண்டிருக்கின்றது" என் று எழுதி இருக்கிறார்.

"இந்தியா"

திருத்தணி 144 ரத்து.

திருத்தணியில் அதிகாரிகளால் போடப்பட்ட 144 தடை உத் திரவு கலெக்ட்டரிடம் தெரியித் துக்கொண்டதால் நீக்கப்பட்டு விட்டது.

இந்த விஷயம் திருத்தணிக்கு த்தந்தி வந்தவுடன் மகாத்மா கா ந்திப்படத்திற்கு 'தேங்காய்பழம்' வைத்து பூஜைசெய்யப்பட்டது.

சு-மி

"காரைக்காலில் சேரிப் பிரசாரம்"

இவ்வூர் தேசவழிய வாசக சாலை சேரிப்பிரச்சாரக்கமிட்டி அதிகாரி திரு. செ. சிதம்பரம் அவர்களால் 19-6-31-ல் காரைக் காலுக்கு ஆறு மைலுக்கு அப்பா லுள்ள பேட்டை என்ற கிராமத் திற்கு 16 பெயர்களைக்கொண்ட ஓர் கூட்டத்தை கடத்திச் செல் லப்பட்டது. அவ்வூரில் பகல்

சாப்பாட்டிற்குப்பின் 3 மணிக்கு பொதுக்கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. கூட்டத்திற்கு சுமார் 100 கிராமவாசிகள் வந்திருந்தார்கள். சேரிப்பிரசாரக் கமிட்டி அதிகாரி வேண்டுகோளுக்கிணங்கி, இவ்வூர் பிரபல வக்கீலும் ஷெ சங்கத்தின் தலைவருமாகிய உயர் திருவாளர் கு. சிவசுப்ரமண்யம் அவர்கள் தலைமை வகித்த, சிக்கனம் என்பது குறித்து சுமார் அரைமணி நேரம் சொற்பொழி வாற்றினர். பின் முறையே திரு. பொ. கோவிந்த சாமி அவர்கள் கல்வியைப்பற்றியும் திரு. சொ. சிதம்பரம் கதரைப்பற்றியும், திரு. பெ. கோவிந்தன் சடங்குகளைப்பற்றியும் உபன்யாசித்தார்களென ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

திறப்பு விழா.

23-6-31-ல் 11மணிக்கு செங்கற்பட்டு ஜில்லா திருவள்ளூர் தாலூகா, எறையாமங்கலம் போர்டு பாடசாலையில் 6-வது வகுப்பு திறப்புவிழா, திருவள்ளூர் தாலூகா போர்டு பிரசிடெண்டு திரு. D. K. ராமய்ய நாயுடு அவர்கள் தலைமையின்கீழ் கொண்டாடப்பட்டது.

இப்பாடசாலையில் ஆதிதிராவிட மக்களும் சேர்ந்து வாசிப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இப்பாடசாலை பிரசிடெண்டு அவர்களின் கவனிப்பை முற்றிலும் பெற்றிருப்பது போற்றத்தக்கதென சாமி. கோவிந்தன் எழுதுகிறார்.

பெரியகுளத்தில் சுயமரியாதைக் கிரகப்பிரவேசம்.

26—6—31ல் பெரியகுளம் வடகரையில் கே. ஆர். வெங்கிட்டராமய்யர் அவர்கள் புது வீடு கிரகப்பிரவேசம் செய்ததில் யாதொரு மூடப்பழக்க வழக்கங்களையும் அனுசரிக்காமல் சாதாரணமாய் வீட்டில் குடி புகுந்தார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

உருவப்படம்.

சுயமரியாதை இயக்கத்தலைவர் திருவாளர் ஈ. வெ. இராமசாமியின் உருவபபடம் (Badge) ரூபாய் அளவில் செயயப்பட்டது. பார்வைக்கு அழகானது. அணிந்து கொள்ள சௌகரியமானது. 5 அணா ஸ்டாம்பு அனுப்புவோருக்கு ஒன்று அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:—

கே. வேங்கிடாசலம்,

24, சவுக்காரத்தெரு, திருச்சி.

"புதுவை முரசு"

கூட்டுக்கம்பெனி.

"புதுவை முரசு" சந்தா நேயர்கட்கு, நமது "புதுவை முரசு" பத்திரிகை பெருத்த மூலதனமுடைய கூட்டுக்கம்பெனியின் சார்பில் வெளிப்படுத்த உத்தேசித்தபடி முடிவு பெற்று விட்டது. பிரஞ்சு முறைமைப்படி சட்டதிட்டங்கள் அமைப்பது, பதிவுசெய்வது முதலியவை துரிதமாய் நடைபெற்றுவிடும். 11—7—31 முதல் முன்னிலும் அதிகப்பக்கங்களுடன் வெளிவரும். இடையில் நின்ற நான்கு பத்திரிகைகட்கு ஈடுசெய்யப்படும் என்பதை இதன் மூலம் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மா. நோயேல்,
மானேஜர்.

விருதுநகர்
பெண் பாடசாலை
ஆண்டு விழா.

விருதுநகர் கூத்தரிய பெண் பாடசாலையின் பதினாறுவது ஆண்டு நிறைவு விழா நிகழும் பிரஜோற்பத்தி ஆண்டு ஆனித்திங்கள் 22ம் நாள் [6 7.31]திங்கட் கிழமை மாலை 6மணிக்கு திருமதி நீலாவதி ராமசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெறும். அவ்வமயம் கோலாட்டம், கும்மி, சங்கீதம், தர்க்கம், உபந்யாசம் முதலியன நடைபெறும் என ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

கும்பகோணம்.
சுயமரியாதை வாலிபர்
சங்கத்திறப்பு விழா.

ஷெசங்கத்திறப்பு விழா 28-6-31 ஞாயிற்றுக்கிழமை திரு. ஆர். சி. வெங்கட்டராமன் அவர்கள் தலைமையில் திரு. எஸ். மாரிமுத்து அவர்கள் திறந்துவைத்தார்கள்.

வாலிபர் சங்கத்தின் அவசியத்தைப்பற்றி திருவாளர்கள் கா. சு. நீலமேகம் இராமச்சந்திரன்முதலியவர்கள் பேசினர்கள். பிறகு சங்கத்திற்கு தலைவர் உபதலைவர் முதலிய உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டபின் கூட்டம் கலைந்ததென காரியதரிசி எழுதுகிறார்.

நாடார் மகாஜன சங்கம்
மதுரை.

ஷெசங்கத்தின்நிர்வாகக்கூட்டம் 9-7-31 ந்தேதி நடை பெறும். அவ்வமயம் சில முக்கியமான விஷயங்களைப்பற்றி ஆலோசிக்கப்படுமென காரியதரிசி எழுதுகிறார்.

அனுதாபம்.

சுயமரியாதை வீரரும் கல்லிடைக்குறிச்சி சுயமரியாதை சங்கக் காரியதரிசியுமாகிய நண்பர் கே. எண். தங்கவேலு அவர்கள் அருமை பத்னியார் திருமதி. இலட்சுமி அம்மாள் களக்காட்டில் இரண்டு நாள் சுரத்தினால் திடீரென 24:6-31 பகல் 2 மணிக்கு இவ்வுலக வாழ்வை வெறுத்து விடுதலை அடைந்தார்கள் என்ற விபரம் தெரிந்ததும் சகிக்க வொண்ணாத் துயர் அடைந்தோம். அன்னாருக்கும் அவர்கள் குடும்பத்தாருக்கும் எங்கள் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோமென கல்லிடைக் குறிச்சி சுயமரியாதைச் சங்கத்தலைவர் தெரிவிக்கிறார்.

அநுதாபம்
சிலாங்கூர் மருத்துவர்
சங்கம் கோலாலம்பூர்.

1931-ஆம் ஆண்டு, ஜூன் திங்கள் 9-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை இரவு 9-45 மணிக்கு காரிய நிர்வாக சபை கூட்டம் நடைபெற்றது. அது போழ்து, திருவாளர் மணி திருநாவுக்கரசு முதலியார் அவர்களின் பிரிவாற்றாமைக்குறித்து,உதவிக்காரியதரிசி திரு. இரா. சண்முகம் அவர்கள் பேசினர்கள். அதன் பிறகு, ஒரு அனுதாபத் தீர்மானம் காரிய நிர்வாக சபையோரால் ஏகமனதாக நிறைவேற்றப்பெற்றதுஎன காரியதரிசி எழுதுகிறார்.

அருப்புக்கோட்டை
பிராமணீயம் ஒழிந்த திதி.

அருப்புக்கோட்டையில் திரு. தங்கப்ப நாடார் எனும் வாலிபர் நாளது ஆனிமீ 1உ தேகவியோகமான தமது பாட்டியம்மையின் இறுதிச்சடங்கை உத்தி ரகிரிகையை) ஷெ மாதம் 7உ மூடப்பழக்கவழக்கத்தை ஒழித்து தமுறையில் பிராமணர் என்பவரைத்தவிர்த்து அர்த்தமற்ற கிரிகைகளை ஒழித்து எழைகளுக்கன்னமிட்டார் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

(10ம் பக்கத் தொடர்ச்சி)

த்திற்கு அஸ்திவாரம் போடும் போது சொல்லிவிட்டு போனது போலவே இந்த இடத்தில் பெரியகட்டிடம் ஏற்பட்டு இந்தவூர் மக்களின் ஆதாவையும், ஆமோதிப்பையும் நமது இயக்கம் பெற்றுவிட்டது குறித்து நான் மிகுதியும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த நாட்டில் நமது சுயமரியாதை இயக்கத்திற்கு இதுவே முதல் கட்டிடம். இதுபோலவே எங்கும் ஏற்படவேண்டும் என்று நான் ஆசைப்படுவதுடன் வெகு மகிழ்ச்சியுடனும், பெருமையுடனும் இக்கட்டிடத்தை திறக்கின்றேன்.

என்று சொல்லி கட்டிடக்கதவைத் தள்ளினார்.

பிறகு சுயமரியாதைச் சங்கசார்பாக, திருவாளர் R K. ஷண்முகம் அவர்கள், திரு ராஜனுக்கு நன்றி கூறினர். எனம் ராஜன் அவர்கள் ஆங்கிலத்தில் பேசியதை, வக்கீல் திரு. ஐயாசாமி M.A B L., அவர்கள் தமிழில் மொழிபெயர்த்துச் சொன்னார்.

ஜில்லா போர்டு மெம்பர்களில் மந்திரியும், திரு எல்லப்பசெட்டியாரும் அனுமதி பெற்றுக்கொண்டு திரு அப்பாசாமி அவர்களைத் தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொண்டு போய்விட்டபின், கோவை திரு R.K. ஷண்முகம் அவர்களுக்கு வக்கீல் திரு பாலசாமி B A.B.L. அவர்கள் உபசாரப்பத்திரம் வாசித்தபின், சர். பி. தியாகராயர் உருவப்படத்தை திறந்து வைத்த சமயம் அவர் ஆற்றிய சொற்பொழிவாவது.

R. K. ஷண்முகம்.

அன்பர்களே! உபசாரப்பத்திரத்துக்கு நன்றி செலுத்துகிறேன். இதை யொருபெரியகொண்டாட்ட நாளாகவே கொள்கிறேன். இந்தப்பெரியகூட்டத்தைப்பார்க்கவும் இங்கு இத்தனைபேர்களுடைய ஆதரவு நமது இயக்கத்திற்கு இருப்பதைப்பார்க்கவும் எனக்கு அதிக சந்தோஷம் ஏற்படுகின்றது. எனக்கு பல வேலைகள் இருந்த காரணத்தால் இங்கு வருவதற்கு சௌகரியமில்லை என்று சொல்லியுங்கூட உங்கள் சங்கக் காரியதரிசி திரு சந்திரய்யா அவர்களுடைய பிடிவாதமான வற்புறுத்தலானது எப்படியாவது என்னை இங்குவரச்செய்துவிட்டது. வந்து இங்கு நடக்கும் வைபவங்களைப் பார்க்க நான் வராது போயிருந்தால் மிகவும் ஏமாற்றமடைந்தவன் ஆவேனென்று கருதுகிறேன்.

சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்ததுமுதல் நான் இதில் கலந்து தொண்டுசெய்து யருகின்றவனாயிருப்பதால் இந்த விழாவுக்கு வந்து எனது மரியாதையை காட்ட வேண்டியதும் எனது கடமையாகும். அதிலும் சர். பி. தியாகராயச் செட்டியார் படத்தை திறந்துவைப்பது என்பது

எனக்கு ஒரு பெரிய பெருமை கிடைத்தது போலவே எண்ணு கிறேன்.

சுயமரியாதை இயக்க ஆரம்பம்.

சென்ற 20 வருஷ நிகழ்ச்சி களைப்பார்த்தால் இந்த இயக்கம் இந்த சுயமரியாதை என்கின்ற வார்த்தை புதிதாக இருக்கலா மேயொழிய இதன் கொள்கை களுக்கு திருவாளர்கள் டாக்டர் நாயரும், சர். பி தியாகராயரும் மூலகர்த்தாக்கள் ஆவார்கள். ஆத லால் சர். பி. தியாராயர் படம் திறப்பது, அத்தொண்டைச் செ ய்கின்ற எனக்கு மகிழ்ச்சியும் பெ ருமையுமானது என்று சொன் னேன்.

நமது இயக்கத்தைப்பற்றி பலர் குறை பேசுவதும், எதிர்ப் பிரசாரம் செய்வதும் அறிந்த தே யாகும்.

இவ்வியக்கம் எதை வலியுறுத் துகின்றது என்பதை உணர்ந்த வர்களால் எதிர்ப்பை எதிர்ப்பார் க்க வேண்டியதுதான்.

இயக்கத்திற்கு ரோஷமேகாரணம்

சாதாரணமாகநாம்சண்டைபிடி க்கும்போதுசண்டைக்குகாரணம ரோஷம் என்பதைக் கொள்வது டன் எதிரியை உனக்கு ரோஷ மில்லையா என்றும் கேட்கின்றோம்.

அதே கருத்துதான் நமது இயக்கமும் அதாவது ரோஷ உணர்ச்சியினல் ஏற்பட் டது தான் நமது இயக்கம். நம் மை அனனியர்பண்ணும் கொடு மையாலும் நடத்தும் இழிவாலு மே நமக்கு ரோஷம் ஏற்பட்டு காம் நமது ரோஷத்தின் மூலம் நமது மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சிக்கின்றோம்.

இராமராஜியம் சுயமரியாதை யற்றதே

நாம் மதத்திலும், சமூகத் திலும், அரசியலிலும் மான மற்றவர்களாக நடத்தப்படுகின் றோம். அவற்றைக் கவனித்தால் நமக்கு சுயமரியாதை இல்லை என் பதும் ஒவ்வொரு நிமிஷத்திலும் நமக்கு சுயமரியாதை இல்லை என் பதும விளங்கும். அரசியலில் நமக்கு இதற்கு முன்னிருந்த மனு நீதி, இராம இராஜ்யம் நம க்கு சுயமரியாதை யற்றதேயா கும். அவ்வாட்சிகளின் அடிப் படை பாரபட்ச முடையதேயா கும். அக்கால அரசர்கள் பிரா மண ஜாதியார்களை ஒரு மாதிரி யாகவும், பிராமணரல்லாத ஜாதி யார்களை ஒரு மாதிரியாகவும் நட த்தியவர்களாவார்கள். பிராமணன் யாரைக்கொலை செய்தாலும் அவ னுக்குத்தூக்கு தண்டனைகிடை யாதுபிராமணர் அல்லாதவன்கொ லைதவிரவேறுகுற்றம்செய்தாலும் தூக்கு தண்டனை உண்டு. இப் படியே மதத்திலும் கடவுள் விஷயத்திலும் சமூகவிஷயத்தி லும் இன்று நாம் வித்தியாசமா கவும் கீழாகவும் நடத்தப்படுவ தை யார் மறுக்கமுடியும் என்று கேட்கின்றேன்.

சுயமரியாதை இயக்கமே பெண் களுக்கு விடுதலையளிப்பது

நமது பெண்மக்கள் நடத்தப் படுவது சிறிதுகூட அவர்களுக்கு சுயமரியாதை இல்லை என்பதான் சொல்லவேண்டுமா. அவர்கள் எச் சில் சாப்பிடவேண்டியவர்கள் என்பது நினைத்தால் மனம் பதறு கின்றது. அவர்களுக்கு மானம் ஏற்படவேண்டுமானால் நமது சுய மரியாதை இயக்கத்தால்தான் முடியும்.

நமது சுயமரியாதை இயக்கம் ஒரு நூறு வருஷத்திற்கு முன் தோன்றி வேலை செய்திருக்குமா னால் இன்று சுயராஜியம் வேண் டும் என்கின்ற பேச்சுப்பேசவே இடமிருக்காது. சுயமரியாதை பெற்றால் சுயராஜியம் தானே வே விளங்கும்.

ஐரோப்பா தேசத்திற்குசுயமரி யாதை யுனர்ச்சி ஏற்பட்டபிறகு தான் அது சுயராஜ்ய நாடாக முடிந்தது. நம் மக்கள் இப்போ து இருப்பதுபோலதான் ஐரோ ப்பியரும் மோக்ஷத்திற்கு டிக் கட்டு வாங்குகின்ற மூடர்களாய் இருந்தார்கள். மார்ட்டின் லூதர் இயக்கம் சுயமரியாதை இயக்க மே யாகும். புத்தர்பெருமான் இயக்கம் சுயமரியாதை இயக்க மே யாகும்.

முன்னேற்றத்தின் முட்டுக்கட்டை அழிபடவேண்டும்.

மனிதஉரிமைக்கு இடமளிக் காத எதையும் அழிப்பது என் பதுதான் சுயமரியாதைஇயக்கம். மதமும், புராணமும்வந்து தடை யாய் இருந்தால் நாங்கள் அவற் றைத் தூக்கி தூர எறிந்துவிட்டு தான் எங்கள்வேலையைச் செய் வோம். 6 கோடி தீண்டாதா ருக்குஇந்துமதம்உண்டு. புராணம் உண்டு. அவற்றில்கண்ட, கோயில் களும் கடவுள்களும்உண்டு. ஆனா ல் அவற்றை முறையே அறிந்து கண்டு கேட்டு பிரவேசித்து தொ ழும் உரிமை மாத்திரம் இல்லை.

இப்படிப்பட்ட 6 கோடி மக் களைப் புறக்கணித்துவிட்டு அவர் களது கொடுமைக்கு யாதொரு பரிகாரமும் செய்யாமல் சுயரா ஜியம் வேண்டுமென்றால் எப்படி வரும்? நமது மகாத்மா தீண்டா தவர்களுக்குக்கோவில் பிரவேசம் உண்டு என்கின்றார். எப்படிப்பிர வேசம் கிடைக்க முடியும்? நமது நாட்டுத்தலைவர்கள் படித்தவர்கள் ஆகியவர்களே தீண்டாமைக்கு விரோதியாய் இருக்கும்போது வேறுபார் மூலம் கோவில் உரி மையை மகாத்மா வாங்கிக்கொடு ப்பார் என்பது எனக்கு விளங்க வில்லை.

இன்று இந்திய மக்களுக்கு எப்படவேண்டிய சீர்திருத்தங் கள் முழுமைக்கும் பி.எ., பி.எல்., படித்த பட்டதாரிகளும், பண்டி தர்களும்தான் எதிரியாய் இருக் கின்றார்களே யொழிய அன் னிய சர்க்கார் அல்ல. இந்தப் பண்டிதர்களும், பட்ட தாரிகளும் சுயராஜியத்தில் எங்கு போய்விடுவார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை அவர்களுக்கு எதாவது சுயராஜியத்தில் ஆ பத்து வருவதாய் இருந்தால் இ ன்று அந்தக்கூட்டமே சுயராஜிய த்திற்கு அதிகப்பாடுபடுமாஎன்று போசித்துப்பாருங்கள்.

இந்த உண்மையை சர் பி. தி யாகராயசெட்டியார் அப்பொழு தே எடுத்துச்சொன்னவர். ஆ கவே அப்படிப்பட்ட பெரியார் படத்தை திறந்துவைப்பதாகச் சொல்லித் திறந்தார்.

சோ. முருகப்பா.

பிறகு திரு சோ. முருகப்பா அவர்களுக்கு திரு சந்திரய்யா அவர்கள் ஒரு உபசாரப்பத்திரம் படித்துக்கொடுத்து திரு ஈ. வெ. ராமசாமியார் உருவப்படத்தை திறக்கும்படிகேட்டுக்கொண்டார். அவர் சுயமரியாதை இயக்கத் தின் தத்துவங்களை எடுத்துச்சொ ல்லி கடவுள் என்பதைப்பற்றி விரிவாப்பேசி படத்தைத்திறந் துவைத்தார்.

திரு மரகதவல்லி.

பிறகு வக்கீல் பாலசாமி அவர் கள் மனைவியார்திருஇலகுமி அம் மாள் அவர்கள் திரு மரகதவல்லி அம்மையாருக்குஒருஉபசாரப்பத் திரம் படித்துக்கொடுத்தார்டாக்டர் நாயர்அவர்கள் உருவப்படத்தை திறந்துவைக்கும்படி கேட்டுக் கொண்டார்.

திரு மரகதவல்லி அம்மை யார் டாக்டர் நாயர் பெரு மைகளைச் சொல்லி அவரு டைய உருவப்படத்தை திற ந்துவைத்தார். அவர் பேசியதின் சுருக்கம் இந்தியமக்களுக்கு புர ட்சி உணர்ச்சியுண்டாக்கி சுயமரி யாதை யற்றதன்மையை ஞாப கமூட்டினவர் நாயரேயாவார் என்று சொன்னார்.

ஈ. வெ இராமசாமி.

திரு சந்திரய்யா அவர்கள் திரு ஈ. வெ. ராமசாமிக்கு வரவேற்பு பத்திரமொன்றுவாசித்துக்கொடு த்து பனகால் அரசர் படத்தைத் திறந்து வைக்கும்படி கேட்டுக் கொண்டார். திரு ஈ. வெ. ராம சாமி மணி நேரம்சுயமரியாதை இயக்கத்தின் அவசியத்தை எடுத் துச்சொல்லி இந்த இயக்கத்தில் தான் இந்தியாவின் பெரும்பான் மைபானகள்விடுதலைஅடையமு டியும்என்றுபனகால் அரசர்இவ் வியக்கத்திற்குச் செய்த அனுகூல த்தைஎடுத்துக்காட்டிபடத்தைத் திறந்து வைத்தார்.

பிறகு அக்கிராசனர் முடிவுரை கூற எத்தாப்பூர் திரு அருணை சலம் நன்றிகூற இரவு 1மணிக்கு கூட்டம் முடிவு பெற்றது.

பிறகு காலாகா போர்டு பிரசி டெண்டு திருவாளர் ராஜமாணி க்க பண்டாரம் அவர்கள் வீட் டில் ஒரு பெரிய விருந்து நடக் கது. அவ்விருந்துக்குசேலம் அதி காரிகளும் பிரமுகர்களும் பொது ஜன சேவை கனவான்களுமாக சுமார் 200 பேர்களுக்கு மேல் விஜயமாகி இருந்தார்கள்.

அடுத்தநாள் காலையில் மந்திரி தவிர மற்ற கனவான்கள் புறப் பட்டுவிட்டார்கள். என்றாலும் மறு நாள் மாலையில் சங்கமைதா னத்தில்திருவாளர் எத்தாப்பூர் அ ருணாசலம் அவர்களாலும், தாசி யூர் திரு. எஸ். இராமசாமி அவர்களாலும் ஒரு உப ன்யாசம் நடந்தது. ஏராளமான கூட்டம் வந்திருந்தது. ந-நி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜப்பான் சில்க்கும், பிராந்தி, உல்லி க்குடியுமாகிய லைகளான போக போக்கியங்களை அனுபவித்துக்கொ ண்டு அவன் பிள்ளைகள் பி.எ., பி.எல்., படிக்கின்றார்கள் என்றால் இது இக்காட்டுப்பொருளாதாரக் கஷ்ட த்தின் பயனா? அல்லது சிலருக்கெப் போதும் பொருளாதாரக் கஷ்டம் சதா இருக்கும்படியாகச் செய்யப்பட் டிருக்கும் சமூகதாழ்வு ஏற்பாடா? என்பதைச் சற்று போசித்துப் பாருங் கள். ஆகவே, இத்தப்படியான, அதா வது செல்வத்தையும், பொருளையும் மக்கள் சமமாயனுபவிக்கமுடி யாதபடி செல்வாலத்திற்குமுன் பிரு த்தே செய்யப்பட்டிருக்கு மேற்பாட் டை-கட்டுப்பாட்டையுடைத்தெறிந் தீர்களானால் இக்குப்பொருளாதாரக் கஷ்டமேற்பட மார்க்கமிருக்குமா? என்று கேட்கின்றேன்.

மேல் நாட்டில் சகிலிமகன் பிர தமமந்திரியாகின்றான். குயவன் ம கன் லார்டு (Lord) 'பிரபு' சபையில் அங்கம்வகிக்கின்றான். கப்பலில்சட்டி பானைகளைக்கழுவி சுதந்தரம்செய்கின் றவன் குப்பைக் கூழங்களை கூட்டு கின்றவன் மகன் இராஜப்பிரதிநிதியா கின்றான். வண்ணான் மகன் கவர் னராகின்றான் என்பதை நாம் பார்க் கின்றோம். ஆனால் நமது நாட்டில் சக்கிலிகன் வீதிகளிலும் நடக்கக் கூடாது.

பறையன் சுடுகாட்டிலிருந்தொண்டு, பிணங்களுக்குக் கட்டியத்தணியைக்கிழித்துக் கட்டிக்கொள்ள வேண்டுமென்றும், பிணங்களுக்கு வாயில் போடும் வாய்க்கரிசி பைப்பொறுக்கி யெடுத்துக்கஞ்சி காய்ச்சிக் குடிக்கவேண்டுமென்றும் திட்டங்களிருந்தாலெப்படிப் பொருளாதாரத்திட்டம் பெருவாரியான பாடுபடும் மக்களுக்கு திருப்திகரக் கூடியதாகவிருக்குமென்று போதித்துப்பாருங்கள்.

இந்த நாட்டில் மேல் ஜாதிக்காரனெவ்வளவு சரீரத்தால் பாடுபடுகின்றனர்? என்று கவனித்துப்பாருங்கள்.

இந்நாட்டில் மக்களோ பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமனென்று பிரித்து, இதில் அவர்களுக்கு அந்தஸ்தும், வேலையும் பிரித்து, அதாவது பிராமணன் படிப்பதற்கும் படிப்பு சொல்லிக் கொடுப்பதற்கு மாகவென்றும், க்ஷத்திரியன் அரசு செலுத்தி-உத்தியோகங்கள் பார்க்க வருகவென்றும், வைசியன் வியாபாரியாய் வியாபாரம் செய்து ஜமீன்தாரனுய் விசுவாசக்குடித்தனம் செய்விக்கச்செய்து, பணம் சம்பாதிக்க வருகவென்றும், சூத்திரன் சரீரப்பிரயாசைப்பட்டு, உயிர்வாழுமளவுக்குமாத்திரம் ஊதியம் பெற, கூலிபெற வருகவென்றும், பஞ்சமனென்பவன் இந்த சூத்திரன் அதிகாரம் செய்யவும், அவனுக்கு வெட்டி வேலை செய்யவும் அவன் உண்டுகழித்தெஞ்சினையும், உதித்திக்கழித்த கந்தையையும் பெற்று, உண்டுஉதித்திஇழிபட்ட மிருகங்களிலும் கேவலமாயிருக்க வருகவென்றும் ஏற்பாடு எற் செய்தஇட்டமே-சுருணைச்சிரமதர்மமேதான்-இன்று இந்த நாட்டில் பாடுபடுபவர்கள் பொருளாதாரத்தில் நல்ல நிலையையடைய முடியாமல் இருக்கிறதேயொழிய, வேறுகாரணமில்லவேயில்லை. இத்தக்கூட்டம் அதாவது பாடுபடுகின்றவர்கள் எண்ணிக்கையில் மற்றவர்களை விட அதிகமாயிருப்பதால் காடு ஏழையாகவும், தரித்திரமாகவுமிருப்பதாக தெரிகின்றது. இவர்களது இந்த நிலைமையைமேல் ஜாதிக்காரர்கள் மற்றவர்களுக்கு-வெளியாருக்கு எடுத்துக்காட்டி, 'இதிதோ ஏழைநாடு, தரித்திரநாடு, பொருளாதாரத்தில் கீழான நாடு' வென்பதாக ஒப்பாரிவைத்து அதாவது ஒரு பிச்சைக்காரி பிச்சைப் பெறவேண்டுமானால் யாரிடத்திலாகவுள்ள ஒரு பொண்டிக் குழந்தையையோ, குருட்டுப்பிள்ளையையோ வாடகைக்குப்பெற்று வந்து, தனது குழந்தை 'குருடு' என்றும், 'மொண்டி' என்றும் சொல்லி, தெரியாதவர்களுக்குக்காட்டி, காசு, பணம்சம்பாதித்துக்கொண்டு, பிறகு குழந்தைகளைப்பெற்ற தாயினிடமொப்புவித்து விடுவது போல் இந்தியாவில் கீழ்பட்ட மக்களென்பவர்களின் நிலைமையை மேல் நிலைமையில் மிக்க சௌகரியமாக இருப்பவர்கள் காண்பிக்கவும் பரிதாபப்படுவதாக வேஷம் போட்டு தாராளத்தில் சுயலாபத்திற்கு அனுகூலமான லாபத்தை மேலும் மேலும் அடைவதற்குச்செய்யும் சூழ்ச்சியேதான் இன்றையப் பொருளாதாரக்கஷ்டமே' யொழியவேறில்லை.

இந்தியப் பொருளாதார நிலைமை சிறிது உயரவேண்டுமானாலும் இந்திய ஜனத்தொகையில் 100க்கு 75 பாகத்திற்கு மேலான இந்த சமூகங்கள் பொருளாதாரத்துறையில் மேல் வருவதற்கு சமூகத்துறையில் உள்ள கட்டுப்பாடுகளை உடைத்தெரிந்தால் ஒழிய வேறு வழியில் இந்திய மக்கள் பொருளாதாரத்துறை சீர்படுத்தப்படுதல் என்பது சிறிதும் முடியாத காரியமேயாகும். ஆகவே இதைத்தவிர மற்றவழியில் பொருளாதாரத்துறையைப்பற்றி பேசுபவையெல்லாம் புரட்டும், ஏமாற்றமுமேயல்லாமல், அதில் சிறிதும் அறிவுடைமையோ, நாணயமோ உண்மையோ இல்லையென்றே சொல்லுவேன். ஆதலால் நமது நாட்டுப் பொருளாதாரக்கஷ்டமென்பது இம்மாதிரியான ஒருபெரும்பிரிவுள்ள சமூகத்திற்கிருக்கும் குருட்டுக்காரணமே இந்மாதிரியானதொரு ஞச்சிரமமுறையேயல்லாமல் வேறல்லவென்பதே எனது அபிப்பிராயம். இந்திய நாட்டிலெவ்வளவு பஞ்சமிருப்பதாக சொல்லப்பட்டாலும், எவ்வளவு தரித்திரமிருப்பதாக சொல்லப்பட்டாலும், எந்தக்காலத்திலும், எந்தக்காரணத்தைக்கொண்டும் மேற்கண்ட உயர்ந்த ஜாதிக்கூட்டமானது ஒருநாளாவது, ஒருநிமிஷமாவது, கஷ்டப்படுகிறதாகவோ பட்டினியிடப்படுவதாகவோ சொல்ல முடியவே முடியாதென்பதை நீங்கள் கூர்மையாய் யோசித்துப்பார்த்தீர்களானால், உங்களுக்கு விளங்காமல் போகாது.

மற்றுமின்னுமொரு விஷயத்தினாலும் நமது பொருளாதார நிலைமைக் கஷ்டமாகக் காணப்படுவதற்குக்காரணம் சொல்லவேண்டியிருக்கின்றது. அதாவது நமது பொருளாதார வருவாய்களும் செல்வர்களுடையசெல்வத்தின் பயன்களும் நாட்டு நலனுக்கும், பெரும்பான்மையான ஏழை மக்கள் பாடுபடுகின்றவர்கள் என்கிறக்கூட்டத்திற்கும் சேர முடியாமல் சுமிபோராலும் மதத்தின் போராலும் சடங்குகளின் போராலும் காசமாரும் ஒரு பெரிய மேலான துறையேயாகும்.

இந்த நாட்டு செல்வவாய்களெல்லோரும் பணம் சம்பாதித்து செல்வவான்களானதற்குக் காரணமிந்நாட்டுப்பெரும்பான்மையான மக்கள் சரீரப்பிரயாசையின் பயனுலேற்பட்டதென்பதை சிறிதும் உணராத 'கடவுள் தங்களுக்குக்கொடுத்தா' ரென்பதாகவெண்ணிக்கொண்டு, அந்தக்கடவுளுக்கு நன்றி செலுத்தும் முறையிலும், இன்னும் மேன் மேலும் செல்வம் பெருகவேண்டுமென்பதற்காக விக்ஞாபனம் போட்டு, வஞ்சம் செலுத்தும் முறையிலும் செல்வத்தைப் பழாக்குகின்றார்கள். இதன்பயனாகவே இந்த நாட்டில் வருஷமொன்றுக்கு பல கோடி ரூபாய்கள் பாழாவதைப்பார்க்கலாம். நமது தமிழ் நாட்டில் மாத்திரம் வருஷமொன்றுக்கு இரண்டு கோடி அல்லது மூன்று கோடி ரூபாய்கள் வரும்படி வரத்தக்க மூலத்தானங்கள், சொத்துக்கள் கோவில் பேரால் மதத்தின் பேரால் முடக்கிவைக்கப்பட்டிருக்கின்றன. மற்றும் மூன்று கோடி நான்கு கோடி ரூபாய் வருஷம் ஒன்றுக்குப் பொதுமக்களின் கருவூலமும், சிலவிடங்களில் கைமுதலும் பாழாகும் வண்ணம் இராம தேவைகள் முதல் உயர்தரக் கடவுள்கள் வரையுள்ள இலட்சக்கணக்கான கடவுளுக்குப்பூஜை, நைவேத்தியம், உற்சவம், காணிக்கை முதலிய செலவுகளும், கோவில் திருப்பணி குடமுழுக்கு முதலிய செலவுகளும், மற்றும் இரதம், தேர், வாகனம், பாத்திரம், பணம் துணிமணி, நகை முதலிய செலவுகளும் தேசத்தின் பொருளாதார நிலைமையைப் பாழாக்குகின்றன. தமிழ் நாட்டில் மாத்திரம் இவ்வளவென்றால் இந்தியா மொத்தமுமெப்படியிருக்குமென்று நினைவுங்கள். இந்த உண்மையை மக்களுக்கு எடுத்துக்காட்டி இந்த நாசமாய்ப்போகும் பொருளாதாரத்தைக்காப்பாற்றி அச்செல்வங்கள் இந்திய மக்களுக்குப் பயன்படுத்தச் செய்யாமல் இத்துறையில் சிறிதுமுயற்சியுமில்லாமல் 'நமது செல்வம் அக்ஷிணாட்டுக்குப்போகின்ற' தென்கின்ற ஜாலமந்திரத்தைப் பிரயோகித்து முட்டாள்களை ஏமாற்றி உண்மை அறியாவிருக்கும்படி பொதுஜனத்தின் பேரால் அரசியலின் பேரால் சூசுகிகள் செய்யப்பட்டு வருகின்றதை நமது மக்கள் உணரும்படி செய்யவேண்டும்.

இந்த நாட்டுச் செல்வம் வெளியில் போவதென்பதை அடியோடு நிறுத்தப்பட்டுப் போவதுடன் வெளி நாட்டுச் செல்வங்கள் எல்லாம் நமது நாட்டுக்கே வருவதற்கு வகைத்தெய்துகொண்டாலும், இன்றையவருணாச்சிரம முறையும், மதசம்பந்தமான கடவுள் சடங்குகளின் முறையும் இருக்கும் வரை மேற்கண்ட பாடுபடாமல் சோம்பேறிகளாய் வாழ உரிமையுள்ளவனும், பணக்காரனுக்கு உரிமையுள்ளவனும், உத்தியோகம் பார்க்க உரிமையுள்ளவனும், பொதுஜனப்பிரதிநிதிக்கு உரிமையுள்ளவனும் தான் இப்போதைவிட இன்னுமதிகமாகக் கொள்ளையடிக்கவும், போகபோக்கியங்களை விக்கவும், கஷ்டப்படுகின்றவர்களை பட்டினி கிடப்பவர்களாவே இன்னும் அதிகமாய் கொடுமை செய்யவும் ஒரு கூட்டையுடையவர்களாகவே தவிர, ஒருகாலும் இந்தியாவிலின்று பொருளாதாரத்தால் கஷ்டப்படும் ஏழைமக்கள், பட்டினி கிடப்பவர்களென்கின்றவர்கள் ஒருகாலும் ஒரு விதத்திலும் சீர்பட முடியவே முடியாதென்பதை உணருங்கள்.

மேலும் இந்தியப் பொளாதாரத்துறை என்பதை சீர்படுத்த மற்றொருறையிலும் பாடுபடவேண்டியிருக்கின்றது.

அஃதென்னவெனில் மனிதன் தனது வாழ்வுக்கும், தாழ்வுக்கும் கடவுளே காரணமென்று எண்ணிக்கொண்டு கடவுள் மீதே சகல பொறுப்பும் போட்டுவிட்டு மாடுபோல் உழைப்பதைமாத்திரம் தன் கடமையாய்க்கொண்டிருக்கும் கடவுள் உணர்ச்சியை ஒழிக்க வேண்டுமென்பதாகும்.

நம் நாட்டில் பாடு பட்டு ஏழையாய் பட்டினியாய் இழிவாய் இருந்து கஷ்டப்படுபவன் மாத்திரம் தன் கடவுள் உணர்ச்சி கொண்டு நாசமாய்ப் போகின்றானேயொழிய செல்வமும் கையுமுடையவனும், பணமுள்ளவனும், சோம்பேறியாய் வாழ்பவனும் ஒருநாளும் உணர்ச்சி கொண்டு கடவுளுக்குப் பயந்து நடப்பது என்கின்றகொள்கையில் நடவுபடுவதே இல்லை.

மேலும் எவ்வளவு அக்கிரமும் மோசமும் செய்தாலும் அந்தக் குணங்களால் சம்பாதித்த பொருளில் ஒரு பாகத்தை கடவுளுக்குக் கொடுத்தும் மன்னிப்புபெற்றுவிடலாம் என்றும் மேலும் மேலும் செல்வம் பெருவதற்குக் கடவுளுக்கு லஞ்சம் கொடுக்கலாம் என்றுமே கருதுகின்றான்.

ஆகவே கடவுளுணர்ச்சியானது பாடுபடுபவனுக்கஷ்டமுடனும் பிச்சைக்காரனுக்கும் சோம்பேறியாய் வாழ்பவனுக்கும் செல்வம் பெற்று சுகப்படவும் தான் உதவுவதாயிருப்பதால் அதை ஒழிக்கவேண்டிய விஷயத்திலும் பாடுபடவேண்டியது அவசியமாகும்.

தவிரவும் பொருளாதாரத்திட்டத்திற்கு மற்றொரு துறையிலும் பாடுபடவேண்டியது அவசியமாகும். அதாவது மனிதன் பொருள் அடைவதற்காகச் செய்யும் தொழில்கள் எல்லாம் பழைய முறைப்படி 1000, 2000, வருஷங்களுக்கு முன்னால் செய்து வந்த முறைப்படி செய்துவரவேண்டுமென்கின்ற மூடநம்பிக்கையையும் மூடப்பழக்க வழக்கங்களையும் ஒழித்து புதிய மாதிரியில் அதாவது யந்திரம் முதலிய வகையில் பாடுபடும் பொருள் சம்பாதிக்கும் முறையில் பாடுபட ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். இதைப்பற்றி வேறு பல சமயங்களில் விசேஷமாகப்பேசி இருப்பதால் அவற்றைக்கவனித்தால் தெரியவரும்.

ஆகவே இவ்விஷயங்களை எல்லாம் நீங்கள் தக்கபடி கவனித்து உங்களுக்கு பட்டபடி கடவுள்கள் என்றுபேசினர்.

பிறகு திரு. எல். வி. லிங்கம் "காங்கிரசும்சுயமரியாதையும்" என்பதைப்பற்றி பேசினர். பிறகு அக்கிராசனர் திரு. கண்ணப்பர் முடிவுரை நிகழ்த்தினர். அவர் அக்கிராசனர் முறையில் பேசியதால் அவர் பேசியதில் உள்ள அபிப்பிராயபேதங்களை எடுத்துக்காட்டமுந்திய உபன்யாசகர்களுக்கு வழிவிடாமல் போய்விட்டதென்றாலும் அநேக மக்களுக்கு உண்மை விளங்காமல் போகவில்லை.

"மகாத்மா" காந்தி வெருட்காந்தி யாகவேண்டு மென்றுரல்.

(எவன் எழுதினலென்ன).

1. பார்ப்பனர்கள் கோவில், சடங்கு, புராணம் முதலிய வழி களால் பாமர மக்களை ஏமாற்றி ப்பொருள் பறிப்பதை நிறுத்த வேண்டு மென்றும்,

2. இந்து மதம் என்பது பார்ப்பனீய மதம் தவிர வேறில்லை என்ற உண்மை எல்லாச்சரித் திரக்காரர் களாலும் அறிவாளிக ளாலும் நிர்ணயிக்கப்பட்டிருக்கி றதென்றும்,

3. தீண்டாமையை அறவே ஒழிக்கும் வரையிலும் காங்கிரஸ் னுடைய எல்லாப்பிர சாரங்களை யும் நிறுத்தி தீண்டாமை யொழி ப்பதிலேயே முழு கவனம் செலு த்தப்படு மென்றும்,

4 பகவத்கீதை படிப்பதால் வருண சிரமக்கொள்கை தான் பாவுமே யொழிய சமத்துவம் பரவாது என்றும்,

5. ராமாயணமானது, கிரீஸ் தேசத்து ஹோமியஸ் கதையைப் போலவும் இழந்த சுவர்க்கம் (Paradise Lost) போலவும் ஒரு கட்டுக்கதையே யொழிய உண்மையாய் நடந்த தல்ல வென்றும்,

6. புராணங்களே நிறைந்த ஹிந்தியைத்தேச பாஷையாய் வைத்துக்கொள்வதை விட உலக பாஷையாகிய "இங்கிலீஷை" த்தேச பாஷையாகக்கொள்வதே அறிவுடைமை யென்றும்,

ஆகிய இந்த விஷயங்களில் ஏதேனும் ஒன்றையோ, அல்லது எல்லாவற்றையுமோ வெளியில் சொன்னால் போதும். இந்த நிமி ஷத்தில் "மகாத்மா" வாயிருக்கு ம் திரு. காந்தியவர்கள் அடுத்த நிமிஷத்தில் 'மூட்டாள்' என்றும், 'பைத்தியக்காரன்' என்றும், 'அவ ர்பேச்சை ஒருவரும் கேட்கக்கூ டா" தென்றும் முன்னே சொன் ன பழம் பாடத்தை நமது பார்ப் பனர்கள் திருப்பிப்படிக்க ஆரம் பித்து விடுவார்கள். திரு. கா ந்திக்கா இதெல்லாம் தெரியாது? அதனால் தான் கோவில்களை "வேசாரவிடுதிகள்" என்று சொ ன்னதும் அந்த விடுதிகளை ஒழிக் கும் மார்க்கத்தைபபற்றி கடுகள வு கூட கவலை கொள்ளாமலிருக் கிறார்.

பார்ப்பானே பிழைத்து நாம் ஒடு எடுக்க வேண்டு மென்றுரல்.

(எவனெழுதினலென்ன).

1. ஒரு சின்ன விஷயமானா லும் கோர்ட்டுக்குப்போக வே ண்டும்.

2. 'காங்கிரஸ்' 'காங்கிரஸ்' என்று கூச்சல் போட்டு எல்லா உத்தியோகங்களிலும், பொது ஸ்தாபனங்களிலும் கோட்டைவி ட வேண்டும்.

3. 'ராமாயணம்' காலக்ஷேப ம் வைத்து வெள்ளிச்செருப்பு, தங்கச்சூடாமணி செய்து தானம் செய்ய வேண்டும்.

4. புண்ணியாஜனம், சோறூ ட்டுதல் அக்ஷராப்பியாசம், கலி யாணம், சாந்தி முகூர்த்தம், சீம ந்தம், கல்லெடுப்பு, கருமாதி, மா ஸ்யம், வருஷாப்பியம், ஸ்ரார்த் தம் முதலிய எல்லாவற்றையும் விடாமல் செய்து கொண்டே வர வேண்டும்.

5. கக்கூசில் இடக்கும் கல்லை யெடுத்து மனுஷன் மாதிரி செதுக்கி ஒரு மேடையில் வைத்து அதைச்சுற்றி குட்டிச்சுவர் எழுப்பி அதன் தலையில் தண்ணீரை ஊற்றி காலையிலும் மாலையிலும் உள்ளே போய் கன்னம் வீங்க அறைந்து கொண்டு வர வேண்டும்.

6. காங்கிரஸ் காரன் பேச்சை க்கேட்டு அன்னிய பாஷையாகி ய இங்கிலீஷைப்படிப்பதை நிறு த்திவிட்டு, ஹிந்தி பாஷையையும் சமஸ்கிருத பாஷையையும் படிக் க வேண்டும்.

7. இந்த உலகம் அநித்திய மென்றும் மேலுலகமே நித்திய மென்றும் நம்பி, இந்த உலகத் திற்கு வேண்டியதை விட்டு, மே ல் உலகத்தில் போய் சுகமமாய் இருப்பதற்கான ஏற்பாடுகளையே செய்ய வேண்டும்.

8. எடுத்ததற்கெல்லாம் "தலை விதி" யென்றே "கடவுள் செ யல்" என்றே சொல்லித்திருப்தி ப்படுத்திக்கொள்ள வேண்டும்.

9. "சைவம் வைணவம்" ஆகிய இரண்டு மதங்களையும் பத் திரமாக்காப்பாற்றி வர வேண் டும்.

10. திரு. காந்தியார் சொல் லும் வருணசிரமத்தை ஆதரித்து அதை நிலை நாட்டப்பாடு பட வேண்டும்.

சுயமரியாதைச்சங்கம் ஜோலார்பேட்டை..

நிறைவேறிய தீர்மானங்கள்.

19—6—31 தேதி திரு. விஜ யரங்கம் அவர்கள் தலைமையின் கீழ் நடந்த கூட்டத்தில் கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேற் றப்பட்டன.

1. அடுத்த மாதத்தில் திரு. சாமி நாயுடு அவர்களின் தலை மையின் கீழ் வேலூர் சந்தோ ஷம் அவர்களைச் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி சொற்பொ ழிவாற்ற கேட்டுக்கொள்ள தீர் மானிக்கப்பட்டது.

2. ஜோலார்பேட்டை தொ ழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 18—6—31 தேதி நடந்த பஞ் சாயத்தார் கூட்டத்தில் ஆதிதிரா விடர்களை அங்கத்தினராக சேர் க்க ஏகமனதாக மறுத்துவிட்ட தை இக்கூட்டம் பலமாகக் கண் டிப்பதுடன் தற்கால பெண்கள் உலக முன்னேற்றத்திற்கு தீண் டாமையை ஒழிக்க முயற்சி செ ய்து வருவதை இவர்கள் உணர்ந் தாவது செய்த பிழையைத்திருத் திக்கொள்ளுமாறு கோறப்படுகிற தென ஒரு நிருபர் எழுதுகிறார்.

கோட்டாறு சுயமரியாதை வாசிப்புச் சாலை 2 வது ஆண்டு நிறைவு விழா.

4-7-31 சனிக்கிழமை வே வாசிப்புச்சாலையின் 2-வது ஆண்டு நிறைவு விழா கோட்டாறு ஸமர சமீதியில் அமைக்கப்பட்டிருக் கும் சமதர்ம மண்டபத்தில் செ ன்னை சட்டசபை அங்கத்தினர் உயர்திரு. W. P. A. சௌந்திர பாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெறும். அவ்வமயம் பெரி யார் ஈ. வெ. ராமசாமி அவர்கள், சாமி. சிதம்பரனார் அவர்கள், அ. பொன்னம்பலனார் அவர்கள், அ வர்களது துணைவியார் சுலோச்ச ணா அவர்கள், அ. இராகவன் அவர் கள், கே. வி. அழகர்சாமி அவர் கள், கே. நாராயணப்பெருமாள் அவர்கள் பி. ஏ., எம். எல். சி., மன்னத்து பத்மனாப பிள்ளை அவ ர்கள், கே. ஐயப்பன் அவர்கள் பி. ஏ., மாஜி ஜட்ஜ் எம். கோவிந் தன் அவர்கள் பி. ஏ., பி. எல்., எம். எல். சி., முதலிய பெரியார் கள் விஜயஞ்செய்வார்கள். பல பெரியார்களுடைய சொற்பொ ழிவுகள் நிகழும் என சங்கக்காரி யதரிசி எழுதுகிறார்.

சுயமரியாதைத்திருமண வாழ்த்து.

பருத்திக்துறை சுகந்த வாசத் தில் 8—6—31 தேதியில் எவ் வித எதிர்ப்புக்குமஞ்சாது மூடப் பழக்க வழக்கங்களையும் புரோகி தர்களால் தமிழ் மக்களுக்கு வீச ப்பட்ட பாசவலையையும் அறவே வெறுத்து நீக்கித்திருமணஞ்செ ய்த யாழ்ப்பான வாலிபர்கட்கு முதன் முதலாக வழி காட்டிய வீர சிரோன்மணிகளாகிய திரு. கோபாலுவையும் திருமதி சின் னம்மாளையும் வாழ்த்துவதோடு, பருத்திக்துறையில் சுயமரியா தை மகாநாடு கூட்டுவதற்கு தங் களாலாகிய உதவி செய்ய சற் றுக்கிராமங்களில் சுயமரியாதை யுள்ள வாலிபர்களும் காத்திருக் கிறார்களென எழுபத்தாறு வய துள்ள சைவப் பெரியார் அல் வாய் வடக்கு வீ. ஆறுமுகமும் சிலரும் எழுதுகிறார்கள்.

சுயமரியாதைத் திருமணம்.

சுங்கடாளு பத்தாம்பர் சந்தை.

11—6—31 தேதிவியாழக்கிழ மை இரவு 9 மணிக்கு மேல் 10 மணிக்குள்ளாக தஞ்சாவூர் தம்பு சாமி அவர்கள் குமாரர் வீடிவே லுக்கும் தஞ்சாவூர் வீராசாமி அவர்கள் குமாரத்தி அன்னம்மா ளுக்கும் சுங்கடாளு வீராசாமி அவர்கள் இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடந்தேறியதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

ஆலை வெகு சாதாரணமானது என்றும், எந்தஜட பதார்த்தத் தோடும் சம்பந்தப்பட்ட தல்ல வென்றும் சொல்லுவார்கள். இப் போது கேட்கிறேன். இந்த கைய ஒரு வஸ்துவைப்பற்றி எந்த மனிதனுவது ஒரு அணு வளவாவது நினைக்க முடியுமா என்பதைச்சொல்லுங்கள். நன்கு யோசித்துச் சத்தியமாகச்சொல் லுங்கள். ஆகவே தற்கால மத சாஸ்திரத்தின் அகாதியில் "ஆத் மா" அல்லது "ஆவி" என்றால் "சூன்யம்" "பூஜ்யம்", "அப த்தம்" என்பதே பொருளாகும். எனவே, "ஆத்மா" வைப்பற்றிய அபிப்பிராயமும் [illegible] பற்றிய அபிப்பிராயமும் [illegible] லவே "மாதிரி" யில்லாத கருத்தே யாகும்.

(தொடரும்)

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

ஊரைவிட்டுப்போய் ஒன்று அல்லது இரண்டுமாதங்கள் வரையிலும் அந்தப்பாடல்களையும் ஆட்டங்களையும் பையன்களடிக்கொண்டிருப்பது போலவும், நமது வாலிபர்கள் அவர்களுக்குக்காணப்படும் காரியங்களிலும், ஸ்தாபனங்களிலும், இயக்கங்களிலும் வீழ்ந்து, அவற்றையே தங்களது வாலிபப் பருவத்திலுலேற்படும் பயமற்றதும், சுயநலமற்றதும், தியாகத்திற்கு தப்பாயிருப்பதுமான அரிய குணத்தைப் பயன்டுத்திவிடுகின்றார்கள். இந்த மாதிரி பயன்படுத்தப்பட்டக் காரியங்களின் பயன் தான் இன்றுபல வாலிபர்கள் தாசி வீடுகளில் திரிந்துகெண்டு, தங்கள் நேரத்தையும், சரீரத்தையும், செல்வத்தையும் பாழாக்கிக் கொண்டு திரிவதும், அதுவே அந்த வாலிபன் ஜன்மமெடுத்ததின் பயனென்று கருதுவதும், அவர் சார்ந்திருக்கும் அந்ததாசிக் கூட்டங்கள் சொல்லுமுபதேசங்களும், நடவடிக்கைகளும் அவர்களுக்கு உண்மையாய்த் தோன்றுவதற்கும் காரணமாயிருந்து வருகின்றன. அதுபோலவே மற்றும் பல வாலிபர்கள்குடி, காலித்தனம், சிட்டாட்டம் குதிரைப்பந்தயம் முதலிய சூதாட்டமென்பதும், தெய்வபக்தராவதும்; மதபக்தராவதும், மதப்பூச்சுகள் பூசுவதென்பதும், படிப்பதென்பதுமாகிய அநேககாரியங்களிலீடுபடுவதைகளும் ஆகிவிடுகின்றன. வாலிபவயதிலுள்ள எழுர்ச்சியும், வேகமும், பயமற்றத்தன்மையும் பொறுப் பெதுவென்றுணர்வதற்குப் போதிய அவகாசமும், சௌகரியமும், அனுபவமுமில்லாத காலபலனும் அவர்களே யேதாவது கண்மூடித்தனமானக் காரியங்களிலிழுத்து விட்டு, அருங்குணங்களை வீணுக்குவதோடு, பின்னலும் அவர்களது வாழ்வில் கஷ்டப்படவும் செய்து விடுகின்றன. ஆதலாலேயே சிற்சில சமயங்களில் நான் வாலிபர்கள் "ஜாக்கிரதையாகவே" யிருக்கவேண்டுமென்று அவர்களுக்குச் சொல்லுவதுடன், அவர்களது வேகம் பொருந்திய ஊக்கம் சிற்சில சமயங்களிலபாயகரமாய் நாட்டுக்குப் பயனற்றதாய் சிலசமயங்களில் கெடுதியையும் ஆபத்தையுமுண்டாக்கக் கூடியதாபேற்பட்டுவிடக்கூடுமென்று சொல்லுவதுமுண்டு. அவர்களது எழுர்ச்சியின் வேகத்தினால் செய்யப்பட்டக் காரியங்கள் அவர்களுக்குப் பலன் கொடுக்காததாலோ அல்லது அக்கம் பக்கத்திய சார்பால் வேறுவித யெண்ணங்கள் தோன்றிவிடுவதாலோ, அதாவது தான் சகவாசம் செய்தவர்களுடைய சகவாச தோஷத்தால் மற்றும் சுயநலமோ, பெருமையோ யேற்படுத்திக் கொள்ள வேண்டுமென்கின்ற ஆசையேற்பட்டு விடுகின்ற காரணத்தால், அவர்களது முன்னைய வேகத்தின் பலனான கெடுதியை(Reaction)யும் சில சமயங்களில் உண்டாக்கிவிடுகின்றது. அதாவது, வேகமாய்போகும் எழுர்ச்சியென்னும் வண்டியானது அனுபோகமின்மை தூரியாமை சுயநலமென்னும் சுவற்றில் முட்டிமோதி, வேகத்தின் மிகுதியிலுள் சுவரும் கெட்டு, வண்டியும் பழுதாகி, அக்கம்பக்கத்தவர்களுக்குத் தொல்லையையும் விளைவித்து விடுகின்றது.

இத்தியாதி காரணங்களால் வாலிபர்கள் மிக்க ஜாக்கிரதையாக, பொறுமையாகயோசித்தே ஒவ்வொரு காரியத்திலும் தங்களருங்குணங்களைப் பயன் படுத்தவேண்டும். வாலிபர் உள்ளம் பெட்ரோலுக்குச் சமமானது. உலக இயக்கத்தோற்றங்கள் நெருப்புக்குச் சமமானது. வகையற்ற முறையில் பக்கத்தில் ஒருதாக் நெருப்புப் பிடித்து எங்ஙனேயே வீணுக்கி மற்றவர்களுக்குத் தொல்லையை விளைவித்து விடும். ஆகவே "வாலிபர்களே! ஜாக்கிரதை!!! ஜாக்கிரதை!!!" யென்று நான் உங்களுக்குச் சொல்லவேண்டியவனாயிருக்கின்றேன்.

இன்று இங்கு கூடியிருக்கும் வாலிபசங்க ஆண்டு விழா வரவேற்புத் தலைவருரையும், காரியதரிசிபவர்களதிக்கையுரையும் நான் கேட்டவரையிலெனக்கு சரியென்று பட்டவிஷயங்கள், கொள்கைகள், முதலியவைகளையேஅவர்களும் தங்களது கொள்கையாகவும், நோக்கமாகவும் கொண்டிருப்பதாகயுணர்கிறேன். ஒன்று அரைசிறிது அபிப்பிராய பேதத்திற்கிடமானதாக விருக்கலாம். ஆனாலும், எல்லாவற்றையுமே இன்னமுமாராய்ந்து பார்க்கும்படியும், அவர்களுக்குத் தோன்றுமனுபோகஸ்தர்களைக் கொண்டும், சுயநலமற்றவர்களைக் கொண்டும்; முன்பின் நடவடிக்கையை யாராய்ச்சி செய்ய சௌகரியமுள்ள வழிகாட்டி மனிதர்களைக் கொண்டும் அக்கம் பக்க நேசிகழ்ச்சிகள் அவற்றின் அனுபவங்கள் ஆகியவைகளைக்கொண்டும் விஷயங்களை அறிந்து; தங்கள் கொள்கைகளையும், திட்டங்களையுமுறுதிபடுத்திக் கொள்ள வேண்டுமாய்விரும்புகின்றேன். இவைகளைத்தான் நான் என்னை மதிக்கும் வாலிபர்களுக்குச் சொல்லித்தீரவேண்டியிருக்கின்றது.

வாலிப பருவத்தின் கோலத்தையும், அதனது பலனையும்நான் சிறிது அறிந்தவனேயாவேன். வெகுகாலம் நான் வாலிபனுகவிருந்தவன். வாலிபனுகவேயிருந்து சாகவேண்டுமென்ற ஆசையை யுடையவன். அப்பருவத்தின்சக்தியையும் மேன்மையையுமனுபவித்தவன். அந்த அனுபவம்தப்பான வழியிலுமிருக்கலாம் சரியான வழியிலுமிருக்கலாம். ஆனால், நான் வாலிபப்பருவத்தை அனுவசியமாய்விட்டுவிடாமல் அதைப்பல வழிகளில் கசக்கிப் பிழிந்தவன். இந்த உண்மை மற்றவர்களைக்காட்டிலும் நீங்களும், உங்கள் பெரியோர்களும் நன்றுயுணர்ந்தவர்களாவீர்கள். ஏனெனில், நான் உங்களிலொருவனுகவும், உங்கள் குடும்பஸ்தர்களிலொருவனுகவு மிருந்துவந்தவன். ஆகவே, இவ்வு, இவ்வுலகதரியமாய் எனது சகோதரர்களுக்கும், குழந்தைகளுக்கும் சொல்லுவதுபோல் இவ்விஷயத்திலுங்களுக்கு இவ்வளவு எச்சரிக்கை செய்கின்றேன்.

மேலும் சகோதரர்களே! நமது நாடு இன்று இருக்கும்நிலைமையிலிருந்து சிறிது மாற்றமடையவேண்டுமானாலும் மதசம்பந்தமாகவும், அரசியல் சம்பந்தமாகவும் இந்நாட்டில் சுயநலக்காரரும், சோம்பேரிகளும், மற்றவர்கள் உழைப்பில் வாழ முடிவுசெய்து கொண்டு தங்கள் வாழ்க்கையை நடத்திவருபவர்களும் இரண்டுவித உணர்ச்சியால் மக்களை கட்டுப்படுத்தி மூடர்களாக்கி, அடிமைகளாக்கி வைத்து பயன் பெற்று வருகின்றார்கள். அவை எவை எனில் மத இயல் அரசியல் என்பவைகளாகும் மதத்தின் பெயரால் மோக்ஷலக்ஷியமும் அரசியலின் பெயரால் சுயராஜ்ஜிய லக்ஷியமுமே மனிதனின் வாழ் நாளில்முக்கியமானது என்று மக்களுக்குள் புகுத்தப்பட்டுவிட்டது. இரண்டு விஷயத்திலும் பிரவேசித்து இருக்கும் மக்களில் 100க்கு 90பேர் இரண்டுக்குமே அருத்தம் தெரியாதவர்களாகவேஅதில் உழன்றுகொண்டு இருக்கின்றார்கள். பொருள்தெரிந்த சிலபெயர்கள் தங்கள் சுயநலத்தை உத்தேசித்து அவற்றை வியாபாரமாய் நடத்திவருகின்றார்கள்.

மக்களின் சுபாவம் பொருள் தெரிந்தகாரியத்திற்கு பயப்படுகதை விட பொருள் தெரியாத காரியத்திற்குத்தான் அதிகம் பயப்படும். ஏனெனில் பொருள் தெரிந்த காரியங்களுக்குப்பரிகாரம் செய்து கொள்ளக் கூடுமானநிலை அதற்குப்பயப்பட மாட்டான். பரிகாரம் செய்துகொள்ள முடியாததற்கே அதிகம் பயப்படுவான்.

அதுபோலவே ஒரு வீட்டுக்குள் பிரவேசிப்பவனுக்கு அவனேப்பிரவேசிக்கால் இருகச்செய்ய 'அந்த கேள் இருக்கும் பாம்பு இருக்கும்" என்று சொன்னுல் அவன் அதற்குப்பயப்படாமல் கையில் தடியையும், காலில் பூட்சையும் போட்டுக்கொண்டு உள்ளே பிரவேசிக்கத்துணிந்துவிடுவான். அல்லது கையில் நெருப்புப்பந்தத்தையுடித்துக்கொண்டாவது பிரவேசிக்கத்துணிந்துவிடுவான். ஏனெனில் தேளைப்பற்றியும், பாம்பைப்பற்றியும் அவனுக்குத் தெரியுமாதலால் அவைகளின்கஷ்டத்தில் இருந்து விலகஎற்பாடுசெய்துகொள்ளதெரியும். ஆனால் அதேவீட்டில் பிசாசோ, பூதமோ இருப்பதாகச் சொல்லிவிட்டால் அந்தவீதியில் நடக்கக்கூட பயந்து கொள்ளுவான். என்ன சொன்னுலும் அந்த வீட்டில் இருக்க சம்மதிக்கவே மாட்டான். காரணம் என்னவென்றால் பிசாசு பூதம் என்பது இன்னது இன்னமாதிரியாய் இருக்கும் என்கின்ற விபரம் அவனுக்குத்தெரியாது. ஆகலால் அதிலிருந்து தப்ப உபாயம் செய்துகொள்ள அவனுக்கு முடிவதில்லை. அதுபோலவேதான் மனிதனுக்கு மோட்சம என்பது என்ன? சுயராஜியம் என்பது என்ன? என்று தெரிந்திருந்தால் அவற்றின் பேரால் இவ்வளவு மக்கள் ஏமாந்திருக்க முடியாது. அருத்தம் தெரியாததையும் மனதில் படமுடியாததையும் பிரசாரம் செய்வதால் மக்கள் ஏமாந்துவிடுகின்றார்கள். ஏதோ தனக்கு பெரிய லாபம் வருகின்றது என்று கருதுகின்றன். வியாக்கியானம் செய்துபார்க்கும்படி சொன்னுல்மோக்ஷத்தையும் சுயராஜியத்தையும்பற்றி அனேக 'பெரியார்கள்' ஏற்கனவே சொல்லி இருப்பதால் அதைப்பற்றி சந்தேகப்படுவதோ அல்லது விளக்கிக்கொள்ள ஆசைப் படுவதோ குற்றமானது என்று கருதுகின்றன்.

இந்த மனப்பான்மையிலேயே தான் மனிதன் வாழ்க்கையை நடத்துகின்றன். இதனுலேயேதான் பாமர மக்கள் சிறிதும் தலைதூக்க முடியாமல் மிருகப்பிராயத்தில் இருந்து வருகின்றார்கள். 'பகுத்தறிவைப்பயன்படுத்துவதே பாவம்' என்று சொல்லப்பட்ட ஒரு ஆயுதமே மக்களை அழுத்தி வைத்துக்கொண்டிருக்கின்றது. அர்த்தமற்ற உண்மையற்ற சொற்களுக்கு மதிப்புச்செய்கிறது.

உதாரணமாகப் பாருங்கள். மனிதனுடைய மூடத்தனத்துக்கு ஒரு உதாரணம் காட்டுகின்றேன்.

மனிதன் திருடுவான். நம்பிக்கைதுரோகம் செய்வான், மோசம் செய்வான், கொலையும் செய்வான். ஆனால் ஒருபறையன் கொண்டுவந்த தண்ணீரை தொட்டுகுடி என்றால் மதிக்கமாட்டான்.

பாவம் என்று ஒன்று இருந்தால் மோசம் செய்வதைவிட, நம்பிக்கைதுரோகம் செய்வதைவிட, பதரப்பதர கொலைசெய்வதைவிட, வேறு ஒன்றும் அதிகபாவம் இருக்கமுடியாது. ஆனால் இவற்றையெல்லாம் பஞ்சாமிருதம் சாப்பிடுவதுபோல் செய்துவிட்டு பறையனே தின்னையில் உட்காரவைப்பது என்றால் கடங்குகின்றன் என்றால் மனித சமூகத்தை எவ்வளவு சுயநலமாக இருக்கும்படியாகவும்,மூட்டான்தனமாக இருக்கும்படியாகவும் வாழ்க்கை முறைகள் மதமுறைகள் மோட்ச நரக முறைகள் அமைக்கப்பட்டிருக்கின்றது என்று பாருங்கள். இதுபோலவே அரசியலிலும் அரசாங்கத்தாருக்கு அனுகூலமாக இருக்கின்றவர்கள் யார்? யாருடைய துரோகத்தால், சுயநலத்தால் இந்நாட்டில் அக்கிரமமான அரசாங்கம் இருந்து வருகின்றது? என்பவைகளை முக்கிய காரணமாய் உணர்ந்து அந்ததுறையில் ஒரு சிறுவேலையும் செய்யாமல் பாமர மக்களிடம் சுயராஜிய வியாபாரம் நடத்துவது என்பதை மக்கள் உணர முடியாமல் இருப்பதோடு உணர்ந்து சொல்லுகிறவர்களையும் மக்கள் வெறுக்கும்படி செய்யப்பட்டிருக்கின்றதென்றால் அரசியலின் பேரால் மக்கள் எவ்வளவு முட்டான்கள் ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை கவனித்துப்பாருங்கள். உங்கள் அறிக்கையில் கண்ட விஷயங்களைப்பற்றியே எடுத்துச்சொல்லிவருவதில் மேலும் கிராமபுனருத்தார

ணம் என்பதைப்பற்றியும் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

கிராமபுனருத்தாரணம்

கிராமபுனருத்தாரணம் என்பது கிராமங்களின் பழைய நிலைமைகளை மறுபடியும் புதுப்பிப்பது என்கின்ற அருத்தத்தில் வேலை செய்வதானால் இனி இந்த தேசத்தில் கிராமம் என்பதே இல்லாமல் போய்விடும். அந்தப்படி இல்லாமற்போவதே மேல். இருக்கும்படி செய்யவேண்டுமானால் கிராமத்திற்குள் புதிய தன்மைகளை புகுத்தவேண்டும். நமது கிராமங்களைப் பற்றி மேயோ சொல்லி இருக்கும் முறைகள்தான் நமது பழைய கிராம நிலையாகும். நமது அரசியல் துறையில் பாடுபடும் பெரியார் ஒருவர் சமீபத்தில் ஒரு கிராமத்தைப்பார்த்து 'இந்த கிராமத்தைப்பார்த்ததும் எனக்குப் பழைய கால கிராம ஞாபகம் தென்படுகின்றது. நானும் ஒரு கிராமவாசியானதால் பழைய கிராமக்காட்சியைக் கண்டு மகிழ்ச்சி அடைகின்றேன்' என்பதாகப்பேசினார்.

பழைய மாதிரி கிராமம் இருப்பதால் கிராமங்கள் ஒழிந்தே போய் விடும்யாரும் கிராமத்தில் இல்லாமல் எல்லோரும் பட்டணங்களுக்கே குடி போடிப்போவார்கள்.

கிராமங்களை பட்டணமாக்கவேண்டும். பட்டணவாசிகளின் வாழ்வு முழுவதும் கிராமவாசிகளின் உழைப்பேயானதால் கிராமவாசிகளே தான் உலகபோக போக்கியங்களை அடையவுரியவர்களாவார்கள்.

கிராமவாழ்க்கை ஒருவிதமான சுகவாழ்க்கை ஒருவிசம் என்பது பித்தலாட்டக்காரியமேயாகும். கிராமவாசிகளைப்பார்த்து கண்ணீர் வடிக்கும் பட்டணவாசியான முதலாளியும் வக்கீலும், உத்தியோகஸ்தனும், பார்ப்பனனும் பித்தலாட்டக்காரர்களேயாவர்கள். அவர்களது வஞ்சகமும். கெட்ட எண்ணமும்தான் கிராம வாசிகளான பெரும்பான்மை மக்களை காலாடைகளாக வைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே ஒவ்வொரு விஷயத்திலும் கவலைகொண்டு பகுத்தறிவைப் பயன்படுத்தி தக்க முறையில் சேவை செய்யவேண்டுமென்று விரும்புகிறேன் என்று பேசினார்.

அறிவிப்பு.

இராசிபுரம் குடி அரசு ஏஜண்டு சுத்தாநேடார்களுக்கு ஷே ஏஜண்டு வணக்கமாய்த் தெரியப்படுத்திக்கொள்வ தென்னவென்றால் 21-6-31ல் நமது பத்திரிகை வாயிலாகத் தெரியப் படுத்தியிருந்தும் கவனிக்காமலிருப்பதைப் பற்றி வருந்துகிறேன். ஆகையால் 22.7-31-குள் பாக்கியைச்செலுத்தி விடவேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். தவறினால் பத்திரிகையைக் கண்டிப்பாய் நிறுத்த நேரிடுவதைக் குறித்து வருந்துகிறேன்

குடி அரசு ஏஜண்ட் இராசிபுரம்.

மூவார் ஆதிதிராவிட சங்கம்.

29--5--31 மாலை 7-30 மணிக்கு மேல் சுமார் 200 பேர்கள் கூடிய ஒரு பொதுக்கூட்டம் மேடை சங்கக் கட்டிடத்தில் நடைபெற்ற து. அச்சமயம் கணம் கே. வேலுபிள்ளை, P. W. சீப் ஓவர்சியரவர்கள் பேசிய பிரசங்கத்தின் சாரம்சம் வருமாறு:—

சகோதரர்களே! நமதுடைய இந்து மதமானது மிகவும் பெருமையுடன் கொண்டாடப்படும் ஓர் மதமாகும். இந்து மதத்தின் மோசங்களும் புராண சூழ்ச்சிகளுமே நம்மைத்தாழ்த்தப்பட்ட ஜாதியார்களென்று சொல்லும்படியாகச் செய்திருக்கின்றது அவைகளல்லாமல் நம்முடையமனிதவர்க்கத்தைச் சார்ந்த மேல் வகுப்பார்கள் என்று கூறும் அம்மனிதர்களால் பல வழிகளிலும் பிரித்த படவும்செய்திருக்கிறது. நமது தாய் நாடாகிய இந்தியாவில் தான் நாம காரீகத்திலும் மற்ற விஷயங்களிலும் முன்னேறிவராமல் மேல்ஜாதி என்பவர்களால் நசுக்கப்படுகிறார்கள் என்று நினைத்தால் அன்னிய தேசமாகிய இமயலாய் நாட்டிலும் அவர்களின் தொல்லை பொறுக்க முடியாமல் இருக்கிறது. மேற்படியார்களின் தொல்லைகளிலிருந்து நீங்கவேண்டுமானால் ஒரு சுலபமான வழி ஒன்று எனக்குப் புலப்படுகிறது அதாவது எல்லாமதங்களையும்விட மகமதியமதத்தில்காலாவித சமத்துவம் கிடைக்கிறது. இதை இல்லை என்று மறுக்க ஒருவராலும் முடியாது என்றே நினைக்கிறேன். ஆனபடியால இந்து மதமென்பதான எந்தவழியிலும் சமத்துவம் கிடைக்க முடியாததான குறுட்டுபாதையை காண்பிப்பதான இந்து மதத்தை புறக்கணித்து நேர்பாதையான சமத்துவம் கிடைக்கக்கூடிய தான இஸ்லாம் மதத்தில் ஆதிதிராவிடர்களாகிய நாம் ஏன் சேர்ந்து இருக்கக்கூடாது? என்று தாழ்மையாய்க் கேட்கின்றேன். இந்து மதம் நம்மை மூன்னேக்கிச் செல்லும்படியாக உதவி செய்யும் என்பதை மறந்து விடுங்கள். நாம் இஸ்லாம் மதத்தில் சேர்ந்தால் எல்லா விஷயங்களிலும் முன்னேறி வரலாமென்பதை தெரிவிப்பதுடன் சமத்துவம் அடைய இதுவே சுலபமான வழி என்பதை இரண்டாம் முறையும் உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன்.

பிறகு திருவாளர்கள் ஜாசாங்கம் டிரைவர் முத்துவேலு உடாத்தியாயர் ஆகிய இருவரும் ஒற்றுமை என்பதைப்பற்றிப் பேசியதன் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

மரணம்.

தூத்துக்குடி திரு. பலவேசம் அவர்களின் மனைவி திருமதி. வடிவம்மாள் அவர்கள் தமது ஏழு குழந்தைகளை பரிதவிக்கவிட்டு 19-6-31ந் தேதி காலஞ்சென்றதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

தேவை.

ஒரு கம்பெனிக்கு அநேக ஏஜெண்டுகள் தேவை. விபரத்திற்கு உடனே ஒரு அணா ஸ்டாம்புடன் எழுதவும்.

விலாசம்.

எஸ். நாராயணசாமி,
பெரும்புகலூர்,
திருவாரூர் போஸ்டு,
தஞ்சாவூர்.

பெண் தேவை.

ஆசிரியர் வேலை. ரூ. 25 சம்பளம், வயது 30 உள்ள ஒருவருக்குச் சைவ வேளாளப் பெண் தேவை. போதனுமுறை பயின்றிருந்தாலும், விதவையாயினும் தெரிவிக்க. ரூ. 25 செலவில் சுயமரியாதை முறையில் கலியாணம் செய்யப்பெறும்.

A. Clo.,
'குடி அரசு' ஈரோடு.

"சன்மார்க்கன்"

உயர்ந்த தமிழ்
மாதப்பத்திரிகை.

ஆண்டுசந்தா.

உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர் (காவலூற்று)
சி. சுவாமி சிவதேசம்,
"சன்மார்க்கன்" பழனி.

ஓர் அதிசீர்ஷ்ட ஜோதிமுத்து.

டாகடர் B. A. எதிராஜ்வினால் தயாரித்து 31 ஆண்டுகள க அனுபவித்து கைகண்ட, பிரம்ம முடி கோஷாயி மேக எண்ணெயை உபயோகியுங்கள்.

(கோஷாயி ஒருவரால் அனுக்கிரகிக்கப்பெற்று தர்மார்த்தமாக குறைந்த விலைக்கு வெளியிட்டு வருகிறது.)

சகோதர, சகோதரிகளே, வெட்டவாய்வு (அஷ்ட) எட்டு விதங்களாக, கொர்ப,—விந்து ஸ்தானங்களில் தங்கி, வெளியாகிக்கொண்டிருப்பதை அக்காலகாலங்களில் கண்டித்து நீக்காமல் விட்டு நீடித்து நின்று மேகவாய்வு என்று பெயர் பெற்ற கொடியோன். சபாலத்தில் தங்கி, சபால இடி, குத்தல் நேத்திரத்தில் பார்வை மக்கல், பல குற்றங்களும், நாசி, செவி, தந்தங்கள், கண்டம் இவைகளில் குற்றங்களும், நெஞ்சில் தங்கி, மாரடைப்பு, தமரகவாய்வு, தெனால், கொட்டிருமல், காசமாகவு , கீல்களில் தங்கி, சூலைகளாகவும் சரம்புகளில் தங்கி முன்-பின் (வீச்சுகள்) பலவித இழுப்புகளாகவும்வயற்றில் தங்கி, சகலவித குன்மங்கள் வாய்வு, குதகடட்டிகள், பக்கவிலா இழுப்பு குத்தல் கொர்ப குற்றங்கள் சித்திரை அற்ற சீர்தாரை ரோகங்கள், மூலங்கள், நிமிர், மத மதப்பு, சகலவித மேகங்கள், சிட்டைகள் ரண குஷ்டங்களாகவும், மலப்போக்கு தல்லது சிக்கல் பட்டு ஜெனிக்கும் (மிரிக்கின் பெருகும்) அனந்த வெட்டவாய்வு ரோகிகளும், 3 வேளம் எம், பிரம்ம முடி கோஷாயி மேக எண்ணை சாப்பிட்ட 7வது நாளே, எல்லா உபத்திரவத்திலிருந்து விலகி 15வது நாள் பாலிய தேசசுடன், விருத்தரும் பாலிய உணர்ச்சி பெற்றவரு வது நிச்சயகும்

யோகாப்பியாசிகளுக்கு சடலத்திலுள்ள துர்நீர்களை அகற்றி எல்லா அவயவங்களிலும் சுத்த இரத்தத்தை ஊட்டி, அறிவு இடத்தில் புத்தியை நிறுத்தி (ஜோதியாகிய) தன்னை தெரிசிக்க, காயத்தை இருசச்செய்து காக்கும் காயசர்பம். 3 வேளம் உபயோகிக்கும் பிரம்ம முடிகோஷாயி மேக எண்ணை கொண்ட சிசா 1க்கு ஏழு களுக்கு ரூ. 7—0—0.

பத்திய விபரம் மருந்துடன். பாக்கிதபால் செலவு பிரத்தியேகம். மலாய் வாசிகள் ஆர்டருடன் முன் பணம் அனுப்பவும் வேண்டும்.

பிரம்மமுடி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

வேதான் பாசாங்கு செய்து கொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய மக்களுக்கு நாம் உண்மைகளை வெடுத்துரைத்தால் அவர்களுக்குப் பேருபகாரம் புரிந்தவர்களாவோம். ஆனால், நமது மதமோ அவர்களுக்கு அத்தகைய சந்தர்ப்பமாவதையும் போதிக்கவே கூடாதென உரைக்கின்றது. நமது மதத்தின் பேரால் ஆடவர்கள் எத்தகைய அட்டூழியங்கள் செய்தபோதிலும்கூட, அவர்கள் பாதிக்கப்படுவதில்லை. ஆனால், பெண்கள் தங்களுடைய சொச்சக்கணவனிடத்திற்கூட தங்களுடைய இச்சையைத் தெரிவித்தாலும் பதிவிரதா தருமத்தினின்றும் தவறிவிடுவதாக நமது மதம் உரைக்கின்றது. இவர்கள் தங்களுடைய காம இச்சையை இவ்வாறு வெளிக்குக் காண்பியாமலும், உரையாமலும் தங்களுக்குள்ளாகவே மறைத்து அதைப்பட்டுக் கொண்டிருப்பதனால்தான் அவர்களுடைய தேகம் நலுக்கு நாள் வலிமை யிழந்து, அழகுகுன்றி, மெலிந்து விடுவதுமல்லாமல், எக்காரியத்திலும் பற்றுதலும் அக்கரையுமில்லாதவர்களாகவு மிருக்கின்றார்கள்.

நமது நாட்டில் பெண்கள் தூரமான சில தினங்கள் கழித்து சம்போகித்தால் கர்ப்பம் தரிக்கவேமாட்டார்களெனக் கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் இவ்விதமாக "கர்ப்பம் தரியா நாட்க"ளென வேற்றுமைப் படுத்தியுரைப்பதில் ஒருவிதப் பிரயோஜனமுமில்லை எனெனில், அந்நாட்களில் நாம் எதிர்பார்த்த பலனே அடையமுடியவில்லை. ஆடவர்கள் ஆசையுடனழைக்கும் போது, அவர்களுடன் சம்போகிக்க முதலில் மறுக்கும்பெண்கள் எவ்வளவு தூரம் கர்ப்பினிகளாவதினின்றும் தடுக்கப்படுவார்களோ, அவ்வளவு தூரந்தான் "கர்ப்பம் தரியா நாட்களை" நம்பி, சம்போகிக்கும் பெண்களும் கர்ப்பினிகளாவதிருப்பார்கள். காமத்தி லாழ்ந்து, மூழ்கிக்கிடக்கும் பெண்களைவிட, சும்மாயிருக்கக்கூடிய பெண்களே அதிகமாகக் கர்ப்பினிகளாகின்றார்களென்பது யாவருமறிந்த உண்மையேயாகும். கர்ப்பத்தடை முறைகளை அனுஷ்டிக்க மறுதலிக்கும் பெண்களும், "கர்ப்பந்தரியா நாட்க"ளென்னி ஆடவர்களுடன் அந்நாட்களில் சம்போகிக்கும் பெண்களும், தங்களுடைய தப்பிதங்களை அதிசீக்கிரத்திலேயே யுணர்ந்து, தாங்கள் கர்ப்பினிகளாகாதிருப்பதற்குக் 'கர்ப்பந்தரியா நாட்கள்' எவ்வளவு தூரம் உதவி புரிகின்றதென்பதையும் அறிந்து கொள்ளுவார்கள்.

அநேகாண்டுகளாக, நமது வைத்தியர்கள் பெண்களின் வாணாட்களில் ஒவ்வொரு மாதமும் 'கர்ப்பந்தரியா நாட்க'ளென சில நாட்களிருப்பதாகவே உரைத்துக் கொண்டுவந்திருக்கின்றார்கள். ஆனால் பெண்கள் தங்களுடைய சொந்த அனுபோகங்களினின்றும், நிபுணர்கள் தங்களுடைய ஆராய்ச்சியின் மூலமாகவும் 'கர்ப்பந்தரியா நாட்க'ளெனக் கூறப்படும் தினங்களில் பெண்கள் எதிர்பார்க்கும் பலனே ஒருநாளுடைய மூடியா தென்பதை யறிந்து வருகின்றார்கள். சில பெண்கள் தாங்கள் ருதுவான நாட்முதல், நரம் கடைசியாகவிருக்கும் வரையிலும் கர்ப்பங்கள் தரிப்பதினின்றும் தவற முடியாதவர்களாக விருக்கின்றார்கள். இன்னும் சிலர் 'கர்ப்பந்தரியா நாட்கள்' தங்களுக்கு எதிர் பார்த்த பலனை அளித்துவிட்டதெனக் கருதி இருந்து விடுகின்றார்கள். ஆனால், அவர்கள் அவ்வாறு இன்புற்றிருக்கும் பொழுதே தங்களையுமறியாமல் கர்ப்பினிகளாயிருப்பதையு மதிசீக்கிரத்திலேயே அறிந்து கொள்ளுகின்றார்கள்!

பெண்கள் 'கர்ப்பந்தரியா நாட்க'ளென வெண்ணி, அந்நாட்களில் சம்போகித்தால் எத்தகைய பலனையடைகின்றார்களோ, அதேபலனைத்தான் கர்ப்பத்தடைக் கேற்ற முறை இந்திரிய நிக்கிரகம் செய்வதேயெனக்கருதி இந்திரிய நிக்கிரகம செய்துகொண்டு வருவதாகக் கூறிக்கொள்ளுபவர்களாலும் அடையப் படுகின்றது. இந்திரிய நிக்கிரகம் செய்தலே கர்ப்பத்தடைக்கேற்ற முறையெனக் கூறுபவர்களும், தங்களுடைய தப்பிதத்தை யுணர்ந்து கொண்டதுமல்லாமல், பெரும் ஏமாற்ற மடைந்ததாகவும் கூறுகின்றார்கள். எனெனில் இந்திரிய நிக்கிரகம் செய்வதானது மக்களை நீண்ட நாட்கள்வரை வாலிபர்களாகவும், வலிமையுள்ளவர்களாகவிருக்கும்படி செய்கின்றதெனக் கூறப்பட்டபோதிலும், அதுதான் கர்ப்பத்தடைக்கேற்ற முறையென்பதை மட்டும் ஒத்துக்கொள்ளுவதற்கில்லை.

ஆகையினால் இந்திரியநிக்கிரகமென்பது சிலரால்மட்டும்சாத்தியப்படக்கூடியதாகவிருந்தாலும், பெரும்பாலான பாமர மக்களால் அது அனுஷ்டிக்கப்படமுடியாததாயிருக்கின்றது. இந்திரிய நிக்கிரகம் செய்ய சாதகியப்படாத மக்களையும், அவ்வாறு செய்ய விரும்பாதமக்களையும் அம்முறையை யனுஷ்டித்துத்தான் தீரவேண்டுமெனக்கூறுவதும் நியாயமற்ற செய்கையாகும். இந்திரிய நிக்கிரகத்தினாலே ற்படும் தீங்குகள் அதிகமாயிருந்த போதிலும்கூட, அவைகள் குறைந்த அளவிலேயே தான் கூறப்பட்டுவருகின்றது. இச்செய்கையானது எல்லா மக்களும் ஒரேவித ஆகாரத்தையே தான் புசிக்கவேண்டுமெனக்கூறுவதை யொத்திருக்கின்றதேயல்லாது வேறில்லை இத்தப்பிதமானது எத்தகைய சித்தாந்தங்களின்மீது நமது மதத்தால் காப்பாற்றப்பட்டுவந்த போதிலும் சரியே அல்லது கர்ப்பத்தடை முறைகளை போதிக்கக்கூடாதென நமது அரசாங்க மெத்தகைய திட்டங்களை எற்படுத்தி யிருந்தபோதிலும் சரியே அல்லது குமரியும் குமரனும் சில சந்தர்ப்பங்களில் சில மாதங்களில் சம்போகிக்கவேக்கூடாதென சமூகமக்களால் கூறப்பட்டுவந்தபோதிலும் சரியே அவைகளைநாம் கொஞ்சமும் பொருட்படுத்தவேக்கூடாது.

உலகமானது அடக்குமுறைகளிலேயே அநேககாலமாக ஆளப்பட்டு வந்திருக்கின்றது. அவ்வாறு அடக்கப்படும் சக்தியானது எவ்வளவுக்கெவ்வளவு மூலாதாரமானதாகவும் பிரதானமானதாகவுமிருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு அதுதானாகவும் அழிந்தும் விடுகின்றது. ஸ்திரீ புருஷ இச்சைகளை அடக்கிக்கொண்டும் தடுத்துக்கொண்டும் வருவதனாலேதானே துன்பங்கள் யாவும் சுகாதார அறிக்கைகளின் மூலமாகவும் குற்றங்களின் ஜாபிதாக்களின் மூலமாகவும் வைத்திய சாலைகளின் வைத்தியம் பிடிதத மக்களென பதிவு செய்யப்பட்டிருப்பதனாலின் மூலமாகவும் நன்றாக வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆகையினால் இந்திரிய நிக்கிரகம் செய்வதுதான் கர்ப்பத்தடைக்கேற்ற முறையெனக்கூறப்படுவது பொதுமக்களாலும் பாமர மக்களாலும் அனுஷ்டிக்கப்பட முடியாததாயிருப்பதுடன் அவர்களால் விரும்பப்படாததாயுமிருக்கின்றது. பெண்களுக்கு நாம் கர்ப்பத்தடை முறைகளைப்போதியாமலும் அவைகளை அவர்களாகவேதானினின்றும் தடுத்துக்கொண்டும் கருவோமேயானால் அப்பொழுது பெண்கள் சமூகத்தைக்கே நாம் ஓர் பெரிய தீங்கிழைத்தவர்களாவோம். பெண்களுக்குப்போதிய அறிவையூட்டி அவர்களுக்குச்சம உரிமையும் சுதந்திரமுமளித்து, ஸ்திரீ புருஷ பேதவித்யாசத்தையும் போதித்துக்கொண்டு வந்தால் மட்டுத்தான் நாம்கோறும்பலனையடையமுடியுமென்பதுடன் உலகத்திலேயே இணையற்றவோர்பெரிய காரியத்தை சாதித்தவர்களுமாவோம்.

பெண்கள் தங்களுடைய வாணாட்களில் அதிகமாகவிருப்பது அடக்குமுறைகளல்ல. ஆனால் தங்களுடைய அன்பையும் காதலையும் ஆசையையும் வெளிப்படையாக அறிவித்து இன்ப வாழ்க்கையை நடாத்தி இன்பக்கடலிலாழ்ந்து கொண்டிருக்கவேண்டுமென்பதேயாகும். அவர்கள் தங்களுடைய வாணாட்களை இம்மாதிரிக்கழிக்க வேண்டுமென நாம் உண்மையாக விரும்புவதாகயிருந்தால் அவர்களை அடிமையிலாழ்த்தி வைத்திருப்பதையும், அவர்களை நிர்பந்தித்து இம்மாதிரிக்குட்படுத்துவதாலும் அவர்களாலவ்விதம் உன்னத நிலைமையை ஒருநாளுமடைந்து விடமுடியாது. அவர்களை நாம் சிநேகிதர்களெனவும், கூட்டாளிகளெனவும், நமக்கு சம அந்தஸ்துடையவர்களெனவும் கருதி அவர்களுக்குப் போதிய அறிவு, ஞானம், சாமர்த்தியம், யுகம் முதலியவைகள் விருத்தியாகும் தறைகளிலவர்களைப் பயிற்றுவித்தால் மட்டுந்தான் நாம் கோறிய காரியம் நமக்குக் கைகூடுமேயல்லாமல் மற்றபடிக்கல்லவேயல்ல. ஸ்திரீ புருஷபேதத்தாலேற்படும் பயமானது அவர்களுடைய மனதைவிட்டு அறவேயொழிய வேண்டும். கர்ப்பத்தடை முறைகளை அனுஷ்டிக்க விரும்பும் மக்களைத்தான் முதன் முதலாக தங்களுடைய மனதில் பதியும்படி செய்யவேண்டும். எனெனில் பயத்தால் சூழப்பட்டிருப்பதானது கொடிய ஓர் நோயைபோலிருக்கச் சமமானமானதாயிருக்கின்றது. கொடிய நோயத்தால் கஷ்டப்படுகையிலும் அழகாயிருக்கவே இருக்காது.

உண்மைக் காதலின் உண்மைத்தத்துவத்தை அறிந்த மக்களால் மட்டும்தான் இவ்விதி உன்னத இன்ப வாழ்க்கையிலுலேத்படும் பலாபலன்களை அறிந்து கொள்ளமுடியும். ஆதிகாலமுதல் நாளது வரையிலும் பயமும் பலாத்காரமும் நாம் எதிர்பார்த்த பலனை நமக்கு அளிக்கவில்லை. ஆனால் அதற்குப் பதிலாகக் கஷ்டங்களும் துன்பங்களுமே அதிகரித்திருக்கின்றது. ஆடவர்களின் ஆலிங்கனத்தையும் சம்போகத்தையும் விரும்புவதும் அல்லது வெறுப்பதுமாகிய செய்கைகளுக்குறித்தான அறிவும் சுதந்திரமும் நாம் அவர்களுக்கு அளிக்கவேண்டும். இவைகளால்தான் நாம் கோறும் பலனையும் எதிர்பார்க்கும் பலனையு மளிக்குமேயன்றி வேறொன்றுமளிக்கவே யளிக்காது. இவைகளால்தான் ஒருவருடைய மனதையும் யெண்ணத்தையு மறிந்து கொள்ளவும் முடிந்தபின் அவர்களை விரும்பவும் அவர்களுடைய அன்பிலீடுபடவும் அவர்களைக் காதலிக்கவும் செய்து உயர்ந்த மனோதத்துவமுள்ள மக்களுழற்பத்தியாகுமார்களென்ற நம்பிக்கையையும் நமக்களிக்கும்.

தாராபுரம்,
அகில திராவிடர்கள்
மகாநாடு.

நாளது 23-ம்-31-ம் தேதி தாராபுரம் மிஷன் பாடசாலையில் திரு. குருசாமி சேர்வை யவர்களின் தலைமையில் கூடியது. அதுசமயம் தாராபுரம், பழனி, உடுமலைப்பேட்டை தாலூகாகளின் 3 வது மகா நாடு கூட்டுவது சம்பந்தமாய் கீழ் கண்ட விஷயங்கள் தீர் மானிக்கப்பட்டன. மெஜூட்டத்திற்கு 3 தாலூகாகளிலிருந்தும் பல பிரதி நிதிகள் வந்திருந்தனர்.

அகில திராவிடர் சங்கம் ஸ்தாபித்தல், 2 ஸ்தலஸ்தாபனங்களில் நியமனம் 3 மாதப்பத்திரிகை ஆரம்பிப்பது 4 இலவசக்கல்வியும் கிறபமில்லாத தர்க்காஸ்து நிலங்கள் கொடுக்கும்படி சர்க்காரை வேண்டிக்கொள்வது, 5 ஷெமகாரட்டை திறந்து வைக்கும்படி ராமசாமிப்பெரியாரைக் கேட்டுக் கொள்வ தென்றும், தீர்மானங்கள் நிறைவேறிய பின்னர் காரியக்கமிட்டி அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு கூட்டம் கலைந்த தென ஒரு நிருபர் எழுதுகிறார்.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

(4ம் பக்கத்தொடர்ச்சி)

ந்துவிட்டால், நாம் உடனே மாரியம்மன் கோவிலுக்கும், ஐயர், பண்டாரம் ஆகியவர்களின் வீட்டுக்கும்தான் செல்லுகிறோமேயல்லாது, அவ்வியாதிஎன்வந்தது என்பதை ஆராய்ந்து, அதற்குரிய மருந்துகளை அளிக்கும் வைத்தியர்களின் வீட்டிற்குச் செல்லுவதில்லை. சில இடங்களில், குழந்தைகளின் வயிறு நிறைந்திருப்பதையும் அறிந்துகொள்ளாமல், அக்குழந்தைகளின் வயிற்றை அமுக்கிப்பார்த்து அறிந்து கொள்ளுகிறார்கள். இவைகளுக்குக்காரணம் நமக்குப் போதிய கல்வியறிவும், தைரியமுமில்லாமையேயாகும். ஊரில் காலரா முதலிய நோய்கள் வந்தால், உடனே ஒக்காளியம்மனுக்குப் பொங்கலிடுவதிலும் "நாம் என்ன செய்யமுடியும்? அவனுடையசீட்டு கிழிந்து விட்டது. போவதுபோய் தானேதீரும்" என்று சொல்லக்கூடியவர்களாகத் தானிருக்கிறோம். நாம் நமது அறிவை உபயோகப்படுத்தி நடந்தால், இத்தகைய கஷ்டங்களுக்கு ஆளாக வேண்டியதில்லை,

நமது வாலிபர்கள் படித்த பெண்களைமட்டும் விவாகம் செய்து கொள்வதாக ஒருவைராக்கியம் கொள்ளுவார்களேயாகில், அப்பொழுது பெண்களைப் பெற்றோர்கள், தங்களுடைய குழந்தைகளுக்கு கல்வியறிவையூட்டுவார்கள். படித்த பெண்களகப்படாவிட்டால் கலியாணம் செய்து கொள்ளாமலிருக்கவேண்டும். படியாதபெண்கள் கிழவர்களுக்கு 2ந் தாரம் 3ந் தாரமாக போய்சேரட்டும். இதுதான்படியாத பெண்களுக்கு தண்டனையாகும். சிலசுயமரியாதை விவாகங்களில், பெண்களுக்குத்தாலிகட்டும் வழக்கம் இடையாது. முனிசிபாலிடிகளில், நாய்களுக்குக்கழுத்தில் பட்டை கட்டுவதைப்போல், விவாகமாகும் பெண்களுக்கு நாம்ஒரு தாலியை கட்டிவிடுகின்றோம். அப்படி தாலி கட்டுவதாகயிருந்தால், மாப்பிள்ளைக்கும் சேர்த்துதான் கட்ட வேண்டும். எப்பொழுது மாப்பிள்ளை கட்டிக்கொள்ள சம்மதிக்கவில்லையோ. அப்பொழுது பெண்களும் தாலிகட்டிக்கொள்ள சம்மதிக்கக்கூடாது. தாலிகட்டுவது அடிமையுணர்ச்சியைத்தான் குறிக்கின்றது,

பெண்களுக்கு நாம் அறிவையூட்டி சமத்துவத்தை அளித்துக்கொண்டு வரவேண்டும். அவர்களைப்பல கூட்டங்களுக்கும் அழைத்துச்செல்ல வேண்டும். அப்பொழுதுதான் அவர்களுடைய மூடநம்பிக்கைகள் நீங்கும். நமது பந்துக்கள் வரமாட்டார்களே யெனபயப்படக்கூடாது. ஜாதியைப் பற்றி, நாம் கொஞ்சமும் கவலையடையக்கூடாது. நமமுடைய கொள்கைகளை ஆதரிப்பவர்களிடம் நாம் சம்பந்தம் செய்துகொள்ளலாம். எந்த ஜாதியாகயிருந்தபோதிலும் சரியே, அவர்களுக்கு அறிவு, யோக்கியதை முதலியவைகளிருந்தால் அவர்களிடம் சிநேகிக்கலாம். அறிவுக்கும், அனுபவத்துக்கும் ஒத்திருப்பவைகளை நாம் கவனித்து, நடக்கவேண்டுமேயல்லாது பெரியவர்களின் பழக்கவழக்கங்களையே நாம் கண்மூடித்தனமாய் பின்பற்றலாகாது. இவைகள் யாவும் வாலிபர்களால் தான் நடைபெறவேண்டியிருக்கின்றது. வீண் ஆடம்பரங்களின்றியும், அதிக செலவில்லாமலும், சடங்குகளின்றியும் தம்பதிகளிருவரும் தங்களுடைய விவாகத்தை இரண்டு சாட்சிகளின் முன்னிலையில் ரிஜிஸ்தர் செய்து கொள்ளுவதே போதுமானது எனப்பேசி ஆசனத்தை மர்த்தும், அக்கிராசனராவர்கள் திரு. கே. வி. அழகர்சாமி அவர்களைப் பேசும்படி கேட்டுக்கொண்டார்.

K. V. அழகர்சாமி.

தலைவரவர்களே! சகோதரர்களே!! சகோதரிகளே !!!

இன்று, இங்கு நடைபெற்ற விவாகம்தான் பேற்றத்தகுந்த விவாகமாகும். அநேக சீர்திருத்தக்காரர்கள் சுயமரியாதைக் கொள்கைகளை ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் நாம் அதிவேகமாகவும், தீவிரமாகவும்தான் செல்லுவதாகக்குற்றங்கூறுகிறார்கள். பழைய தமிழ் நாட்டில் புரோகிதர்கள் விவாகங்களை செய்து வைக்கும் வழக்கமே கிடையாது. இன்றும் நமது தமிழ் நாட்டில் கள்ளர், மறவர், அகமுடியர் (மதுரை) ஆகியவர்களும் மற்றும்வேடர், வில்லியர், தீண்டப்படாதாராகிய சமூகங்களில் எவ்விதச் சடங்குகளும், புரைச்சலுமின்றியேதான் விவாகங்கள் நடைபெறுகின்றன. ஆதிகாலத்தில் "எடுத்தார் சங்கை, பிடித்தார் பம்மம்" என்பதாகவே தான் நமது விவாகங்கள் நடைபெற்று வந்திருக்கின்றது. இவ்விஷயங்களை இன்றும் நீங்கள் நமது தமிழ் நூல்களில் காணலாம். ஆனால் ஆரியர்கள் நமது நாட்டில் குடியேறிய பிறகு தான் அநேக சடங்குகள் நாட்டில் தோன்றலாரம்பித்தன.

சாதாரணமாக, செட்டி நாட்டில் நடைபெறும் விவாகங்களை யெடுத்துகொள்ளுங்கள். அவர்கள் பெண்களுக்குப் பரியமென்பதாக ரூ. 30 000 மும், நகைகளுக்கென ரூ. 15,000 மும். கலியாண செலவுக்கென ரூ. 10,000 மும் ஒதுக்கி வைத்து விட்டு கலியாண வைபவத்தை ஒரு மாதம் வரையும் கொண்டாடுகிறார்கள். விவாகத்துக்கும், கடவுளுக்கும் சம்பந்தமிருப்பதாகக்கருதி கடவுள் அருள் கிடைக்கவேண்டுமென, பல சடங்குகளையும் செய்கின்றார்கள். இவைகளால் என்ன பிரயோஜன மென்பதை சற்று யோசனை செய்து பாருங்கள். நமது வீடுகளிலோ விவாகங்கள் 3 நாட்கள் முதல் கொண்டு, 5 அல்லது 7 நாட்கள் வரையிலும் நடைபெறுகின்றது. இவ்வழக்கத்தையும் நாம் அறவே விட்டொழிக்க வேண்டும். விவாகத்துக்கும், கடவுளுக்கும் எதாகிலும் சம்பந்தமிருப்ப தண்மையாகையிருக்குமானால், இவ்விதச் சடங்குகள் உலகத்திலுள்ள எல்லா ஊர்களிலுமொன்றே போல் நடைபெறவேண்டும். அவ்வாறு நடைபெறுகின்றதா? அப்படியிருக்க நமது நாட்டில், ஒரு கூட்டத்தாரை மட்டும் நாம் வைத்து சடங்குகளை என் செய்யவேண்டும்?. இவைகளுக்கெல்லாம் காரணம் நமக்குப் போதிய அறிவில்லாததேயாகும். சடங்குகளின்றி நடைபெறும் விவாகங்களில் தம்பதிகள், இன்பமாயிருக்க முடியாதெனவும், குழந்தைகள் ஜனிக்காதெனவுமாகிய ஒரு குருட்டு நம்பிக்கை நம்மிடமிருந்து கொண்டு வருகின்றது. இவ்விதவழக்கங்களை நாம் அடியோடு விட்டொழிக்கவேண்டும்.

நமது நாட்டில் புரோகிதர்களை வைத்துக் காரியங்களை நடத்தக்கூடிய மக்கள் 100க்கு 14 பெயர்களே தானிருக்கின்றார்கள். மீதியிருக்கக் கூடியவர்கள் ஏழைகளாயிருந்தாலும் கடன்வாங்கி செலவு செய்கின்றார்கள். இவைகள் கிடக்கவேண்டுமென்றால்"பார்ப்பனீயமும், மததர்ம"முமாகிய வலைகளை ஒழித்தேதான் தீரவேண்டும். இவைகளை ஒழித்தாலல்லது சமூகங்கள் முன்னேறமுடியாது. சகலரும் சமம் என்றுகருதி, சச்சரவில்லாமல் வாழ்க்கையை நடத்துவதுதான் பொருத்தமாயிருக்குமேயல்லாமல், மற்றபடியல்ல. இவ்விதவேலைகளைச் செய்வதற்கு நாம் வயோதிகர்களையும், பெரியவர்களெனக்கருதப்படுவர்களையும் நம்பிக்கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை. வாலிபர்கள்தான் இத்தகைய விஷயங்களில் முனைந்து நிற்கவேண்டும். நான் கூறியவைகள் உங்களால் ஒப்புக்கொள்ளக்கூடியவைகளாயிருந்தால், அவைகளை ஒப்புக்கொண்டு, அதன் படி நடக்க முயற்சி செய்யுங்கள் எனப் பேசி அமர்ந்ததும் அக்கிராசனாதிபதியவர்களால் முடிவுரைக் கூறிபின் யாவருக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு, விவாகம் இனிது முடிவெய்தியது.

பகலில் பெரிய சமபந்தி விருந்தொன்று நடந்தது பாராட்டத்தக்காகும்.

மதிப்புரைகள்.

சென்னை சித்தானந்தா வைத்தியசாலையின் சொந்தக்காரரான ஸ்ரீ மதி தருமாம்பாள் அவர்களால் தயாரிக்கப்பட்ட நேரு பற்பசை (டூத் பேஸ்ட்) ஒரு பெட்டி வரப்பெற்றோம். இது சுதேசி பொருள்களைக்கொண்டு, சுதேசி முறையில் செய்யப்பட்டிருப்பதோடு நல்ல வாசனையும், இனிமையும் உள்ளதாயிருக்கிறது. அடக்கம் செய்யப்பட்டிருக்கும் பெட்டி நாகரீகமாயும், வேலைப்பாடுள்ளதாயும், அதிக சிரமத்தோடும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. நாம் இதை உபயோகித்துப்பார்த்த வரையில் இது மேல் நாட்டிலிருந்து வரும் கோலி நோல் பற் பசையைவிட நன்மடங்கு சிறந்த தென்றே துணிந்து கூறுகிறோம். சுதேசி முறையில் இத்த னைபோதாரு பற் பசையை நாகரீகமான முறையில் உண்டாக்க ஸ்ரீ மதி தருமாம்பாள் அம்மாள் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியும், சிரமமும் பாராட்டற்குரியதாகும். ஒவ்வொரு வரும் இதை வாங்கி உபயோகித்துப்பயன் பெற வேண்டுகிறோம். கிடைக்குமிடம்.

சித்தானந்த வைத்யசாலை
35-அண்ணாபிள்ளைதெரு
மதராஸ்.

வெடிகுண்டு.

மதுரை திரு. ஏ. எஸ். ஆனந்தம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் வெடிகுண்டு என்ற வார பத்திரிகையின் முதல் இதழ்கள் வரப்பெற்றோம். இதில் காங்ரஸ் செய்திகளும், தேசீய விஷயங்களும் காணப்படுகின்றன. இந்தியாவுக்கு தேசீய விடுதலை எவ்வளவு இன்றியமையாததோ அவ்வாறே சமூக விடுதலையும் இன்றியமையாததாலையால் சமூக விடுதலையிலும், சமூக சீர்திருத்தத்திலும் பற்றுக்கொண்டுழைக்குமானில் பெரிதும் பயனுள்ளதாயிருக்குமென்று எண்ணுகிறோம்.

வருட சந்தா ரூ.1—8—0
தனிப்பிரதி காலணா

பஞ்சமா பாதகங்கள்

எவை?
என் நிகழ்கின்றன?
அவற்றை நிறுத்தச் சமூக, அரசாங்கச் சட்டங்கள் ஆதரவளிக்கின்றனவா?
இதைப்பற்றி நீங்கள் எப்போதாவது யோசித்தீர்களா? இல்லையானால் இன்றே எழுதுங்கள். 52 பக்கங்கொண்ட புஸ்தகம் 0—2—6 அணா ஸ்டாம்புக்கு அனுப்பப்படும். விலாசம்:—

கோவை அ. அய்யாமுத்து
புஞ்சைப்புளியம்பட்டி,
(கோயமுத்தூர் ஜில்லா)

இங்கிலீஷ் 'ஸிசர் விட்ச்' லாட்டரி.

குதிரைப் பந்தய

14-10-31-ல் நியூவ் மார்க்கட்டில் 'மியூட்சுவல் பிளப்பாரால் நடக்கும் பிரைசுக்கு கொடுப்பது 90,000 பவுன். டிக்கட் 1-க்கு ரூ. 4-8-0. 3-க்கு ரூ. 13. டிக்கட்டிற்கு முன் பணத்துடன் முந்துங்கள்!

அதிகாரம்பெற்ற ஏஜண்டுகள்—
S. K. வரதராஜுலு,
ஆனந்தநிலயம், திருச்செங்கோடு S. I.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

பொதுவுடைமையும் மதமும்.

வைதீகர்களுக்கு ஓர் எச்சரிக்கை.

——:0:——

(நாகை கே. முருகேசன்)

"பர்ப்புதபாரதா" என்னும்வேதாந்தப் பத்திரிகையின் ஆசிரியர் 'பொதுவுடைமையும்மதமும்' என்னும்தலைப்பின் கீழ்எழுதிய வியாசத்தின் சாராம்சம் பின்வருமாறு. (இதில் நிகர் பொதுஉடமைக் கட்சியை தன்னுடைய போக்கில் ஒருவாறு ஆதரிப்பதோடு வைதீகர்களுக்கும் எச்சரிக்கை செய்திருர் என்பதை யாரும் அதிலும் விஷேசமாக வைதீகர்கள் கவனிக்க வேண்டியது அவசியம்.)

'மனித வாழ்க்கைக்கு இருபுறக்கருவிகள் உண்டு. ஒன்று ஆத்மாவுக்கு. மற்றொன்று பகிரங்கம். அதாவது உட்புற வாழ்க்கை என்றும் வெளிப்புற வாழ்க்கை என்றும் கூறலாம். உட்புற வாழ்க்கை மனோதத்துவத்தைப் பொறுத்து நிற்கிறது. வெளிப்புற வாழ்க்கையில் அரசியல் சமூதாய திட்டங்கள் பரிணமிக்கின்றது. இந்த இரண்டுவித வாழ்க்கையும் ஒன்றை யொன்று தொடர்பு வைத்துக் கொண்டிருக்கின்றதாயினும் வாஸ்தவத்தில் ஒன்றை யொன்று பாதிக்கக்கூடியதல்ல. மனோதத்துவ வாழ்க்கையானது நிரந்தரமானது. மனிதன் தனது பதார்த்த சொரூப இலட்சணத்தை அறிந்து தான் நிரந்தரமான ஆநியந்தமில்லாத டிரி பூர் ணவஸ்து என்று உணர்ந்து நிதானமே யாகும். இதுவே மதத்தின் கருத்து. ஆகவே மதமானது மனித இயற்கை சுபாவத்துக்கு அத்தியாவசியமாயிருக்கிறது என்றேநாம் கருதுகிறோம். இப்பொழுதிருக்கும் ஒரு மதத்தை அழித்தொழித்து விட்டால் அதே இடத்தில் இன்னொரு புதிய மதம் தோன்றிவிடுமென்பது நிச்சயம். இது உலக இயல்பு. ஆனால் காலப்போக்கிற்கு தக்க விதத்தில் மாறுதலடைய க்கூடிய பகிரங்க வாழ்க்கையில் அதாவது அரசியல்சமூக,சமுதாய திட்டங்களில் எந்த மதமும் தலையிடுவது அக்கிராமமாகும். அப்படி எந்த மதம் தலையிட்டு பகிரங்க வாழ்க்கையில் பலவிதமான சிக்கல்களையும் அதிருப்தியையும் உண்டு பண்ணுகிறதோ அந்த மதம் தனக்குத்தானே அழிவைத்தேடிக்கொள்ளுகிறதென்றே கூறவேண்டும். அரசியல் சமூக சமுதாய பொருளாதாரதிட்டங்களில்எந்தமதம் தலையிடுகிறதோ அது கட்டாயம் அழிக்தே தீரும். இந்த உண்மையையே போல்சுவிச்ரஷ்யா ஸ்பஷ்டமாக நிரூபித்து வருகிறது.

ரஷ்யாவிலுள்ள கிறிஸ்துவ மதமானது இது காறும் அங்கு அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் சார்மன்னர்களைத் தன் கைக்குள் போட்டுக்கொண்டு கர்ஜித்திருக்கிறது. அநாட்டு அரசனே அரசாங்கத்திற்கும், மதத்திற்கும் எகசக்காலத்தில் தலைவனாக இருந்து வந்திருக்கிறான். மதகுருக்கள் அரசனைத் தங்கள் இஷ்டம்போல் ஆட்டி வைத்தார்கள். ரஷ்யாவில் மதகுருக்கள் அல்லது அவர்களது கைப்பொம்மையாகிய ஸாரனின் தங்கி காரமின்றி எவ்விதத்திலும் அரசியல் சீர்திருத்தங்களோ சமூக சமுதாய சீர்திருத்தங்களோ ஏற்பட்டு விடாமலிருந்தது. மக்கள் சமூக சமுதாய விஷயத்தில் கால போக்கிற்குத் தக்க விதத்தில் தங்களை சீர்திருத்திக் கொள்ள முடியவில்லை. வாஸ்தவத்தில் தங்கள் இஷ்டம்போல் சமூகப் தள்ளி விடலோ, அங்கிகரிக்கவோ முடியாது "பருத்தியை உபயோகிட்டதே பாவம்" என்பதைபோல் ஆகிவிட்டது. அதிருஷ்டவசமாய் ஜனசமூகம் எவ்வளவு காலந்தான் இம்மாதிரியான ஆதிக்கத்திற்குத் தலைவணங்கி யிருக்கும்? முடிவடைந்தது. கார்க்மாகிஸ்மின் பொதுவுடைமைக்கொள்கை அதிதீவிரமாகப் பரவ ஆரம்பித்தது. ஸாரனை வீழ்த்தினர். அத்தோடு ஆஸ்திகர்களும் வீழ்த்தப்பட்டனர். எனினும் மதவெறிகொண்ட மக்கள் நிலைமைக்குத் தக்கபடி தங்களைச் சரிப்படுத்திக்கொள்ளாது பெரிதும் முட்டுக்கட்டையாய் நின்றனர். அதனால் போல்ஷிவிக்கொள்கையை ஸ்திராப்பதித்துவைப்பதற்கு சிறிது தடங்கல் ஏற்பட்டது. 'மதமே மக்களை மயக்கும் அபின்குடி' என்று கார்ல் மார்க்ஸ்கூறினர். எழைகளின் நிராசத்தை உறிஞ்சிவரும் தற்போதைய சமூகக்கட்டுப்பாட்டை உடைத்தெறியுங்கள். அதன் கர்த்தாவாகிய மதமும் வீழ்ந்தழியும்!

'அடாதபல சமூக சமுதாய சட்டங்களென்னும் சங்கிலிகளால் மக்களை இறுகப்பிணித்து மிருகங்களிலும் கேவலமாக வாழச்செய்வது இந்த மதமே. அதோடு அந்த சங்கிலிகளையும், வெளியில் தெரியவொட்டாதபடி மறைத்து வைப்பதும் தெய்வீகமென்னும் நறுமலர் மாலையே. ஆகவேமதமென்னும் பலர்மாலையை பிய்த்து கசக்கி எறியுங்கள். உங்களைப் பிணித்து நின்ற உங்களை முன்னேறச்செய்யாதபடி கஷ்டப்படுத்திவரும் அடிமைச்சங்கிலியின் தன்மையை நீங்களே உணர்ந்து கொள்ளுவீர்கள். உங்கள் பகுத்தறிவிற்கும மதிப்புஏற்வந்து என்று உணரவேண்டும் என்பதே அதன் இலக்கியம். இப்படி உணரவேண்டும் என்ற கூறும் அந்நிலைமையை கூறும் வேதாந்திகளுக்குச் சமூக வாழ்க்கையில் சமத்துவம் சமசந்தர்ப்பம் வேண்டுமென்று கோறும் கம்யூனிஸ்ட் கொள்கைக்கும் யாதொரு தகராறும் இல்லை. கம்யூனிஸ்ட் கொள்கை வேதாந்த மதஇலட்சியத்துக்கு விரோதியல்ல. இருகொள்கைகளும் ஒன்றாயிருந்து வேலைசெய்தால் உலகத்திற்கு மகத்தான நன்மைகளுண்டாகுமென்பது நிச்சயம்.

(மே பக்கத் தொடர்ச்சி)

வாக்கை நினைக்காமலும் குருவார்த்தையைத் தள்ளியும் இருக்கப்பட்ட பாவிகள் நிறைந்த இந்த நாட்டில் தீண்டாமைப்போவது கஷ்டமென்று நீங்கள் நினைத்தாலும் அனைரியப்படவேண்டியதில்லை. ஆங்கிலேயர்கள் இவர்களிடமே தேசத்தை விட்டுவிட்டாலும் நீங்கள் பயப்படவேண்டியதில்லை. ஆங்கிலேயர்கள் போய்விட்டாலும் தீண்டாமை போகாமலிருந்தால் அதற்கடுத்தாற்போல் இன்னொரு தொப்பிக்காரன் நமது காட்டைப் பிடிக்கக்கொள்ளுவான். அதுவும் போலல் அதற்குப்பிறகு வேறொரு தொப்பிக்காரன் வருவான். உங்களுக்கு ஆலோசனை மட்டும் வேண்டுமேயல்லாமல் பயம் வேண்டவே தில்லை. நம்காலம் கல்லுக்கடைகளை யெல்லாம் மூடிவிட்டாலும் காப்பிக்கடை உங்களுக்கு அனுகூலமாகவிருக்கிறது. குஷ்டம் முதலான சம்மாரியிலுமுள்ள எச்சல்களை எண்ணமில்லாமல் குடிக்கும் சுத்த மூடையவன் தீட்டில் அவ்வளவு கிரத்தை வைக்கமாட்டான். தீண்டாமை போகையில் போகட்டும். உங்கள் குறைகளையும் கொலைமப்பதித்தப்பிரதிகளையும் ஆங்கிலேயர்காட்டார்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

சுயமரியாதைத் தலைவர்கள்.

நமது சுயமரியாதை இயக்கத் தலைவர்களில் உயர்திரு. ராமசாமிப் பெரியார், உயர்திரு சௌந்திரபாண்டியன் ஆகியிருவர்களின் போட்டோகளையும் தனித்தனியாக 1¼"சைசில் (Real Photo) உண்மையான போட்டோ பேட்ஜ்கள் செய்து வெளியிட்டிருக்கிறோம். இதர தலைவர்களின் போட்டோ பேட்ஜ்கள் சமீபத்தில் வெளியிடப்படும். விலை விபரங்களுக்கு எழுதவும் மாதிரிக்காக தேவையுள்ளோர் 4 அணாவுக்கு ஸ்டாம்பு அனுப்பி ஞல்ம.முதபாவில்ஒன்று அனுப்பப்படும். விலாசம்:—

அ. ப. அர்த்தனரி ஏபிரதர்,
ஜலகண்டாபுரம், (சேலம் ஜில்லா.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது கலிக்கியானம். இது கைவல்யசாமியார் கட்டுரைத்திதாகுதி. ... 0—8—0
மனு நீதி மருமம் ... 0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ... 0—2—0
சுயமரியாலதத் தாலாட்டு. ... 0—2—0
சோதிடப் புரட்டு. ... 0—2—0
திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்தமகாநாட்டு சொற்பொழிவு (2-பதிப்பு) ... 0—2—0
சுயமரியாதைப் பாடல் ... 0—2—0
தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம். ... 0—3—0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை ... 0—4—0
ஞானசூரியன் ... 0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம் 0—4—0
ஷை 2-ம் பாகம் அயோத்தியாகாண்டம் ... 0—8—0
மேயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு) 0—3—0
அகத்தியர் ஆராய்ச்சி ... 0—2—0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? ... 0—2—0
*குறள் ... 0—8—0
* இயற்கைமதம் ... 0—8—0
* சிதம்பரா ரகசியம் ... 0—8—0
* சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை. 0—4—0
* பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை—[சித்ரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் கொண்டது] ... 0—6—0
* ஆராய்ச்சி அணிகலம் 0—12—0
* சென்னை லோகல் போர்டு ஆக்ட் ... 2—0—0

* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிர்ச்சியும் 50படங்களுடன் 200 பக்கங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக நமக்கு அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள், புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

ஏனெனில் புதிய உத்திரவுப்படி வி. பி. கள் 3 நாள்களில் வாப்பீஸ் செய்யப்படுவதால் அநேக வி. பி, கள் வாப்பீசாகிவிடுகின்றன. ஆதலால்தான் ஆர்டருடன் பகுதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும் என்று விரும்புகிறோம்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

"குடி அரசு" ஏஜண்டுகள்.

R. ராமலிங்கம், வியாபாரம் கோட்டார்.
*ராஜாத்னம், தமிழன் ஆபீஸ், ஆண்டர்சன் பேட்டை.
*காண்மாபாலிட்டன் ஸ்டோர்ஸ் விருதுநகர்.
*A. V. பாலசுப்ரமணியம் 23, எடயதெரு, திருவாரூர்.
பி. சாமுவேல் பிள்ளை, ஜெனரல் நியூஸ் ஏஜண்ட் தூத்துக்குடி.
எஸ். மாசிலாமணி பிள்ளை நியூஸ் ஏஜண்ட், பாலக்கரை திருச்சி.
S. குற்றாலலிங்கம் பிள்ளை நியூஸ் ஏஜண்ட் மீனாக்ஷிபுரம் திருநெல்வேலி.
S. P. கிருஷ்ணசாமி, நாகப்பட்டணம்.
P. பழனியாண்டி செட்டியார், நாகூர்.
T. சேதுநாயடு சித்திரக்காரத் தெரு, மதுரை.
K. கணபதி, சாக்கோட்டை கும்பகோணம்.
மானேஜர், 'புதுவைமுரசு' புதுச்சேரி.
P. R. C. எல்லப்பன், மரக்கடை வியாபாரம், கொசததெரு, காஞ்சீபுரம்.
A. S. முருகேசம், பஜார் திண்டுக்கல்.
*T. சுப்ரமணியபிள்ளை, 3, செங்கல்வராய முதலி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.
A. R. M. சுந்தர பாண்டியன் கடைவீதி, அருப்புக்கோட்டை.
G. V. ராமசாமி பெரிய கடைவீதி, கரூர்.
*B. தங்கசாமி, டைலர் பெரிய கடைவீதி, கோயமுத்தூர்.
ஹாஜி முகமது ஷேக் உசேன், 57. சுண்ணாம்புக்காரத்தெரு, காரைக்கால்.
*M. ரத்னம், இரோசினுயில் டிபோ, நெல்லிக்குப்பம்.
K. N. தங்கவேலு, காரியதரிசி சமூகசீர்திருத்த சங்கம் கல்லிடைக்குறிச்சி.
C. S. ஜோசப் 159 கேவல்ரி ரோடு, பெங்களூர் Cant
S. ராமசாமி செங்குந்தர் தெரு, தாராபுரம்.
முத்துசாமி காடார் ஸ்கூல், பொறையார்.
P. S. ஜீவரத்னம் பிள்ளை, 2, மலையப்பதி, ஸ்லேவ்ஜலண்டு, கொழும்பு.
A. S. பரமசிவம் நியூஸ் ஏஜண்ட், பம்பலபிட்டியா, கொழும்பு.
எட்வர்ட்பால் திருமலாபுரம்
செல்வராய கவுண்டர் திருப்பத்தூர்.
S. அப்பாதுரை மண்டி, ராசிபுரம்.
M. N. M. பாவலர் நியூஸ் ஏஜண்ட், திருப்பாபுலியூர்.
சிதம்பரம்.
எம். கலியாணசுந்தர முதலியார் கதர்ஸ்டோர் மேலவீதி சாத்தான் குளம்.
பெரியசாமி காடார் ஷாப் வியாபாரம் பட்டுக்கோட்டை
கே. சாரங்கபாணி கொண்டப்பநாயடுபாளையம் ஸ்ரீவில்லிப்புத்தூர்.
பி. ஞானதேசிகம் மாயவரம். எம். கலியாணசுந்தர முதலியார் கதர்ஸ்டோர்,

* இந்த புள்ளியுள்ள வியாபாரிகளிடம் குடி அரசு பதிப்பாக புஸ்தகங்களும் கிடைக்கும்.

தீர்க்கண்ட நகரங்களிலுள்ள ஹிகின்பாதம் புஸ்தகசாலைகளில் குடி அரசு பிரதிகள் கிடைக்கும்.

காட்பாடி.
திருநெல்வேலி.
அரக்கோணம்.
சென்ரல் ஸ்டேஷன்.
மதுரை.
மாயவரம்.
நாகபட்டணம்,
சேலம்.
தஞ்சாவூர்.
பெளரிங்பெட்.
எக்மூர்.
ஜோலார்பேட்டை.
திருச்சி.
போத்தனூர்.
ஈரோடு.

வேற்றுமை விருக்ஷம் வேரோடு வீழ்க.

குடி அரசு வெளிநாட்டு ஏஜண்டுகள்

சிங்கப்பூர்.

Mhd. Dulfakir & Co.,
34, North Bridge Rd.
India Novel depot
73, Serangoon Road.
கோலாலம்பூர்.
R. S. Naidu,
86, Ampang St.
O. M. Ali Saiboo & Co,
27, Java Stree
The Selanger Stamp Co.,
Market Street
S. S. Abdulkadir,
South Indian Booookstore,
122, Pitty street, penang
Sorojini Vilas Coffee Club,
85: Paul Street,
Seramban N. S
The Central stores
61, Jalan Ibrahim,
Johore Bharu
C. Kandiah,
85, Sultan street, Klang.
S. G. Sami Agency,
3, Jalan roya,
Sungei Pattani
Kedah, F. M S

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'குமரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0

மாதப்பதிப்பு.

உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0

ஆசிரியர்: சோ. முருகப்பா.
விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0
ஆசிரியர்: கோ. சாரங்கபாணி
விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: S. குருசாமி B.A.
மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

'நாடார் குலமித்திரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு ,, 5—0—0
ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்
விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

'சண்டமாருதம்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: அ. பொன்னம்பலம்
மானேஜர், "சண்டமாருதம்"
கோட்டையூர்,
ராமனாதபுரம் ஜில்லா

சிங்கப்பூரில் குடி அரசு பதிப்பகப்புஸ்தகங்கள் கிடைக்குமிடம்.

"முன்னேற்றம்" ஆபீஸ்,
152, சிலிகி ரோட்,
சிங்கப்பூர்

சித்தர் பார்மஸி

விஷகடிகளினாலுண்டான ஜுரம் தடிப்பு பதத குணமடையும். 3 நாள் சாப்பிடும் விஷமை ரூ. 2. சூதபற்பம், நாட்பட்ட மயிற்று வலி, வாய்வு ரோகங்கள் 7 வேளையில் குணமடையும். ரூ. 3-8-0 கேட்லாக் இலவம்.

Dr. P. M.
சங்கரலிங்கம் பிள்ளை,
சோலிபட்டடி, S. I. R.

எழு தலைமுறைகளாய் கையாண்டனுபவம் வாய்ந்ததும், வைத்திய மகாநாடுகளிலும், கண்காட்சிகளிலும் மதிப்பு பெற்றதுமான சிறந்த ஔஷதங்கள் எங்களுடையது. எவ்வகை வியாதிக்கும் ஏற்றது. எல்லோராலும் புகழ்பெற்றது. உண்மையும் உத்திரவாதமுமான மருந்து.

நீங்கள் என்றுமழியாத இளப்பருவத்தை அடையவேண்டுமாலல் பழனி சி. எம். சாமி

மகா வீரிய தங்க பஸ்பம் சாப்பிடுங்கள்

தாதுபுஷ்டியில் மன்மதனுக்கோப்பாவீர்கள். பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்
வயோதிக தசையாலும், வாலிபபருவதுர்க் கிருத்தியங்களாலும் நீங்கள் இழந்த பலம், தாதுநஷ்டம், போகசக்திக்குறைவு, மனஉற்சாகம் இவைகளை திரும்பக்கொடுத்து, இல்லற ஒற்றுமை, வீரிய விர்த்தி முதலியவைகளைக் கொடுப்பதில் இணையற்றது. 24 நாள் பஸ்பம் விலை ரூ 10

தாதுபுஷ்டிக்கு மிக உயர்ந்தது
இதில் தங்கபஸ்பம் வைத்துச் சாப்பிடவாம் சேர் ரூ 15

காமரூபிலேகியம்

குருதாளக பஸ்பம்—இருமலுக்கு

காசம், சுவாசம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்ட தாயிருந்தாலும் சரி, 8-வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. 24 நாள் புட்டி 1க்கு ரூ, 8.

குருநாக பஸ்பம்—மூலத்திற்கு

ஆப்ரேஷன் அவசியமில்லை. மூலை தானே கரையும், கீழ்மூலம், ரத்தமூலம், சூத்தல், மூலமூலை மலபந்தம் முதலிய ஒன்பதும் அதிசீக்கிரத்தில் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி 1-க்கு ரூ. 4.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

மாதர்களுக்கு

இது தான் வேண்டியது

கோப்ப எண்ணெய்



மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனேநிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கோப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கோப்பம் உண்டாகும். மிக அநுபவமானது. புட்டி 1க்கு ரூ. 2

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன் பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மஹலயட்சுபசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S. I.

உண்மை விளக்கம் பத்திரிகையில் அச்சிடப்பட்டதேதுமதி நாகம்மாளால் வெளியிடப்பட்டது.